
# பாபாசாகேப்

# டாக்டர் அம்பேத்கர்

## நூல் தொகுப்பு :

தொகுதி 25




டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர் :

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு :

தொகுதி 25



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956

தீண்டாமை அடிமைத்தனத்தைவிட கொடுமையானது. ஏனென்றால் வாழ்க்கை சம்பந்தமான இந்தப் பாதுகாப்பை சமூகம் அளிப்பதில்லை. தீண்டப்படாதவர்களுக்கு உணவளிப்பது, குடியிருப்பு மற்றும் ஆடைகள் கொடுப்பது யாருடைய பொறுப்பும் அல்ல. இந்த நோக்கில் பார்த்தால் அடிமைத்தனத்தை விட தீண்டாமை கொடுமையானது மட்டுமல்ல, நிச்சயமாகக் கொடூரமானதுங்கூட எனலாம். அடிமை முறையில் தன்னுடைய அடிமைக்கு வேலை தேடித்தரும் பொறுப்பு எஜமானர்களுக்கு இருந்தது. சுதந்திரத் தொழிலாளர் அமைப்பு முறையில் வேலை கிடைப்பதற்காக தொழிலாளர் ஒருவருக்கொருவர் போட்டிபோட வேண்டியிருந்தது. இந்த வேலைக்கான போராட்டத்தில் தீண்டப்படாதவர்களுக்கு வாய்ப்புகள் உள்ளனவா? சொல்லப் போனால் இந்தப் போட்டியில் அவனுக்கு எதிராகவே நிலைமைகள் உள்ளன. அவன் பெற்றுள்ள சமுதாயக் களங்கத்தினால் கடைசியாக வேலைபெற்று முதலில் வேலையிலிருந்து தள்ளப்படுகிறான். தனது வாழ்வை நடத்த வருவாயின்றி வாழ்க்கையை நடத்த வேண்டிய பொறுப்பு தீண்டப்படாதவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதால், அது அடிமைத்தனத்தைவிட கொடூரமானதுதான்.

–டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்

'எது மிகவும் கொடுமையானது? அடிமைத்தனமா,
தீண்டாமையா?

This Volume XXV in Tamil forms the First part of the English EditionVolume 12 Part V & VI of Dr Babasaheb Ambedkar - Writings and Speeches-published by the Education Department, Government of Maharashtra, 1991.

முதல் பதிப்பு : 2001

© உரிமைப் பதிவு

விலை: ரூ.40/-

வெளியீட்டாளர்:

*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்*
*சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சகம்,*
*இந்திய அரசு,*
*15, ஜன்பத் சாலை,*
*புதுடில்லி.*

விற்பனை நிலையம்:

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,*
*41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர், சென்னை-98.*

அச்சிட்டோர்:

*பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*142, ஜானி ஜான் கான் ரோடு,*
*ராயப்பேட்டை, சென்னை-600 014.*
*தொலைபேசி·8532441, 8532973.*

# ஆலோசனைக்குழு

**திருமதி மேனகா காந்தி**
*சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சு -*
*இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு)*
*இந்திய அரசு*

**டாக்டர் பிந்தேஸ்வர் பாதக், பிஎச்.டி., டி.லிட்.,**
*செயல் துணைத் தலைவர்,*
*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,*
*புதுடில்லி*

**திரு. கிரிஷன்லால்**
*இயக்குநர்,*
*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,*
*புது டில்லி.*

*நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்) :*
**டாக்டர் எஸ். பெருமாள்,** எம் ஏ , எம பில் , பிஎச் டி ,
வேலூர், தமிழ்நாடு.

ஆங்கில நூல் தொகுப்பாளர் :

**திரு. வஸந்த் மூன்**
மும்பை

தமிழ் நூல் பதிப்பாளர் .

***டாக்டர் எஸ். பெருமாள்***

மொழிபெயர்ப்பாளர் .

***திரு. கே. நீலகண்டன்***

ஒப்புநோக்கியோர் ·

***திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)***
***திரு. அ. பிச்சையா (அசரீரி)***

பிழைதிருத்த உதவி:

***திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)***

# அணிந்துரை

மனிதர்கள் தமது ஆதிக்க பலத்தை நிலைநாட்டுவதற்கு வன்முறையை மேற்கொள்ள நேரிடுகின்றது. தமது பலத்தால் தங்களை எதிர்ப்பவர்களை வெற்றி கொண்டு ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்றனர். இதன் விளைவாகச் சமூகத்தில் அமைதி யின்மை ஏற்படுகின்றது. இதனாலேயே மக்கள் பலவகைப் பிரிவினராகப் பிரிந்து எண்ணற்ற சாதியினராயினர். மனிதர் கள் சிலபோது தமது அறிவுபலத்தாலும், செல்வ வளத் தாலும், அதிகார பலத்தாலும் தமது செல்வாக்கை நிலைநாட்ட முயல்கின்றனர். இதனால் சமூகத்தில் ஏழை, பணக்காரர், வசதிமிக்கவர், வசதியற்றவர், தூய்மையானவர், தூய்மை யற்றவர், அழகானவர்கள், விகாரமானவர்கள், பண்பட்ட வர்கள், பண்படாதவர்கள், உயர் சாதியினர், தாழ்ந்த சாதி யினர் என்னும் ஏற்றத்தாழ்வுகள் மலிந்தன. மக்களிடையே இத்தகைய வேறுபாடுகளால் இடைவெளி உள்ளவரையில் சமூக அமைதி என்பது ஏற்பட முடியாது.

இன்றளவும் இந்திய மக்கள் நால்வகை சாதியினராக பிரிந்துள்ளனர். இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி வருண முறையின் கட்டுக்கோப்பு நெகிழ்ந்துள்ள போதிலும், வேறுபாடுகள் முழுமையாக உடைத்தெறியப்படவில்லை. ஜனநாயக நெறிகளில் நம்பிக்கையுள்ளோர் இந்த சாதி முறையை நீக்கப் பெரிதும் பாடுபட வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் நூல்களின் தமிழாக்கம், படிப்போரைச் சிந்திக்க வைத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் புதியதொரு சமுதாயம் அமைவதற்கு உதவக் கூடியதாகும்.

நல்வாழ்த்துகள்!

(ஒப்பம்) மேனகா காந்தி
(திருமதி மேனகா காந்தி)
சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு
அமைச்சக இணை அமைச்சர்
(தனிப் பொறுப்பு), இந்திய அரசு

புதுடில்லி

# பொருளடக்கம்


பக்கம்

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் நினைவலைகள் 3

ஒன்று 5

இரண்டு 15

மூன்று 23

நான்கு 27

ஐந்து 31

ஆறு 33

பாகம் - VI

பலவகைக் குறிப்புகள் 39

1. பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் 43
2. நாடாளுமன்ற நடைமுறைகளைப் பற்றிய குறிப்புகள் 48
3 இந்திய வரலாறு பற்றிய குறிப்புகள் 59
4 மனுவும் சூத்திரர்களும் 72
5. சமூக அமைப்பைப் பாதுகாத்தல் 83
6. இந்துக்களுடன் 87
7 ஏமாற்றம் 89
8. அரசியலில் அடக்குமுறைப் பிரச்சினை 94
9. எது மிகவும் கொடுமையானது? அடிமைத்தனமா, தீண்டாமையா? 99

# ஒரு விசாவுக்காகக் காத்திருத்தல்

டாக்டா அம்பேத்கர் தாம் கைப்பட எழுதிய நினைவலை களிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன மக்கள் கல்விக் கழகத்தின் சேகரிப்பிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இக்கையெழுத்துப் பிரதி, அக்கழகத்தால் 1990 மார்ச் 19-ஆம் தேதி ஒரு சிறு புத்தகமாக வெளியிடப்பட்டது

- ஆசிரியா

# ஒரு விசாவுக்காகக் காத்திருத்தல்

தீண்டாமை வழக்கத்திலிருப்பதைப் பற்றி வெளிநாட்டவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் வெகுதொலைவில் வாழும் அவர்களுக்கு யதார்த்தத்தில், இது எவ்வளவு கொடூரமானது என்பதை உணரமுடிவதில்லை அதிக எண்ணிக்கையில் இந்துக்கள் வாழும் ஒரு கிராமத்தின் ஓரப்பகுதியிலே குடியிருக்கும் சில தீண்டத்தகாதவர்கள், தினந்தோறும் அந்த கிராமத்தின் மிக அருவருக்கத்தக்க கழிவுகளை அப்புறப்படுத்துவதையும், பலதரப்பட்டவர்களுக்கும் எடுபிடி வேலைகள் செய்வதையும், இந்துக்களின் வீட்டு வாசல்களில் நின்று உணவு பெற்றுக் கொள்வதையும், இந்து பனியாக்களின் கடைகளில் தூரத்தில் நின்று கொண்டு மளிகை சாமான்கள் மற்றும் எண்ணெய் வாங்குவதையும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த எவரையும் தீண்டாமலும் யாராலும் தீண்டப்படாமலும் இருப்பதையும், இருப்பினும் அந்தக் கிராமத்தை எல்லாவிதத்திலும் தங்களது சொந்த ஊராகக் கருதி எப்படி வாழ முடியும் என்பதையும் வெளி நாட்டவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. சாதி இந்துக்களால், தீண்டத்தகாதவர்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றிய சித்திரத்தை எப்படிச் சிறப்பாக அளிப்பது என்பதே பிரச்சினை. அவர்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றிய பொதுவான விளக்கம் அல்லது சம்பவக் குறிப்புகளை அளிப்பது என்ற இரு முறைகளால் இந்த விருப்பத்தை நிறைவேற்ற முடியும்; முதலில் குறிப்பிட்டதை விட பின்னால் குறிப் பிட்டதே மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். என் அனுபவத்திலிருந்து எடுக்கப்பட்ட சில நிகழ்ச்சிகளையும், பிறரது வாழ்க்கையில் ஏற்பட்டநிகழ்ச்சிகளையும் இதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளேன். என் சொந்த வாழ்க்கையில் நேர்ந்த சில நிகழ்ச்சிகளிலிருந்து ஆரம்பிக்கிறேன்.

# ஒன்று

பம்பாய் மாகாணத்தின் ரத்னகிரி மாவட்டத்தைச் சேர்ந்த டபோலி தாலுகாவிலிருந்து வந்துள்ளது எங்கள் குடும்பம். கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி ஆரம்பித்த நாளிலிருந்தே என் மூதாதையர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலை விட்டு விட்டு கம்பெனியின் ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினர். என் தகப்பனாரும் குடும்ப வழக்கப்படி ராணுவத்தில் சேர்ந்தார். அதிகாரி பதவி வரை உயர்ந்த அவர் சுபேதாராக ஓய்வு பெற்றார். ஓய்வுபெற்ற பிறகு என் தகப்பனார் டபோலியிலே நிரந்தரமாக தங்கிவிடுவது என்ற எண்ணத்துடன் குடும்பத்தை அங்கு இட்டுச் சென்றார். ஆனால் ஏதோ சில காரணங்களால் அவர் மனம் மாறியது. டபோலியிலிருந்து சதாராவுக்கு எங்கள் குடும்பம் சென்றது. நாங்கள் அங்கு 1904 வரை வாழ்ந்து வந்தோம் நான் இங்கு குறிப்பிடும், என் நினைவிலிருக்கும் முதல் நிகழ்ச்சி 1901 ஆம் ஆண்டு வாக்கில், சதாராவில் நாங்கள் இருந்தபோது நிகழ்ந்தது என் தாயார் அப்பொழுது உயிருடன் இல்லை சதாரா மாவட்டத்தின் கடாவ் தாலுகாவிலுள்ள கோரேகான் என்ற இடத்தில் காசாளராகப் பணியாற்ற என் தந்தையார் சென்றிருந்தார். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் மடிந்து கொண்டிருந்த மக்களுக்கு வேலை கொடுப்பதற்காக பம்பாய் அரசு அங்கே ஒரு பெரிய குளத்தை வெட்ட ஏற்பாடு செய்திருந்தது. என் தந்தையார் கோரேகானுக்குச் சென்றபோது, என்னையும் என் மூத்த சகோதரனையும், மறைந்த என் மூத்த சகோதரியின் இரு மகன்களையும் என் அத்தை மற்றும் சில நல்ல அண்டை வீட்டுக்காரர்களின் பராமரிப்பில் விட்டுச் சென்றார் என் அத்தை மிகவும் நல்ல மனம் படைத்தவர் என்பதை அறிவேன். ஆனால் அவரால் எங்களுக்கு எந்த பயனும் இல்லை, அவர் ஒரு மாதிரி குட்டையான உடல் அமைப்பைக் கொண்டவர். காலில் ஏதோ ஒரு கோளாறு இருந்ததால் யாராவது உதவினால்தான் நடமாட முடியும் என்ற நிலையில் இருந்தார். பல நேரங்களில் அவரைத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. எனக்குச் சகோதரிகள் இருந்தனர். திருமணமான அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் வேறு ஊர்களில் வசித்து வந்தனர். எங்கள் அத்தை தம் இயலாமையால் சமைக்க முடியாத நிலையில் இருந்ததால் உணவு தயாரிப்பது என்பது எங்களுக்குப் பிரச்சினையாக இருந்தது.

ஏனெனில், நாங்கள் நான்கு சிறுவர்களும் பள்ளிக்குச் சென்று வந்தவுடன் எங்கள் உணவையும் தயாரித்துக் கொண்டோம். எங்களால் ரொட்டி தயாரிக்க முடியாது, சோற்றையும் இறைச்சி யையும் கலந்து எளிய முறையில் தயாரிக்கக் கூடியதாக எங்க ளுக்குத் தோன்றிய, புலாவ் உணவில் நாங்கள் வாழ்ந்து வந்தோம்.

காசாளர் பொறுப்பில் இருந்ததால் எங்கள் தந்தையால் சதாராவுக்கு வந்து எங்களைச் சந்திக்க முடியவில்லை. எனவே கோடைவிடுமுறையை அவருடன் கழிக்க, எங்களை கோரே கானுக்கு வருமாறு அவர் எழுதியிருந்தார். இது, சிறுவர்களான எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. ஏனெனில் இதுவரை எங்களில் யாரும் ரயில் வண்டியைப் பார்த்ததில்லை.

பலத்த தயாரிப்புகள் நடந்தன பிரயாணத்துக்காக இங்கி லாந்தில் தயாரிக்கப்பட்ட புதிய சட்டைகள், புதிய பாத அணிகள், வேலைப்பாடுமிக்க தொப்பிகள், புத்தம் புதிய சரிகைக் கரை போட்ட வேட்டிகள் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எங்கள் பிரயாணத்தைக் குறித்து தந்தையார் எல்லா விவரங் களையும் எங்களுக்குக் கொடுத்திருந்ததுடன், எங்களை ரயில் நிலையத்தில் சந்தித்து கோரேகானுக்கு அழைத்துச் செல்ல அவரது வேலையாளை அனுப்புவதற்காக, நாங்கள் எந்த தேதியில் புறப் படுகிறோம் என்ற விவரத்தை எழுதச் சொல்லியிருந்தார். இந்த ஏற்பாட்டின்படி நான், என் அண்ணன், என் சகோதரிகளில் ஒருவருடைய மகன்கள் ஆகியோர் சதாராவுக்குப் புறப்பட்டுச் சென்றோம். என் அத்தையை, அண்டை வீட்டுக்காரர்கள் கவனித் துக் கொள்வதாக உறுதி அளித்ததால் அவர் அங்கேயே தங்கி யிருந்தார். எங்கள் இருப்பிடத்திலிருந்து ரயில் நிலையம் 10 மைல் தொலைவில் இருந்தது. ரயில் நிலையம் செல்ல ஒரு டோங்காவை (ஒற்றைக் குதிரை வண்டி) ஏற்பாடு செய்தோம். எங்கள் பிரிவால் ஏற்பட்ட துக்கத்தால், சோகத்தில் அனேகமாக கீழே சாய்ந்துவிட்ட என் அத்தையின் அழுகுரலுக்கு இடையே பிரயாணத்துக்காகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த புதிய ஆடைகளை அணிந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டோம்.

நாங்கள் ரயில் நிலையத்தை அடைந்தவுடன் என் அண்ணன் பிரயாணச் சீட்டு வாங்கி வந்தான்; எங்கள் விருப்பப்படி செலவு

செய்ய கைச் செலவுக்காக, எனக்கும் என் சகோதரியின் மகன்களுக்கும் ஆளுக்கு 2 அணா கொடுத்தான். உடனே உற்சாகமாக செயலில் இறங்கினோம். முதலாவதாக ஆளுக்கு ஒரு பாட்டில் எலுமிச்சம் பழபானம் வாங்கினோம். சிறிது நேரத்தில் ரயில் விசிலோசையுடன் நுழைந்தது. ரயிலைத் தவற விட்டுவிடுவோமோ என்ற பயத்தில் வேகவேகமாக ரயிலில் ஏறினோம். கோரேகானுக்குச் செல்ல, அதன் மிக அருகாமையிலுள்ள ரயில் நிலையமான மாசுரில் இறங்க வேண்டுமென்று எங்களுக்குக் கூறப்பட்டிருந்தது.

மாலை சுமார் 5 மணியளவில் ரயில் மாசுரை அடைந்தது. நாங்கள் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கினோம். சில நிமிடங்களில் ரயிலிலிருந்து இறங்கிய எல்லாப் பயணிகளும் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்றுவிட்டனர். எங்கள் தகப்பனாரோ அல்லது அவர் அனுப்புவதாகச் சொல்லியிருந்த வேலையாளோ வருவார் என்று நாங்கள் நான்கு சிறுவர்களும் பிளாட்பாரத்தில் காத்திருந்தோம். நீண்ட நேரம் காத்திருந்தும் யாரும் வரவில்லை ஒருமணி நேரம் கழிந்தபின் ரயில் நிலைய அதிகாரி வந்து விசாரித்தார். அவர் எங்களிடம் பிரயாணச் சீட்டைக் கேட்டார். அவற்றை அவருக்குக் காண்பித்தோம். நாங்கள் ஏன் அங்கே காத்திருக்கிறோம் என்று அவர் கேட்டார். நாங்கள் கோரேகானுக்குப் போக வேண்டியதையும், எங்கள் தகப்பனாரோ அல்லது அவர் அனுப்புவதாகக் கூறிய வேலையாளோ வரவில்லை என்பதையும், எங்களுக்குக் கோரேகானுக்கு எப்படிப் போவது என்பது தெரியாது என்பதையும் அவரிடம் விளக்கினோம். நாங்கள் நன்கு ஆடையணிந்த சிறுவர்களாக இருந்தோம். எங்களின் உடையிலிருந்தோ எங்களின் பேச்சிலிருந்தோ நாங்கள் தீண்டத்தகாத சிறுவர்கள் என்று யாரும் கண்டுபிடித்துவிட முடியாது. நாங்கள் பிராமணச் சிறுவர்கள்தான் என்று ரயில் நிலைய அதிகாரி உண்மையிலேயே நம்பி, நாங்கள் இருந்த நிலையைக் கண்டு மிகவும் வேதனை அடைந்தார். இந்துக்களின் வழக்கப்படி நாங்கள் யாரென்று கேட்டார், ரயில் நிலைய அதிகாரி. ஒரு நிமிடம்கூடத் தாமதியாது, நாங்கள் மஹர்கள் என்று நான் உளறிவிட்டேன் (பம்பாய் மாகாணத்தில் தீண்டத்தகாதவர்கள் சாதியில் ஒன்றுதான் மஹர் சாதி). அவர் திடுக்கிட்டுப் போனார். அவர் முகத்தில் திடீர் மாற்றம் தோன்றியது. ஒரு விசித்திரமான அருவருப்பு உணர்வு, அவரைத் தாக்கியதாக எங்களுக்கு தோன்றியது. என்னுடைய பதிலைக் கேட்டவுடன் அவர் தமது அறைக்குச் சென்று

விட்டார் நாங்கள் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தோம். பதினைந்திலிருந்து இருபது நிமிடங்கள் கழிந்தன சூரியன் அநேகமாக மறைந்துவிட்டது தகப்பனாரும் வரவில்லை, அவர் அனுப்புவதாகக் கூறிய வேலையாளையும் காணோம். ரயில் நிலைய அதிகாரியும் எங்களை விட்டுப் போய்விட்டார். பிரயாண ஆரம்பத்தில் இருந்த குதூகலமும் மகிழ்ச்சியும் மறைந்து மிகுந்த சோகத்திற்கும் குழப்பத்திற்கும் ஆளானோம்.

அரைமணி நேரம் கழிந்த பிறகு ரயில் நிலைய அதிகாரி வந்து நாங்கள் என்ன செய்வதாக உத்தேசித்துள்ளோம் என்று கேட்டார் வாடகைக்கு மாட்டு வண்டி கிடைக்குமானால், கோரேகானுக்கு புறப்படத் தயாராக இருபபதாகக் கூறினோம மேலும் அது வெகுதூரத்தில் இல்லை என்றால் உடனேயே புறப்படலாம் என்றோம் அங்கே வாடகைக்குப் பல வண்டிகள் இருந்தன நாங்கள் மஹர்கள் என்று ரயில நிலைய அதிகாரிக்கு நான் சொன்ன பதில் வண்டிக்காரர்களைச் சென்றடைந்து விட்டது. அவர்களில் யாரும் தீட்டுப்படத் தயாராக இல்லை அத்துடன் தீண்டத்தகாதவர்களைப் பயணிகளாக ஏற்றிச் செல்வதன் மூலம் தங்களைத் தாழ்த்திக் கொள்ளவும் விரும்பவில்லை. நாங்கள் இருமடங்கு வாடகை கொடுக்க முன்வந்தும், பணத்தால் பலன் ஒன்றும் இல்லை என்பதைக் கண்டோம். எங்களுக்காகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ரயில் நிலைய அதிகாரி என்ன செய்வதென்று தெரியாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தார் திடீரென்று அவருக்கு ஏதோ ஒரு சிந்தனை உதயமானது போலத் தோன்றியது. ''உங்களுக்கு வண்டி ஓட்டத் தெரியுமா?'' என்று ரயில நிலைய அதிகாரி எங்களிடம் கேட்டார். எங்களுடைய கஷ்டங்களுக்கு ஒரு தீர்வு அவருக்குக் கிடைத்து விட்டது என்று உணர்நத நாங்கள் உரத்த குரலில் ''ஓ, தெரியும்'' என்று கூறினோம். நாங்கள் வண்டிக்காரருக்கு இரு மடங்கு வாடகை கொடுப்போமென்றும், நாங்களே வண்டியை ஓட்டிச் செலவோமென்றும், வண்டிக்காரன் எங்கள் பிரயாணத்தின் போது வண்டியுடன் நடந்து வரவேண்டுமென்றும் எங்கள் சார்பாக அவர்களிடம் அவர் பேரம் பேசினார். தனக்கு வாடகை கிடைப்பதுடன் தீட்டுப்படுவதிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது என்று கருதிய ஒரு வண்டிக்காரன் இதற்கு ஒத்துக் கொண்டான்.

நாங்கள் புறப்படத் தயாரானபோது மாலை 6.30 ஆகிவிட்டது இருட்டுக்கு முன்பு கோரேகானை அடைந்துவிடுவோம் என்பதை

நிச்சயப்படுத்திக் கொள்ளாமல் ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட நாங்கள் விரும்பவில்லை. எனவே கோரேகான் சேர அவனுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதையும், எவ்வளவு தூரத்தில் அது இருக்கிறது என்பதையும் அவனிடம் கேட்டோம். மூன்று மணி நேரத்துக்கு அதிகம் பிடிக்காது என்று அவன் உறுதியளித்தான். அவனுடைய சொற்களை நம்பி எங்களுடைய சாமான்களை வண்டியில் ஏற்றினோம். ரயில் நிலைய அதிகாரிக்கு நன்றி சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டோம். எங்களில் ஒருவன் மூக்கணாங் கயிற்றை எடுத்துக் கொள்ள வண்டி புறப்பட்டது. வண்டிக்காரன் அதைத் தொடர்ந்து நடந்து வந்தான்.

ரயில் நிலையத்துக்கு அருகே ஓர் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்குமிங்குமாக சிறு தண்ணீர்க் குட்டைகள் உள்ள பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் மிகவும் வறண்டு கிடந்தது. வழியில் தண்ணீர் கிடைக்காமல் போகக்கூடும் என்பதால் அங்கேயே தங்கி எங்கள் சாப்பாட்டை முடித்துக் கொள்ள வேண்டுமென்று வண்டிக்காரன் யோசனை கூறினான். நாங்கள் சம்மதம் தெரிவித்தோம். கிராமத்துக்குச் சென்று சாப்பிட்டுவர வாடகையில் ஒரு பகுதியை அவன் எங்களிடம் கேட்டான். என் சகோதரன் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தவுடன் விரைவில் திரும்பிவந்து விடுவதாகக் கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான். எங்களுக்கு மிகவும் பசியாக இருந்ததால் சாப்பிடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். எங்கள் அண்டை வீட்டுப் பெண்மணிகளின் உதவியுடன் அத்தை பிரயாணத்துக்காக நல்ல உணவு வகைகளைத் தயாரித்துக் கொடுத்திருந்தார். உணவுக் கூடைகளைத் திறந்து சாப்பிட ஆரம்பித்தோம். கைகழுவுவதற்கு எங்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டது அருகிலுள்ள ஆற்றங்கரைப் படுகையில் இருந்த தண்ணீர் குட்டைக்கு எங்களில் ஒருவன் சென்றான். ஆனால் அந்தத் தண்ணீர் உண்மையிலே தண்ணீரே இல்லை நீர் குடிக்கச் செல்லும் எருமைகள் மற்றும் கன்றுகாலிகளின் சாணங்களும் மூத்திரங்களும் கலந்து அது சேறும் சகதியுமாகயிருந்தது. அந்தத் தண்ணீர் மனித உபயோகத்துக்கு லாயக்கற்றது. எங்களால் குடிக்க முடியாத அளவிற்குத் தண்ணீர் பயங்கர நாற்றமடித்தது. நாங்கள் திருப்தி இல்லாமல் அரைகுறையாக சாப்பாட்டை முடித்துக் கொண்டு வண்டிக்காரனுக்காகக் காத்திருந்தோம். நீண்டநேரமாக அவனைக் காணவில்லை. நாங்கள் செய்ய முடிந்ததெல்லாம், எல்லாத் திசை

களிலும் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுதான், கடைசியில் அவன் வந்தவுடன் நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். ஒரு நாலைந்து மைல்களுக்கு நாங்கள் வண்டி ஓட்டிச் செல்ல, அவன் நடந்து வந்து கொண்டிருந்தான் திடீரென்று வண்டிக்குள்ளே குதித்து எங்களிடமிருந்து மூக்கணாங் கயிற்றை வாங்கிக் கொண்டான். தீட்டுப்பட்டு விடுமோ என்ற பயத்தில் எங்களுக்கு வாடகைக்கு வண்டியைக் கொடுக்க மறுத்தவன், தன்னுடைய மதப் பண்பாட்டை ஒதுக்கி வைத்துவிட்டு எங்களுடன் ஒரே வண்டியில் உட்காரும் அளவுக்கு அவன் மனம் மாறிவிட்டது போல் அந்த மனிதனிடம் ஏற்பட்ட ஒரு விசித்திரமான நடத்தையாக அது எங்களுக்குத் தோன்றியது. அந்த வேளையில் அவனிடம் எந்தக் கேள்வியையும் கேட்க எங்களுக்குத் தைரியம் வரவில்லை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நாங்கள் செல்ல வேண்டிய இடமான கோரேகானை அடைவதிலேதான் நாங்கள் ஆவலாக இருந்தோம் சிறிதுநேரம் வண்டியின் ஓட்டத்திலே மூழ்கியிருந்தோம். ஆனால் விரைவில் எங்களைச் சுற்றி இருள் கவ்வியது. இந்த இருளை விலக்க தெரு விளக்குகள் இல்லை மனித நடமாட்டத்திற்கு மத்தியில் நாங்களும் இருக்கிறோம் என்ற தைரியத்தை அளிக்க ஆண்களோ அல்லது பெண்களோ ஏன் கன்றுகாலிகளோ கூட எங்களைக் கடந்து செல்லவில்லை. எங்களைச் சூழ்ந்திருந்த தனிமை எங்களைப் பயமுறுத்தியது. எங்கள் கவலை அதிகரித்தது. எங்களால் முடிந்த அளவு தைரியமாக இருந்தோம் மாசுரிலிருந்து வெகுதூரம் பயணம் செய்து விட்டோம். மூன்றுமணி நேரத்துக்கும் மேலாகிவிட்டது. எனினும் கோரேகானை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கான எந்தவித அடையாளமும் காணப்படவில்லை. எங்கள் உள்ளத்தில் ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றியது. அந்த வண்டிக்காரன் நம்பிக்கைத் துரோகம் செய்கிறானோ, எங்களைக் கொல்வதற்காக ஆளில்லாத இடத்திற்குக் கொண்டு செல்கிறானோ என்ற சந்தேகம் எழுந்தது. நாங்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள் இந்த சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தின. கோரேகான் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, அங்கே போவதற்கு ஏன் இவ்வளவு தாமதமாகிறது என்று அவனைக் கேட்கத் தொடங்கினோம். ''அது வெகுதூரத்தில் இல்லை, வெகு விரைவில் அதை அடைவோம்'' என்று கூறிக் கொண்டிருந்தான். இரவு சுமார் பத்து மணியாகியும் கோரேகானை நெருங்கிவிட்டதற்கான எந்த அடையாளமும் காணப்படாததால் நாங்கள் சிறுவர்கள் அழ ஆரம்பித்

தோம். வண்டிக்காரனைத் திட்டினோம். நீண்டநேரம் எங்களுடைய அழுகையும் முனகலும் தொடர்ந்தன. வண்டிக்காரன் எந்தப் பதிலும் அளிக்கவில்லை சிறிது தூரத்தில் விளக்கொளி தோன்றுவதை திடீரென்று கண்டோம். ''அதோ அந்த வெளிச்சத்தைக் காண்கிறீர்களா?'' என்று வண்டிக்காரன் கேட்டான். ''அது சுங்கச் சாவடியிலிருந்து வரும் வெளிச்சம், இரவு நாம் அங்கு தங்குவோம்'' என்றான். எங்களுக்குச் சிறிது ஆறுதலாக இருந்ததால் நாங்கள் அழுவதை நிறுத்திக் கொண்டோம். தூரத்திலிருந்த வெளிச்சத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்று தோன்றவில்லை. சுங்கத் தண்டலரின் குடிசையை அடைவதற்கு எங்களுக்கு இரண்டு மணி நேரம் பிடித்தது. இந்த இடைவெளிநேரம் எங்களது கவலையை அதிகரித்தது. அந்த இடத்தை அடைவதற்கு ஏன் இவ்வளவு தாமதமாகிறது, நாம் சரியான சாலையிலேதான் சென்று கொண்டிருக்கிறோமா என்று வண்டிக்காரனிடம் பல கேள்விகளைத் தொடுத்துக் கொண்டே இருந்தோம்.

கடைசியாக நடுநிசியில் வண்டி சுங்கத் தண்டலரின் குடிசையை வந்தடைந்தது. அது குன்றின் மறுபக்கத்தில் தாழ்வுப் பகுதியில் இருந்தது. அங்கு வந்தடைந்தபோது பல வண்டிகள் இரவைக் கழிக்க அங்கே இருப்பதைக் கண்டோம். எங்களுக்குப் பசி அதிகமாக இருந்ததால் உணவு உட்கொள்ள ஆசைப்பட்டோம். ஆனால் மீண்டும் தண்ணீர் பிரச்சினை எழுந்தது. தண்ணீர் கிடைப்பதற்குச் சாத்தியம் இருக்கிறதா என்று எங்கள் வண்டிக்காரனைக் கேட்டோம். நாங்கள் மஹர் என்ற உண்மையை இந்துவான சுங்க தண்டலரிடம் சொன்னால் எங்களுக்குத் தண்ணீர் கிடைக்காது என்று வண்டிக்காரன் எங்களை எச்சரித்தான். ''முகமதியர்கள் என்று கூறுங்கள், உங்கள் அதிர்ஷ்டத்தைப் பார்க்கலாம்'' என்றான் அவன். அந்த யோசனையின்படி நான் சுங்கத் தண்டலரிடம் போய் எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் தரமுடியுமா என்று கேட்டேன். ''நீ யார்?'' என்று அவர் கேட்டார். நாங்கள் முஸ்லீம்கள் என்று பதிலளித்தேன் முஸ்லீம் என்பதைப் பற்றி சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக எனக்கு நன்கு தெரிந்த உருதுமொழியில் பேசினேன். ஆனால் இந்தத் தந்திரம் பலிக்கவில்லை அவர் நறுக்குத் தெறித்தாற் போல் பதிலளித்தார்: ''உங்களுக்கு யார் இங்கே தண்ணீர் வைத்திருக்கிறார்கள்? அந்தக் குன்றிலே தண்ணீர் இருக்கிறது, வேண்டுமென்றால் போய் எடுத்துக் கொள். என்னிடம் ஒன்றும் இல்லை.'' இதைக்

கூறி என்னை அனுப்பிவிட்டார். வண்டிக்கு திரும்பிவந்து அவருடைய பதிலை அண்ணனிடம் கூறினேன். என் அண்ணன் என்ன நினைத்தானோ எனக்குத் தெரியாது, எங்களைக் கீழே படுங்கள் என்று மட்டும் சொன்னான்.

காளைகளை நுகத்தடியிலிருந்து அவிழ்த்துவிட்டு வண்டி தரையில் சாய்வாக நிறுத்தப்பட்டது வண்டியின் உள்ளே இருந்த அடிப்பலகையில் படுக்கையை விரித்து படுத்துக் கொண்டோம். பத்திரமான இடத்துக்கு வந்து சேர்ந்ததால் என்ன நடந்தது என்பதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இதுவரை நடந்த நிகழ்ச்சிகளை எங்கள் மனம் அசைப்போட்டுக் கொண்டே இருந்தது. எங்களிடம் ஏராளமாக உணவுப் பொருள்கள் இருந்தன. பசியால் வயிறு 'கபகப' என்று எரிந்து கொண்டிருந்தது. இருந்தும் உணவு உட்கொள்ளாமல் தூங்கச் செல்ல வேண்டியிருந்தது. ஏனென்றால் தண்ணீர் கிடைக்காததால் இந்த நிலைமை. நாங்கள் தீண்டத்தகாதவர்களாக இருந்ததால் எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. இதுதான் எங்கள் மனத்தில் பதிந்த கடைசிச் சிந்தனை. பத்திரமான இடத்தை அடைந்துவிட்டோம் என்று நான் சொன்னேன் ஆனால் என் அண்ணனுக்கு அதில் அவ்வளவு நம்பிக்கை இல்லை. நாங்கள் நான்கு பேரும் தூங்க செல்வது அவ்வளவு புத்திசாலித்தனமானது அல்ல என்று அவன் கூறினான். என்ன வேண்டுமானாலும் நிகழக் கூடும். ஒரு நேரத்தில் இரண்டு பேர் தூங்க வேண்டுமென்றும், இருவர் காவல் காக்க வேண்டுமென்றும் அவன் யோசனை கூறினான். அந்தக் குன்றின் தாழ்வாரத்தில் நாங்கள் இரவைக் கழித்தோம்.

காலை 5 மணிக்கே எங்கள் வண்டிக்காரன் வந்து கோரேகானுக்குப் புறப்படலாம் என்று கூறினான். நாங்கள் தீர்மானமாக அதை மறுத்துவிட்டோம். 8 மணிக்கு முன்பு அசையமாட்டோம் என்று கூறிவிட்டோம். எந்தவித எதிர்பாராத சோதனைகளையும் சந்திக்க நாங்கள் விரும்பவில்லை. அவன் பதில் எதுவும் பேசவில்லை. எனவே 8 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் 11 மணிக்கு கோரேகானை அடைந்தோம். எங்கள் வருகையைப் பற்றி எந்த விதத் தகவலும் கிடைக்கவில்லை என்று கூறி, எங்களைக் கண்டு தகப்பனார் ஆச்சரியப்பட்டார். நாங்கள் தகவல் அனுப்பினோம் என்று கூறி ஆட்சேபித்தோம். அவர் அதை மறுத்தார் பிறகு அது என் தகப்பனாரின் வேலையாளின் தவறு என்று கண்டுபிடிக்கப்

பட்டது. எங்கள் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட அவன், அதை என் தகப்பனாரிடம் சேர்ப்பிக்கத் தவறிவிட்டான்.

இந்த நிகழ்ச்சி எனது வாழ்வில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. அது நிகழ்ந்தபோது எனக்கு ஒன்பது வயது. ஆனால் அது என் மனத்தில் ஓர் அழியாத தழும்பை ஏற்படுத்திவிட்டது. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்புகூட நான் தீண்டத்தகாதவன், தீண்டத்தகாதவர்கள் சில அவமானங்களுக்கும் அவமதிப்புகளுக் கும், பாகுபாடுகளுக்கும் உட்பட்டவர்கள் என்பதை அறிவேன். உதாரணமாக, பள்ளியில் எனது வகுப்பு மாணவர்களிடையே எனது தகுதி வரிசைப்படி நான் உட்காரக்கூடாது, ஒரு மூலையில் தனியாகத் தான் உட்கார வேண்டும். வகுப்பில் நான் உட்காருவதற்காக என்னிடம் தனியாக ஒரு சாக்குத் துணி இருக்கும். பள்ளியைச் சுத்தம் செய்யும் வேலைக்காரன் நான் உபயோகித்த சாக்குத் துணியைத் தொடமாட்டான். அந்தச் சாக்குத்துணியை மாலையில் வீட்டுக் குக் கொண்டு சென்றுவிட்டு, மறுநாள் காலையில் திரும்பவும் பள்ளிக்குக் கொண்டு செல்ல வேண்டும். தீண்டத்தக்கவர்களின் குழந்தைகள் பள்ளியில் இருக்கும்போது தாகம் ஏற்பட்டால் தண்ணீர் குழாய்க்குச் சென்று குழாயைத் திறந்து தங்கள் தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியும். இதற்கு வேண்டியதெல்லாம் ஆசிரியருடைய அனுமதி மட்டுந்தான். ஆனால் என்னுடைய நிலைமை மாறானது. யாராவது தீண்டத்தக்கவர்கள் குழாயைத் திறக்காவிட்டால் நான் குழாயைத் தொடமுடியாது, எனது தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியாது. என்னைப் பொறுத்தமட்டில் ஆசிரியரின் அனுமதி மட்டும் போதாது. பள்ளிக்கூடப் பணியாளும் இருக்க வேண்டும். ஏனென் றால் இந்த மாதிரி வேலைகளுக்கு அவனைத்தான் ஆசிரியர் பயன் படுத்தி வந்தார். பணியாள் எங்கேயாவது சென்றிருந்தால் எனக்குத் தண்ணீர் கிடைக்காது. நிலைமையைச் சுருக்கமாக இப்படிக் கூற முடியும். பணியாள் இல்லை என்றால் தண்ணீரும் இல்லை. வீட்டில் என் சகோதரிகள்தான் துணிகளை துவைத்துச் சலவை செய்து வந்தனர். சதாராவில் சலவைத் தொழிலாளர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. சலவையாளர்களுக்குப் பணம் கொடுக்க சக்தி யற்றவர்களும் அல்ல நாங்கள். ஆனால் நாங்கள் தீண்டத்தகாத வர்கள் என்பதால்தான் என் சகோதரிகள் துணிகளைச் சலவை செய்ய வேண்டிய நிலை இருந்தது, எந்த ஒரு சலவையாளரும்

தீண்டத்தகாதவர்களின் துணியைச் சலவை செய்ய முன்வர மாட்டார். என் மூத்த சகோதரிதான் எங்களுக்கு முடிவெட்டவும், சவரம் செய்யவும் செய்தார். எங்களுக்கு முடிவெட்டுவதன் மூலம் அவர் ஒரு கைதேர்ந்த முடிதிருத்துபவர் ஆகிவிட்டார் முடிதிருத்தும் தொழிலாளிகள் சதாராவில் இருக்கத்தான் செய்தனர், அவர்களுக்குக் கொடுக்கப் பணமும் எங்களிடம் இருக்கத்தான் செய்தது. ஆனால் அந்த முடிதிருத்துபவர்கள் தீண்டத்தகாதவர்களுக்கு முடிதிருத்த சம்மதிக்க மாட்டார்கள் இவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் நான் விவரித்த நிகழ்ச்சி இதுவரை அனுபவிக்காத அதிர்ச்சியை எனக்கு அளித்தது. இந்த நிகழ்ச்சிக்கு முன்பு தீண்டத்தக்கவர்களும் தீண்டத்தகாதவர்களும் இருந்து வருவது சாதாரணமான ஒரு விஷயம்தான் என்று எண்ணியிருந்த நான் தீண்டாமையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்.

# இரண்டு

1916ல் நான் இந்தியாவுக்குத் திரும்பினேன் மேன்மை தங்கிய பரோடா அரசர் மேற்படிப்புக்காக என்னை அமெரிக்காவுக்கு அனுப்பியிருந்தார். நியூயார்க்கில் உள்ள கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் நான் 1913லிருந்து 1917 வரை படித்தேன். 1917ல் லண்டன் வந்தேன். அங்கு லண்டன் பல்கலைக்கழகப் பொருளாதாரக் கல்லூரியின் முதுநிலைப் பட்டப் படிப்பில் சேர்ந்தேன் 1918ல் படிப்பை முடிக்க முடியாமல் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டி வந்தது. பரோடா அரசின் உதவியால் கல்வி பெற்றதால் அந்த அரசுக்குச் சேவை செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. எனவே நான் வந்தவுடன் நேராக பரோடாவுக்குச் சென்றேன். ஆனால் நான் பரோடாவில் பணி செய்வதை ஏன் விட்டுச் சென்றேன் என்பது இப்பொழுது நான் எடுத்துக் கொண்ட விஷயத்துக்குச் சம்பந்தமில்லாதது. எனவே நான் அந்த விஷயத்திற்குள் செல்லப் போவதில்லை. என்னை மிகவும் சிந்திக்கத் தூண்டியது பரோடாவில் எனக்கு நேர்ந்த சமூக அனுபவங்கள்தான், எனவே அவற்றை மட்டும் விளக்குவதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஐந்தாண்டுக் காலம் தங்கியிருந்தேன். நான் தீண்டத்தகாதவன் என்பதையும், இந்தியாவில் ஒரு தீண்டத்தகாதவன் எங்கு சென்றாலும் அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கும் என்ற உணர்வு இந்த ஐந்தாண்டுக் காலத்தில் என் மனதிலிருந்து முற்றிலும் மறைந்திருந்தது. ஆனால் ரயில் நிலையத்திலிருந்து வெளியே வந்தவுடன் என்னை மிகவும் வாட்டியது ஒரு கேள்விதான்: ''எங்கே போவது? யார் என்னை ஏற்றுக் கொள்வார்கள்?'' நான் மிகவும் அமைதியற்று இருந்தேன். அங்கே விஷிஸ் என்ற இந்து ஓட்டல்கள் இருப்பது எனக்குத் தெரியும். அவர்கள் என்னை அனுமதிக்க மாட்டார்கள். ஆள்மாறாட்டம் செய்வதே அங்கு தங்கும் இடவசதி பெற உள்ள ஒரே வழியாகத் தெரிந்தது. அதற்கு நான் தயாரில்லை. ஏனெனில் என்னைக் கண்டுபிடித்துவிட்டால் அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளை நான் அறிவேன். என்னை நிச்சயம் கண்டு பிடித்து விடுவார்கள் அமெரிக்காவில் கல்வி கற்க வந்த என் நண்பர்கள் பரோடாவில் இருந்தார்கள். ''நான் அவர்களிடம்

சென்றால் என்னை வரவேற்பார்களா?'' என்னால் உறுதியாகக் கூறமுடியாது அவர்கள் என்னைத் தங்கள் வீட்டிற்குள் அனுமதிப் பதன் மூலம் அவர்களுக்குத் தர்மசங்கடமான நிலை ஏற்படும் ரயில் நிலையத்தின் கூரையின் கீழ் நின்று கொண்டு எங்கே போவது, என்ன செய்வது என்பதைப் பற்றி சிறிது நேரம் சிந்தித்தேன் முகாமில் ஏதாவது இடம் கிடைக்குமா என்ற கேள்வி திடீரென்று தோன்றியது. இதற்குள் எல்லாப் பயணிகளும் போய்விட்டார் கள். நான் மட்டும்தான் எஞ்சியிருந்தேன். சவாரி கிடைக்காத சில வாடகைக் குதிரை வண்டிக்காரர்கள் என்னை நோட்டமிட்டுக் கொண்டு எனக்காகக் காத்திருந்தார்கள் அவர்களில் ஒருவனை அழைத்து முகாமில் ஏதாவது ஓட்டல் இருக்கிறதா என்று கேட் டேன் அங்கே ஒரு பார்சி பயணிகள் விடுதி இருப்பதையும் அங்கு பணம் செலுத்தி தங்குவதையும் பற்றி அவன் கூறினான். அந்தப் பயணிகள் விடுதி பார்சிகளால் நிர்வகிக்கப்படுவதைக் கேட்டு என் மனம் மகிழ்ச்சி அடைந்தது. பார்சி மக்கள் ஜொராஸ்டிர மதத்தைப் பின்பற்றுபவர்கள். என்னை அவர்கள் தீண்டத்தகாத வனாக நடத்துவார்கள் என்ற பயமில்லை ஏனெனில் அவர்கள் மதம் தீண்டாமையை ஏற்றுக் கொள்ளவில்லை. நம்பிக்கையால் மகிழ்வுற்ற இதயத்துடனும் தைரியமான மனத்துடனும் என் னுடைய சாமான்களைக் குதிரை வண்டியில் ஏற்றி முகாமில் உள்ள பார்சி பயணிகள் விடுதிக்குச் செல்லுமாறு கூறினேன்.

அந்தப் பயணிகள் விடுதி ஒரு இரு மாடிக் கட்டடம். ஒரு வயதான பார்சிக்காரர் தமது குடும்பத்துடன் கீழ்த்தளத்தில் வசித்துவந்தார். அவர்தான் அதன் காப்பாளராக இருந்தார். அங்கு வந்து தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு அளித்து வந்தார். வண்டி வந்து சேர்ந்தவுடன் பார்சி காப்பாளர் மேல்மாடியைக் காட்டினார். வண்டிக்காரன் சாமான்களை மேலே கொண்டு வைக்க, நான் மேலே சென்றேன். அவன் பணத்தை வாங்கிக் கொண்டு சென்று விட்டான். தங்குவதற்கு ஓர் இடத்தைப் பிடிக்க வேண்டுமென்ற எனது பிரச்சினைக்குத் தீர்வுகண்டதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். சிறிது இளைப்பாறும் எண்ணத்துடன் என் மேலாடைகளைக் களைந் தேன். இதற்கிடையில் தன் கையில் ஒரு புத்தகத்துடன் காப்பாளர் வந்தார். மேலாடைகளைக் களைந்த என் தோற்றத்தைப் பார்த்த அவர் நான் ஒரு பார்சி என்பதை அடையாளம் காட்டும் சத்ராவோ காஸ்தியோ இல்லாததைக் கண்டு கடுமையான குரலில் நீ யார்

என்று கேட்டார். அந்தப் பயணிகள் விடுதி, பார்சிகளால் பார்சிகளுக்காக நடத்தப்படுவதை அறியாது, நான் ஒரு இந்து என்று கூறினேன். பதறிப்போன அவர் என்னை அங்கே தங்கக்கூடாது என்று கூறிவிட்டார். அவருடைய பதில் என்னை முற்றிலும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. உடலெல்லாம் சில்லிட்டது எங்கே போவது என்ற கேள்வி மீண்டும் எழுந்தது மனத்தைத் தேற்றிக் கொண்டு இந்துவாக இருந்தாலும் அவருக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் அங்கேயே தங்குகிறேன் என்று கூறினேன். எப்படி முடியும்? என்று அவர் கேட்டார் ''இங்கு தங்குபவர்கள் எல்லோரையும் குறித்து இந்தப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.'' அவருடைய கஷ்டம் எனக்குப் புரிந்தது பதிவேட்டில் குறிப்பதற்கு நான் ஒரு பார்சிப் பெயரை எடுத்துக் கொள்ள முடியும். ''நான் ஆட்சேபிக்காத போது நீங்கள் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்? உங்களுக்கு எந்த இழப்பும் இல்லை. நான் இங்கே தங்கினால் உங்களுக்கு ஏதாவது வருமானம் கிடைக்கும்'' என்றேன் நான். இதற்குச் சாதகமாக அவர் இருப்பது போல எனக்குத் தோன்றிற்று. பல நாட்களாகச் சுற்றுலாப் பயணிகள் வரவில்லை என்பது தெரிந்தது. கொஞ்சம் வருமானம் கிடைக்கும் வாய்ப்பை நழுவவிட அவர் தயார் இல்லை என்பதும் புரிந்தது. நாள் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் தங்குவதற்கும் சாப்பாட்டிற்கும் கொடுத்து ஒரு பார்சி பெயரில் என்னைப் பதிவேட்டில் பதிவுசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் அவர் சம்மதித்தார். அவர் கீழே இறங்கிச் சென்றவுடன் நான் நிம்மதிப் பெருமூச்சுவிட்டேன். பிரச்சினை தீர்ந்ததால் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் என்ன பரிதாபம்! இந்த மகிழ்ச்சி இவ்வளவு அற்பாயுசானது என்று எனக்கு அப்போது தெரியாது ஆனால் இந்தப் பயணிகள் விடுதியில் நான் தங்கியதின் சோகமுடிவை விளக்குவதற்கு முன்பு நான் அங்கே தங்கியிருந்த சிறிது காலத்தில் எப்படி எனது நேரத்தைக் கழித்தேன் என்பதை விளக்க வேண்டும். பயணிகள் விடுதியின் முதலாவது மாடியில் ஒரு சிறு படுக்கை அறையும் அதை ஒட்டி தண்ணீர் குழாயுடன் கூடிய சிறிய குளியல் அறையும் இருந்தன எஞ்சியது ஒரு பெரிய கூடம்தான். நான் தங்கியிருந்தபோது அந்தப் பெரிய கூடத்தில் எல்லாவிதமான குப்பை கூளங்களும், மரப்பலகைகளும், பெஞ்சுகளும் உடைந்த நாற்காலிகளும் இருந்தன. இந்தச் சூழ்நிலைகளின் மத்தியில் தனியாளாக அங்கு தங்கியிருந்தேன். காலையில் ஒரு கோப்பை தேநீருடன் காப்பாளர் மேலே வருவார். மீண்டும் 9.30 மணிக்கு எனக்குக் காலைச் சிற்றுண்டி அல்லது காலைச் சாப்பாடு கொண்டு வருவார்.

மூன்றாவது தடவை இரவு 8.30 மணிக்கு இரவு சாப்பாடு கொண்டு வருவார், தவிர்க்க முடியாத சமயங்களில் மட்டுமே அவர் மேலே வருவார், இந்த நேரங்களில் அவர் என்னுடன் பேசுவதற்காக தங்கியது கிடையாது. எப்படியோ நாட்களைக் கழித்து வந்தேன்.

பரோடா மன்னரால் மாநிலத் தலைமைக் கணக்காய்வாளர் அலுவலகத்தில் எனக்குப் பயிற்சியாளராக வேலை கொடுக்கப் பட்டது. சுமார் 10 மணியளவில் நான் பயணிகள் விடுதியை விட்டு அலுவலகம் செல்வதும் நண்பர்களுடன் எவ்வளவு நேரம் வெளியே கழிக்க முடியுமோ அவ்வளவு நேரம் கழித்துவிட்டு நேரம் கழித்து இரவு 8 மணிக்குத் திரும்புவதும் வழக்கம். பயணிகள் விடுதியில் இரவு தங்க வேண்டியதை நினைத்தாலே பயமாக இருந்தது. ஆனால் தங்குவதற்கு வேறு இடமில்லையாதலால் நான் அந்த பயணிகள் விடுதிக்கு வந்துகொண்டிருந்தேன். பயணிகள் விடுதி யின் முதல் மாடியிலுள்ள பெரிய கூடத்தில் பேசுவதற்கு எந்த ஒரு சகமனிதரும் கிடையாது. நான் தனியாக இருந்தேன். கூடம் முழு வதும் இருள் மூடிக்கிடக்கும் இருளைப் போக்க மின்சார விளக்கு களோ, ஏன் எண்ணெய் விளக்குகளோ கூடக் கிடையாது. ஒரு சிறு அரிக்கன் விளக்கைக் காப்பாளர் எனது உபயோகத்திற்காக கொண்டு வருவது வழக்கம். அதன் வெளிச்சம் சில அங்குலங்களுக்கு மேல் பரவாது இருட்டுக் கொட்டடியில் இருப்பதை உணர்ந்த நான் பேசு வதற்கு யாராவது கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கினேன். மனித உறவுகள் இல்லாத நிலையில் எனக்குத் துணையெல்லாம் புத்த கங்கள்தான். படித்துக் கொண்டே இருந்தேன். புத்தகத்தில் மூழ்கி எனது தனிமை நிலையை மறந்தேன். கூடத்தைத் தம்முடைய இல்ல மாகக் கருதிய வௌவால்களின் கூச்சலும், அங்கும் இங்கும் அவை பறந்து செல்வதும் எனது மனத்தைத் திசை திருப்பி என்னைக் குலை நடுங்க வைத்ததுடன் எதை மறக்க வேண்டுமென்று நினைத்தேனோ அதனை, அதாவது ஒரு விசித்திர இடத்தில் ஒரு விசித்திரச் சூழ் நிலையில் இருக்கிறேன் என்பதை நினைவூட்டியது. பல நேரங்களில் என்னுள் கோபம் கொந்தளிக்கும். ஆனால் என் துயரையும் கோபத் தையும் கட்டுப்படுத்திக் கொண்டேன். அது இருட்டுக் கொட்டி லானாலும் அது ஒரு புகலிடம். ஒன்றுமில்லாதிருப்பதற்கு ஒரு புகலிடம் இருப்பது நல்லதுதானே. நான் பம்பாயில் விட்டுவந்த பொருள்களைக் கொண்டு வந்த என் மூத்த சகோதரியின் மகன் என்னுடைய நிலையைப் பார்த்தவுடன் அழ ஆரம்பித்தான். அவனை

உடனே திரும்ப அனுப்ப வேண்டும் என்ற அளவுக்கு அவன் அவ்வளவு உரத்த குரலில் அழ ஆரம்பித்தான். இந்த நிலையில் அந்தப் பார்சிப் பயணிகள் விடுதியில் ஆள்மாறாட்டத்தில் தங்கி வந்தேன். எப்படியும் என்னை ஒருநாள் கண்டுபிடித்து விடுவார் கள்; எனவே இந்த ஆள்மாறாட்டத்தை அதிக நாள் தொடர முடியாது என்பது எனக்குத் தெரியும். தங்குவதற்காக அரசு பங்களா ஒன்றை பெறுவதற்கு முயன்றேன் ஆனால் முதன் மந்திரி என்னுடைய வேண்டுகோளை அவ்வளவு அவசரமாகக் கருதவில்லை எனது விண்ணப்பம் ஓர் அதிகாரியிடமிருந்து இன்னோர் அதிகாரிக்கு என்று பயணம் செய்து கொண்டிருந்தது. இறுதிப் பதில் வருவதற் குள் எனக்குத் தீர்ப்பு அளிக்கும் நாள் வந்து விட்டது!

அன்று, பயணிகள் விடுதியில் தங்க ஆரம்பித்த 11வது நாள். நான் காலை உணவை முடித்துக் கொண்டு ஆடைகள் அணிந்து என்னுடைய அறையைவிட்டு அலுவலகத்துக்குப் புறப்பட்டேன். நூலகத்தில் எடுத்திருந்த சில புத்தகங்களைத் திருப்பிக் கொடுப் பதற்காக அவற்றை எடுத்துக் கொண்டிருந்தபோது பலர் மேலே வருவதுபோன்ற காலடியோசை கேட்டது. அவர்கள் இங்கே தங்க வந்துள்ள சுற்றுலாப் பயணிகள் என்று எண்ணி அவர்கள் யார் என்று காணச் சென்றேன் உயரமான, கோபக்கனல் தெரிக்கும் பலசாலியான ஒரு டஜன் பார்சிகள் கையில் ஆளுக்கு ஒரு கம்புடன் எனது அறையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் அவர்கள் சுற்றுலாப் பயணிகள் இல்லை என்பதை உடனேயே நிரூபித்துக் காட்டினார்கள். என் அறைக்கு முன், வரிசையாக நின்றுகொண்டு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். ''நீ யார்? நீ ஏன் இங்கே வந்தாய்? நீ எப்படி பார்சிப் பெயரை வைத்துக் கொண்டாய்? அயோக்கியனே! நீ பார்சிப் பயணிகள் விடுதியை அசுத்தப்படுத்தி விட்டாய்.'' நான் மௌனமாக நின்று கொண்டிருந்தேன். என்னால் எந்தப் பதிலும் அளிக்க முடியவில்லை நான் ஆள் மாறாட்டத்தைத் தொடர முடியாது. உண்மையிலேயே அது மோசடிதான். அந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டு விட்டது நான் ஆடிக் கொண்டிருந்த இந்த விளையாட்டை விடாப்பிடியாகத் தொடர்ந்தால் நிச்சயமாக அந்த கோபக்கார வெறிபிடித்த பார்சிக்கும்பல் என்னை அடித்து ஒருவேளை கொன்றே இருக்கும் என்னுடைய மௌனமும் பணிவும் இந்த அழிவிலிருந்து என்னைக் காப்பாற்றின. நீ எப்

பொழுது காலி பண்ண நினைத்திருக்கிறாய் என்று அவர்களில் ஒருவன் கேட்டான். அந்த நேரத்தில் எனது தங்குமிடத்தை எனது வாழ்க்கையை விட விலை மதிக்கத்தக்கதாகக் கருதினேன். அந்தக் கேள்வியில் பயங்கரமான அச்சுறுத்தல் மறைந்திருந்தது. என் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு இன்னும் ஒரு வாரமாவது அங்கு தங்க அனுமதிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். நான் பங்களாவுக்காக அமைச்சரிடம் கொடுத்த விண்ணப்பம் இச்சமயத்தில் எனக்குக் கைகொடுக்கும் என்று எண்ணினேன். ஆனால் அந்தப் பார்சிகள் எதையும் கேட்கும் மனநிலையில் இல்லை. அவர்கள் ஓர் இறுதி எச்சரிக்கை கொடுத்தனர். அன்று மாலை அவர்கள் என்னை அந்தப் பயணிகள் விடுதியில் காண விரும்பவில்லை. நான் மூட்டை கட்டவேண்டியதுதான். இல்லையென்றால் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என எச்சரித்துவிட்டு அவர்கள் சென்று விட்டனர். நான் குழம்பிப் போனேன். என்னுள் இதயம் பனிக்கட்டியாக உறைந்து விட்டது எல்லோரையும் சபித்தபடி வாய்விட்டு அழுதேன். என்னுடைய விலைமதிக்க முடியாத உறைவிடம் என்னிடமிருந்து பறிக்கப் பட்டுவிட்டது. அது ஒரு சிறைச்சாலை அறையை விடச் சிறப்பாக இருக்கவில்லைதான். ஆனால் எனக்கு அது விலைமதிக்க முடியாதது.

பார்சிகள் சென்ற பிறகு, இதற்கு ஒரு வழி காணச் சிறிது நேரம் அமர்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன். விரைவில் எனக்கு அரசு பங்களா கிடைத்து என் இன்னல்களுக்கு ஒரு முடிவு வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. எனவே என் பிரச்சினை ஒரு தற்காலிகப் பிரச் சினையே. ஆதலால் நண்பர்களிடம் செல்வதே இதற்கு நல்ல முடிவு என்று எண்ணினேன் பரோடா ராஜ்யத்தின் தீண்டத்தகாதவர் களிடையே எனக்கு நண்பர்கள் கிடையாது. ஆனால் மற்ற வகுப் பினரிடையே எனக்கு நண்பர்கள் இருந்தனர். ஒருவர் இந்து, மற்றவர் இந்தியக் கிறிஸ்தவர். முதலில் நான் இந்து நண்பரிடம் சென்று, எனக்கு ஏற்பட்ட நிலையை எடுத்துக் கூறினேன் அவர் பெருந் தன்மையானவர்; என் மிக நெருங்கிய நண்பர். அவர் வருத்தமடைந் ததுடன் வெறுப்பும் அடைந்தார். எனினும் அவர் குண்டைத் தூக்கி போட்டார். ''என் வீட்டிற்கு நீங்கள் வந்தால் எனது வேலை யாட்கள் போய்விடுவார்கள்'' என்றார் அவர். இந்தக் குறிப்பைப் புரிந்து கொண்ட நான் அங்கு தங்குவதைப் பற்றி வற்புறுத்தவில்லை.

எனது இந்தியக் கிறிஸ்தவ நண்பரிடம் செல்ல நான் விரும்பவில்லை ஒரு தடவை அவர் என்னைத் தங்குவதற்கு அழைத்திருந்தார். நான் அதை மறுத்து பார்சிப் பயணிகள் விடுதியிலே தங்க விரும்பினேன். அவருடைய பழக்க வழக்கங்கள் எனக்கு இணக்கமற்றவையாக இருந்ததுதான் காரணம் இப்பொழுது திரும்ப அவரிடம் செல்வது ஏமாற்றத்தையே கொடுக்கும் எனவே நான் அலுவலகம் சென்றேன். ஆனால் தங்குவதற்கு இடம் கிடைக்க இந்த வாய்ப்பை இழக்க நான் தயாரில்லை. ஒரு நண்பரிடம் கலந்தாலோசித்துவிட்டு என் கிறிஸ்தவ நண்பரைச் சந்திக்கச் சென்றேன். அவரால் எனக்கு தங்க இடம் கொடுக்க முடியுமா என்று கேட்டேன். அவருடைய மனைவி மறுநாள் பரோடாவுக்கு வருவதாகவும், அவளைக் கலந்தாலோ சித்துத்தான் சொல்ல முடியும் என்றும் அவர் பதில் அளித்தார். தட்டிக்கழிப்பதற்காக அவர் தெரிவித்த சாமர்த்தியமான பதில் இது என்று பிறகு தெரிந்து கொண்டேன் அவரும் அவரது மனைவியும் பிராமண குடும்பத்தில் இருந்து வந்திருந்தாலும், கிறிஸ்தவ மதத் துக்கு மாறிய பிறகு கணவர் சுதந்திரச் சிந்தனையுடையவராக இருந்தார். ஆனால் மனைவி பழைமைவாதியாகவே இருந்ததால் ஒரு தீண்டத்தகாதவரைத் தங்கள் வீட்டிற்குள்ளே அனுமதிக்க சம்மதிக்க மாட்டார். இவ்விதமாகக் கடைசி நம்பிக்கை ஒளியும் அணைந்துவிட்டது. இந்தியக் கிறிஸ்தவர் வீட்டிலிருந்து நான் வெளி யேறிய போது மாலை நான்கு மணி. எங்கே செல்வது என்பதே என் முன்னே இருந்த கேள்வி. நான் பயணிகள் விடுதியைக் காலி செய்ய வேண்டும். இனி உதவி நாடிச் செல்வதற்கு நண்பர்கள் யாரும் இல்லை. வேறு ஒரே ஒரு வழி பம்பாய் செல்வதுதான்

பம்பாய் செல்லும் ரயில் இரவு 9 மணிக்குப் புறப்படுகிறது. இன்னும் ஐந்து மணி நேரத்தை ஓட்ட வேண்டும். எங்கே நேரத்தைக் கழிப்பது? நான் பயணிகள் விடுதிக்குப் போவதா? என் நண்ப ரிடம் போவதா? திரும்பவும் பயணிகள் விடுதிக்குச் செல்ல போதிய தைரியம் எனக்கு இல்லை. பார்சிகள் வந்து என்னைத் தாக்குவார் கள் என்று பயந்தேன். நண்பரிடம் செல்லவும் நான் விரும்பவில்லை என்னுடைய நிலைமை பரிதாபப்படும்படி இருந்தாலும் யாரும் என்னைக் கண்டு பரிதாபப்படுவதை நான் விரும்பவில்லை. அந்த நக்ரத்தின் மற்றும் முகாமின் எல்லையில் இருந்த கமாதி பாக் பொதுப் பூங்காவில் ஐந்து மணி நேரத்தையும் கழிக்கத் தீர்மானித்தேன்

மனத்தின் ஒரு பகுதி எவ்வித சிந்தனையுமற்று இருந்தது, மற்ற பகுதி எனக்கு நடந்ததைப் பற்றிய துயரச் சிந்தனையுடனும், கதியற்ற நிலையில், குழந்தைகள் பெற்றோர்களைப் பற்றி எண்ணுவதுபோல என் மனமும் என் தாய் தந்தையர்களைப் பற்றிய எண்ணத்தால் நிரம்பியிருந்தது 8 மணிக்கு பூங்காவை விட்டு வெளியே வந்து ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு பயணிகள் விடுதிக்குச் சென்றேன். எனது பொருள்களைக் கீழே கொண்டு வந்தேன் கண்காணிப்பாளர் வெளியே வந்தார். எனினும் அவரோ, நானோ ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினை உருவானதற்குத் தானே ஒரு வகையில் பொறுப்பு என்பதை அவர் உணர்ந்திருந்தார் விடுதிக்குச் செலுத்த வேண்டிய பணத்தைத் தந்தேன். அவர் அதை மௌனமாகப் பெற்றுக் கொண்டார். நானும் மௌனமாக அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். நிறைய நம்பிக்கைகளுடன் நான் பரோடாவுக்கு வந்தேன். எனக்கு வந்த பல வாய்ப்புகளை விட்டுவிட்டு வந்தேன். அது யுத்த காலம். இந்தியக் கல்வித் துறையில் பல இடங்கள் காலியாக இருந்தன. லண்டனில் பல செல்வாக்குள்ளவர்களை நான் நன்கு அறிவேன் நான் அவர்கள் யாரிடமும் செல்லவில்லை. என்னுடைய கல்விக்கு உதவிய பரோடா மன்னருக்கு என் சேவையை அளிப்பதே என் கடமை என்று நான் எண்ணினேன் பதினோரு நாட்கள் இருந்த பிறகு நான் பரோடாவை விட்டு பம்பாய் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

ஒரு டஜன் பார்சிகள் அச்சுறுத்தும் விதத்தில் கையில் கம்புடன் என் முன்னே வரிசையாக நிற்க, மன்னிப்புக் கேட்டு பீதி நிறைந்த பார்வையுடன் அவர்கள் முன் நான் நின்ற காட்சி 18 ஆண்டுகள் கடந்த பின்பும் சிறிதும் மங்கவில்லை. அதைத் தெளிவாக என் மனக்கண் முன் கொண்டு வரமுடியும். ஆனால் கண்ணில் கண்ணீர் இல்லாமல் மட்டும் அதை நினைவுகூர முடியாது. இந்துவுக்கு ஒருவன் தீண்டத்தகாதவன் என்றால் அவன் பார்சிக்காரர்களுக்கும் தீண்டத்தகாதவன்தான் என்பதை அப்பொழுது தான் முதன் முதலாகத் தெரிந்து கொண்டேன்

# மூன்று

1929 ஆம் ஆண்டு தீண்டத்தகாதவர்களின் குறைகளைக் குறித்து விசாரிக்க பம்பாய் அரசு ஒரு குழுவை நியமித்தது நானும் அந்தக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். அநீதி, கொடுமை, கொடூரம் போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க அந்தக் குழு மாகாணம் முழுவதும் செல்ல வேண்டியிருந்தது. குழு பல சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கந்தேஷின் இரு மாவட்டங்கள் எனக்கும் இன்னொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. வேலை முடிந்த பிறகு நானும் என்னுடன் பணிபுரியும் நண்பரும் பிரிந்து சென்றோம். அவர் ஓர் இந்து சாமியாரைப் பார்க்கச் சென்றார். நான் பம்பாய்க்கு ரயில் ஏறினேன் சாலிஸ்காவோனில் இறங்கினேன். தூலியா ரயில் மார்க்கத்தில் இருந்த ஒரு கிராமத்தில் சமூகப் பகிஷ்காரத்தைப் பற்றி விசாரிக்க வேண்டியிருந்தது. சாதி இந்துக்கள் தீண்டத்தகாதவர்களுக்கு எதிராக சமூகப் பகிஷ்கார நடவடிக்கை எடுத்திருந்ததை விசாரிக்கச் சென்றேன். சாலிஸ்காவோனைச் சேர்ந்த தீண்டத்தகாதவர்கள் ரயில் நிலையத்துக்கு வந்து அவர்களுடன் ஓர் இரவு தங்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சமூகப் பகிஷ்காரப் பிரச்சினையைக் குறித்து விசாரித்துவிட்டு நேராக பம்பாய் செல்வதே என் ஆரம்பத் திட்டம். அவர்கள் மிகவும் ஆர்வம் காட்டியதால், அந்த இரவை அவர்களுடன் கழிக்கச் சம்மதித்தேன். தூலியா செல்லும் ரயிலில் ஏறி அந்த கிராமத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து கொண்டு அடுத்த ரயிலில் சாலிஸ்காவோனுக்கு வந்தேன்.

ரயில் நிலையத்தில் சாலிஸ்காவோன் தீண்டத்தகாதவர்கள் எனக்காகக் காத்திருப்பதைக் கண்டேன். எனக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தீண்டத்தகாதவர்கள் குடியிருக்கும் பகுதியான மகர்வாடா ரயில் நிலையத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. அதை அடைவதற்கு ஒரு சிறு வாய்க்கால் பாலம் வழியாக ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். ரயில் நிலையத்

தில் வாடகைக்குப் பல குதிரை வண்டிகள் இருந்தன. ரயில் நிலையத்திலிருந்து மகர்வாடாவும் நடக்கும் தூரத்தில்தான் இருந்தது. மகர்வாடாவுக்கு உடனே அழைத்துச் செல்வார்கள் என நான் எதிர் பார்த்தேன் அந்தத் திசை நோக்கி எந்தச் சலனமும் காணப்படவில்லை. என்னை ஏன் காத்திருக்க வைத்திருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. ஒரு மணிநேரம் கழிந்த பிறகு ஒரு டோங்கா (ஒற்றைக் குதிரைவண்டி) பிளாட்பாரத்துக்கு அருகே கொண்டு வரப்பட்டு அதில் நான் ஏறிக் கொண்டேன். அந்த டோங்காவில் இருந்தது நானும் அந்த வண்டி ஓட்டியும்தான் மற்றவர்கள் குறுக்கு வழியில் நடந்து சென்றார்கள் டோங்கா 200 அடிகூட சென்றிருக்காது, அது ஒரு மோட்டார் காருடன் நேருக்கு நேர் மோதியிருக்கும் தினந்தோறும் வாடகைக்கு வண்டி ஓட்டும் அந்த ஆள் இவ்வளவு தூரம் அனுபவமில்லாதவராக இருப்பது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. காவலரின் உரத்த குரலினால் கார் ஓட்டுநர் காரைப் பின்னுக்கு செலுத்தியதால்தான் விபத்து தவிர்க்கப்பட்டது.

எப்படியோ ஆற்றைக் கடக்க வேண்டிய வாய்க்கால் பாலத்துக்கு வந்துவிட்டோம். எந்த ஒரு பாலத்திலும் உள்ளதுபோல் இந்த வாய்க்கால் பாலத்தில் பக்கச் சுவர்கள் கிடையாது. ஐந்து அல்லது பத்தடி இடைவெளியில் கல்வரிசைதான் இருந்தது. பாலம் கல் பாவப்பட்டிருந்தது நாங்கள் சென்று கொண்டிருந்த சாலையின் நேர் கோணத்தில் ஆற்றின் வாய்க்கால் பாலம் இருந்தது. சாலையிலிருந்து செல்லும்போது செங்குத்தாகத் திரும்ப வேண்டிய அவசியம் இருந்தது ஆரம்பத்திலிருந்த முதல் பக்கவாட்டுக் கல்லின் அருகிலேயே குதிரை நேராகச் செல்லாமல் அதன்மீது மோதியது. டோங்காவின் சக்கரம் பக்கக் கல்லுடன் பலமாக மோதியதில் நான் தூக்கி எறியப்பட்டு வாய்க்கால் பாலத்தின் கல் பரப்பிய தளத்தில் விழுந்தேன். அந்தக் குதிரையும் வண்டியும் வாய்க்கால் பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்தன. நான் விழுந்ததில் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆற்றின் மறுகரையில் மகர்வாடா குடியிருப்பு இருந்தது. என்னைப் பார்ப்பதற்கு ரயில் நிலையம் வந்திருந்தவர்கள் எங்களுக்கு முன்பே அங்கு சென்றடைந்திருந்தார்கள். ஆண்கள் பெண்கள் குழந்தைகளின் அழுகுரல்களுக்கும்

பரிதாபப் புலம்பல்களுக்கும் இடையே என்னை மகர்வாடாவுக்குத் தூக்கிச் சென்றார்கள். எனக்குப் பல காயங்கள் ஏற்பட்டிருந்தன. காலில் எலும்பு முறிந்ததால் பல நாட்களுக்கு நான் நடக்க முடியாமல் இருந்தேன். இது எப்படி ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. டோங்காக்கள் தினந்தோறும் வந்து, கொண்டும் போய்க்கொண்டுந்தான் இருக்கின்றன. ஒரு தடவை கூட டோங்கா ஓட்டிகள் அந்த வாய்க்கால் பாலத்தில் பத்திரமாக செல்லத் தவறியதில்லை.

விசாரித்ததில் எனக்கு உண்மையான தகவல்கள் தெரிந்தன. ரயில் நிலையத்தில் ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணம் டோங்கா வாலாக்கள் யாரும் தீண்டத்தகாதவரை வண்டியில் ஏற்றிச் செல்லத் தயாரில்லை. அது அவர்களுடைய தன்மானத்திற்கு இழுக்கு. நான் அவர்களுடைய குடியிருப்புகளுக்கு நடந்து செல்வது மஹர்களுக்கு விருப்பமில்லை. என் மீது அவர்கள் வைத்திருந்த மதிப்புக்கு இது சரிப்படாது, ஓர் இணக்கமான முடிவு ஏற்பட்டது. அந்த முடிவு இதுதான். டோங்காச் சொந்தக்காரர் வண்டியை வாடகைக்குக் கொடுப்பார். ஆனால் வண்டியை அவர் ஓட்டமாட்டார். மஹர்கள் டோங்காவைப் பெற்றுக் கொண்டு அதை ஓட்டுவதற்கு ஒருவனை ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு நல்ல தீர்வு என்று மஹர்கள் நினைத்தனர். பயணியின் கௌரவப் பிரச்சினையைவிட பாதுகாப்பான பயணமே மிகவும் முக்கியமானது என்பதை அவர்கள் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. அவர்கள் இதைப் பற்றி சிந்தித்திருந்தால் என்னைப் பத்திரமாகக் கொண்டு செல்லும் ஒரு வண்டிக்காரர் கிடைப்பாரா என்பதைப் பற்றிச் சிந்தித்திருப்பார்கள் அவர்களில் யாருக்கும் வண்டி ஓட்டத் தெரியாது. ஏனெனில் அது அவர்கள் தொழிலல்ல. எனவே அவர்கள் தங்களில் ஒருவனை வண்டி ஓட்டக் கேட்டிருக்கிறார்கள். அந்த நபர் லகானைக் கையில் எடுத்துக் கொண்டு அது ஒரு பெரிய விஷயமில்லை என்று நினைத்திருக்கிறான். ஆனால் தன்னுடைய பொறுப்பை உணர்ந்த அவன் பயத்தினால் அதைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை விட்டுவிட்டான். என்னுடைய கௌரவத்தைக் காப்பாற்ற நினைத்த சாலிஸ்காவோன் மஹர்கள் என் உயிருக்கே ஆபத்தைக் கொண்டு வந்தார்கள்.

அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது ஓர் இந்து டோங்காவாலா, ஒரு கடைநிலை வேலைக்காரனைப் போன்ற நிலையிலிருந்தாலும் தான் மற்ற எல்லா தீண்டத்தகாதவர்களையும் விட ஏன் பாரிஸ்டரையும் விடக்கூட உயர்ந்தவன் என்ற எண்ணம் கொண்டவன் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

# நான்கு

1934ம் ஆண்டு. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இயக்கத்தில் என்னுடன் பணி செய்தவர்கள் ஒரு சுற்றுலாவுக்கும் செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர். நானும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். இதற்கு நானும் சம்மதம் தெரிவித்தேன். வேருலிலுள்ள புத்த சமயக் குகைகளுக்கும் செல்ல வேண்டும் என்பது திட்டத்தில் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நான் நாசிக் செல்ல வேண்டுமென்றும், குழு என்னை நாசிக்கில் சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. வேருலுக்குச் செல்ல வேண்டுமென்றால் அவுரங்காபாத்துக்குச் செல்ல வேண்டும். அவுரங்காபாத் முகமதிய சமஸ்தானமான ஹைதராபாத்தில் உள்ள ஒரு நகரம். மாட்சிமை தங்கிய நிஜாமின் ராஜ்யத்தில் அது சேர்க்கப்பட்டிருந்தது. அவுரங்காபாத்துக்குச் செல்லும் வழியில் முதலில் நாங்கள் தவுலாதாபாத் என்ற நகரையும் கடந்து செல்ல வேண்டும். அந்நகரமும் ஹைதராபாத் சமஸ்தானத்தில் இருந்தது. ஒரு காலத்தில் ராம்தேவ் ராய் என்ற மிகப் பிரபல இந்து அரசனின் தலைநகராக இருந்த தவுலதாபாத் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம். தவுலாதாபாத் கோட்டை ஒரு பழங்காலத்திய வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நினைவுச் சின்னம். அந்தப் பக்கம் செல்லும் எந்தச் சுற்றுலாப் பயணியும் அதைக் காணாமல் செல்ல மாட்டார். எனவே எங்கள் குழுவும் தனது பயணத் திட்டத்தில் தவுலாதாபாத் கோட்டையை சேர்த்துக் கொண்டிருந்தது.

நாங்கள் சில பேருந்துகளையும் சுற்றுலாக் கார்களையும் வாடகைக்கு எடுத்திருந்தோம். எங்கள் எண்ணிக்கை 30 ஆக இருந்தது. இயோலா நாசிக்கிலிருந்து அவுரங்காபாததுக்குச் செல்லும் வழியிலிருந்ததால் இயோலாவுக்குப் புறப்பட்டோம். எங்கள் பயணத் திட்டத்தை வேண்டுமென்றே நாங்கள் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஒரு தீண்டத்தகாதச் சுற்றுலாப் பயணி நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காகவே நாங்கள் பிறர் அறிந்து கொள்ளா வண்ணம் பயணம் செய்யத் திட்டமிட்டோம் எங்கே தங்க வேண்டு

மென்று நாங்கள் தீர்மானித்திருந்தோமோ அந்த இடங்களிலுள்ள எங்கள் மக்களுக்கு மட்டும் தகவல் கொடுத்திருந்தோம். ஆகையால் போகும் வழியில் நிஜாம் சமஸ்தானத்தில் பல கிராமங்களைக் கடந்து சென்றாலும் எங்களைச் சந்திக்க எங்கள் மக்கள் யாரும் வரவில்லை எதிர்பார்த்தபடியே தவுலாதாபாத்தில் நிலைமை வேறுவிதமாக இருந்தது அங்கு நாங்கள் வருவதைப் பற்றி எங்கள் மக்களுக்கு அறிவித்திருந்தோம். நகர வாயிலில் குழுமியிருந்த அவர்கள் எங்களுக்காகக் காத்திருந்தனர், அவர்கள் எங்களைக் கீழே இறங்கச் சொல்லிவிட்டு முதலில் தேநீர் மற்றும் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டுக் கோட்டையைக் காணச் செல்லலாமெனக் கூறினார்கள். அவர்கள் யோசனையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் தேநீர் அருந்த மிகவும் விரும்பினாலும், இருட்டுக்கு முன்பு கோட்டையைப் பார்ப்பதற்கு போதிய நேரம் வேண்டுமென்று விரும்பினோம். எனவே திரும்பும் வழியில் தேநீர் அருந்துகிறோம் என எங்கள் மக்களிடம் கூறிவிட்டு நாங்கள் கோட்டைக்குப் புறப்படும்படி ஓட்டுநர்களிடம் சொன்னோம். சில நிமிடங்களில் நாங்கள் கோட்டை வாயிலை அடைந்தோம்.

முகமதியர்கள் நோன்பு இருக்கும் ரம்ஜான் மாதம் அது. கோட்டை வாயிலுக்கு வெளியே ஒரு சிறிய குளம் தண்ணீர் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சுற்றிலும் கற்கள் பாவப்பட்ட அகலமான நடைபாதையிருந்தது. பிரயாணத்தின்போது எங்கள் முகங்கள், உடல்கள், ஆடைகள் எல்லாம் ஒரே புழுதிமயமாகி விட்டன. நாங்கள் எல்லோரும் உடலைக் கழுவிக் கொள்ள விரும்பினோம். அதிகம் சிந்தனை செய்யாமல், எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் முகத்தையும் கால்களையும் குளத்துத் தண்ணீரில் கழுவினார்கள். இப்படிச் சுத்திகரித்த பிறகு நாங்கள் கோட்டை வாயிலுக்குச் சென்றோம். ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் உள்ளே இருந்தனர். பெரிய வாசல் கதவுகளைத் திறந்துவிட்டு வில் போன்று வளைந்திருந்த நுழைவாயிலுக்குள் எங்களை அனுமதித்தார்கள் கோட்டைக்குள் செல்ல எப்படி அனுமதி பெறவேண்டும் என்பதைப் பற்றி காவலாளியிடம் கேட்க அப்பொழுதுதான் ஆரம்பித்தோம். இதற்கிடையில் பின்னாலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு வயதான வெள்ளைத் தாடியுடன் கூடிய முகமதியர் கூச்சலிட்டு கொண்டிருந்தார். தெத்கள் (தீண்டத்தகாதவர்கள் என்ற பொருளில்) குளத்தை

அசுத்தம் செய்துவிட்டார்கள் என்று கூப்பாடு போட்டார். உடனே அருகிலிருந்த எல்லா இளம் மற்றும் வயதான முகமதியர்களும் அவருடன் சேர்ந்து கொண்டு எங்களை வசை பாட ஆரம்பித்தனர். தெத்களுக்குக் கர்வம் பிடித்து விட்டது. தெத்கள் தங்களுடைய மதத்தை மறந்து விட்டனர் (அதாவது தாழ்ந்தும் இழிந்த நிலையில் இருப்பது). தெத்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும். மிகவும் அச்சுறுத்தும் நிலையில் அவர்கள் காணப்பட்டனர். அவர்கள் தாக்கும் மனநிலையுடன் இருந்தனர். நாங்கள் வெளியூர்க்காரர்கள் என்றும், எங்களுக்கு உள்ளூர் பழக்கவழக்கங்கள் தெரியாது என்றும் சொன்னோம். அவர்கள் தங்கள் கோபக்கனலை உள்ளூர் தீண்டத்தகாதவர்கள் மீது வீசினார்கள். இந்தக் குளத்தைத் தீண்டத்தகாதவர்கள் உபயோகிக்கக் கூடாது என்பதை நீங்கள் ஏன் வெளியூர்காரர்களுக்குச் சொல்லவில்லை? இந்தக் கேள்வியை அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டனர். பாவம் அவர்கள்! நாங்கள் குளத்தில் இறங்கியபோது அவர்கள் அங்கு இல்லை. உண்மையில் அது எங்கள் தவறுதான். நாங்கள் விசாரிக்காமல் இறங்கிவிட்டோம். தங்களுடைய தவறில்லை என்று அவர்கள் ஆட்சேபித்தார்கள். என்னுடைய விளக்கத்தை முகமதியர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. எங்களையும் உள்ளூர்வாசிகளையும் அவர்கள் வசைபாடிக் கொண்டிருந்தார்கள். எங்களை எரிச்சலூட்டு மளவுக்கு அவர்கள் மிகவும் ஆபாசமாகத் திட்டித் தீர்த்தார்கள். இத்தகைய சூழ்நிலைமையில் அப்போது கலகமும் ஏன் கொலைகளும்கூட நடைபெற்றிருக்கக்கூடும். இருப்பினும் நாங்கள் எங்களை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. எங்கள் பயணத்தைத் திடீர் முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் ஒரு கிரிமினல் வழக்கில் நாங்கள் சம்பந்தப்பட விரும்பவில்லை.

தீண்டத்தகாதவர்கள் பொதுக்குளத்திலுள்ள தண்ணீரை உபயோகிக்கக்கூடாது என்ற பொருளில் ஒவ்வொருவரும் அவரவருடைய மத ஆசாரங்களைப் பின்பற்ற வேண்டுமென்று, கூட்டத்திலிருந்த ஒரு முஸ்லீம் இளைஞர் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார். நான் பொறுமையை இழந்து ஒருவித கோபமான குரலில் கேட்டேன்: ''இதைத்தான் உங்கள் மதம் போதிக்கிறதா? முகமதியனாக மாறினால் ஒரு தீண்டத்தகாதவனை இந்தக் குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடுப்பீர்களா?'' இந்த நேரடியான

கேள்விகள் அந்த முகமதியர்களிடம் கொஞ்சம் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு பதிலும் கூறாது மௌனமாக நின்று கொண்டிருந்தனர். காவல்காரரை நோக்கி நான் கோபமாகக் கேட்டேன்: ''கோட்டைக்குள் நாங்கள் போகலாமா, இல்லையா? முடியாது என்றால் நாங்கள் இங்கு காத்திருக்க விரும்பவில்லை, சொல்லுங்கள்.'' காவல்காரர் என் பெயரைக் கேட்டார். நான் அதை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தேன். அதை அவன் கண்காணிப்பாளரிடம் உள்ளே எடுத்துச் சென்று கொடுத்துவிட்டு வெளியே வந்தான். கோட்டைக்குள் செல்ல நாங்கள் அனுமதிக்கப் பட்டோம் ஆனால் உள்ளே எந்தத் தண்ணீரையும் நாங்கள் தொட்டு விடக்கூடாது என்று சொல்லப்பட்டது. ஆயுதம் தாங்கிய சிப்பாய் ஒருவன் நாங்கள் இந்த ஆணையை மீறுகிறோமா என்று கண்காணிக்க எங்களுடன் புறப்பட்டான்.

ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால் அவன் பார்சிக்கும் தீண்டத்தகாதவன் என்பதைக் காட்ட ஒரு நிகழ்ச்சியை விவரித்திருந்தேன். ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால் அவன் முகமதியருக்கும் தீண்டத்தகாதவனே என்பதை இந்த நிகழ்ச்சி படம் பிடித்துக் காட்டும்.

# ஐந்து

அடுத்த நிகழ்ச்சியும் இதே அளவு தெளிவைக் கொடுக்கக் கூடியதுதான். கத்தியவார் கிராமத்தின் ஒரு தீண்டத்தகாதவரான பள்ளி ஆசிரியருக்கு நேர்ந்த சோக நிகழ்ச்சி இது. திரு. காந்தி வெளியிட்டு வந்துள்ள ''யங் இந்தியாவின்'' 1929 டிசம்பர் 12-ம் தேதி இதழில் வெளியிடப்பட்டுள்ள பின்வரும் கடிதத்தில் இந்நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பிரசவித்த தன் மனைவிக்குச் சிகிச்சை அளிக்க ஓர் இந்து மருத்துவரைச் சம்மதிக்க வைப்பதில் அவருக்கு நேர்ந்த இன்னல்களையும், மருத்துவ உதவியின்றி எப்படி மனைவியும் குழந்தையும் இறந்தனர் என்பதையும் அக் கடிதம் தெரிவிக்கிறது. கடிதம் கூறுவதாவது:

> ''இந்த மாதம் 5ம் தேதி எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. 7ம் தேதி அது நோய்வாய்ப்பட்டு வயிற்றுப் போக்கால் அவதிப் பட்டது. அதனுடைய நாடித் துடிப்பு குறைந்தது. நெஞ்சும் வீக்கமடைந்தது. மூச்சுவிடுவதும் கடினமாகி விலா எலும்பு களிலும் வலி எடுக்க ஆரம்பித்தது. நான் ஒரு மருத்துவரை அழைக்கச் சென்றேன். ஆனால் அவர் ஒரு ஹரிஜன் வீட்டுக்கு வரவோ, குழந்தையைப் பரிசோதனை செய்யவோ தயா ரில்லை என்று கூறிவிட்டார். பிறகு நான் நகர்சேத் மற்றும் கெராசியாவிடம் சென்று எனக்கு உதவுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். நான் மருத்துவருக்குக் கொடுக்க வேண்டிய அவரது கட்டணமான இரண்டு ரூபாய்க்கு நகர்சேத் உத்தர வாதம் அளித்தார். ஹரிஜனக் குடியிருப்புக்கு வெளியிலேதான் அவர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய முடியும் என்ற நிபந்தனையின்பேரில் மருத்துவர் வந்தார். என் மனைவியைப் பிறந்த குழந்தையுடன் குடியிருப்புக்கு வெளியே கொண்டு சென்றேன். பிறகு மருத்துவர் ஒரு வெப்பமானியை ஒரு முஸ்லீமிடம் கொடுக்க, அவர் அதை என்னிடம் கொடுத்தார் நான் அதை என் மனைவியிடம் கொடுத்தேன். அதை உப யோகித்த பிறகு அதே முறையில் அது திரும்பக் கொடுக்கப் பட்டது. அப்பொழுது இரவு சுமார் 8 மணி. விளக்கு

வெளிச்சத்தில் வெப்பமானியைப் பார்த்துவிட்டு நோயாளிக்கு நிமோனியா ஜுரம் என்று மருத்துவர் கூறினார். பிறகு அவர் போய்விட்டார். மருந்துகளை அனுப்பினார். கடையிலிருந்து கொஞ்சம் ஆளிவிதைகளைக் கொண்டு வந்து நோயாளிக்குப் பூசினேன் நான் மருத்துவருக்கு இரண்டு ரூபாய் கட்டணத் தைக் கொடுத்திருந்தும் அதற்குப் பிறகு அவர் அவளைப் பார்க்க மறுத்துவிட்டார். நோய் ஆபத்தானது. கடவுள் மட்டுமே எங்களைக் காப்பாற்ற முடியும்.

எனது வாழ்க்கையின் ஒளி மறைந்து விட்டது. இன்று மதியம் இரண்டு மணிக்கு அவள் இறந்துவிட்டாள்''.

அந்தத் தீண்டத்தகாத ஆசிரியரின் பெயர் கொடுக்கப்பட வில்லை. அதேபோன்று அந்த மருத்துவரின் பெயரும் கொடுக்கப் படவில்லை. தனக்குப் பதிலடி கிடைக்கும் என்று பயந்த அந்த தீண்டத்தகாத ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நிகழ்ச்சிகள் மறுக்க முடியாதவை.

எந்தவித விளக்கமும் தேவையில்லை. படித்தவராக இருந் தும், நோய்வாய்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த நோயாளிக்கு அந்த மருத்துவர் சிகிச்சை அளிக்கவும் வெப்பமானியைத் தானே கொடுத்து உபயோகிக்கவும் மறுத்துவிட்டார் அவர் சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டதால் அந்தப் பெண் இறந்து விட்டார் அவ ருடைய தொழில் ரீதியான நடத்தை நெறிகளைக் குழிதோண்டிப் புதைத்ததில் அவருடைய மனச்சாட்சி உறுத்தவில்லை. ஓர் இந்து, தீண்டத்தகாதவனைத் தொடுவதை விட மனிதாபிமானமற்று இருப்பதையே சிறந்ததாகக் கருதுகிறான்.

# ஆறு

இதைவிட மனத்தைத் தொடக்கூடிய இன்னொரு நிகழ்ச்சி இருக்கிறது. 1938 மார்ச் மாதம் 6 ஆம் தேதி பம்பாய் தாதரின் கசர் வாடியில் (கம்பளித் தொழிற்சாலைக்குப் பின்னே) பங்கிகளின் கூட்டம் ஒன்று திரு. இந்துலால் யக்னிக் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஒரு பங்கி இளைஞன் தன் அனுபவத்தைப் பின்வருமாறு விவரித்தான்:

''1938ல் வட்டாரமொழி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றுள்ளேன். நான்காவது வகுப்புவரை நான் ஆங்கில மொழி படித்திருக்கிறேன். பம்பாய் நகரசபையின் பள்ளிகள் குழுவுக்கு ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பம் செய்தேன். ஆனால் வேலை காலி இல்லாததால் அது, பயனற்றுப் போயிற்று. பிறகு ஆமதாபாத்திலுள்ள பிற்பட்டோர் துறை அலுவலருக்குத் தலாத்தி (கிராம பட்வாரி) வேலைக்கு விண்ணப்பித்து வெற்றியும் கண்டேன். கேதா மாவட்ட போர்சாத் தாலுகாவிலுள்ள மாம்லத்தார் அலுவலகத்தில் தலாத்தியாக நியமிக்கப்பட்டேன்.

எனது குடும்பம் தொடக்கத்தில் குஜராத்திலிருந்து வந்திருந்தாலும் இதற்கு முன்பு நான் குஜராத் சென்றதில்லை. அங்கே செல்வது இதுவே முதல் தடவை. அதேபோல், அரசு அலுவலகங்களிலும் தீண்டாமை கடைப்பிடிக்கப்படும் என்பது எனக்குத் தெரியாது. மேலும் என் விண்ணப்பத்தில் நான் ஹரிஜன் என்ற உண்மையையும் தெரிவித்திருந்ததால், அலுவலக நண்பர்கள் நான் யார் என்பதை முன்பே தெரிந்து கொண்டிருப்பார்கள் என நினைத்தேன். எனவேதான் தலாத்தி வேலையில் சேருவதற்காக நான் சென்றபோது மாம்லத்தார் அலுவலக எழுத்தரின் போக்கைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

கார்குன் வெறுப்புடன் கேட்டார்: ''நீ யார்?'' ''ஐயா, நான் ஒரு ஹரிஜன்'' என்று பதிலளித்தேன். ''தூரப் போ, தள்ளி நில்''

என்றார். ''இவ்வளவு அருகே நிற்க உனக்கு எவ்வளவு தைரியம்? இப்போது நீ அலுவலகத்தில் இருக்கிறாய். நீ, வெளியே மட்டும் இருந்தால் உனக்கு ஆறு உதை கொடுத்திருப்பேன். இங்கு வேலைக்கு வர உனக்கு என்ன தைரியம்?'' என்று சீறினார். அதற்குப் பிறகு தலாத்தி வேலைக்கான நியமனக் கடிதத்தையும் பள்ளிச் சான்றிதழ்களையும் தரையில் போடச் சொன்னார். பிறகு அதை அவர் பொறுக்கி எடுத்துக் கொண்டார். போர்ஸாத் மாம் லத்தார் அலுவலகத்தில் வேலை பார்த்தபோது குடிக்கத் தண்ணீர் பெறும் விஷயத்தில் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். அலுவலக வராந்தாவில் குடிப்பதற்கான தண்ணீர் உள்ள தகரக் குவளைகள் வைக்கப்பட்டிருந்தன. இந்தத் தகரக்குவளைகளுக்குப் பொறுப்பாக குடிநீர் வழங்குபவர் ஒருவர் இருந்தார். அலுவலகத்தின் எழுத்தர் களுக்குத் தேவைப்படும்போது தண்ணீர் கொண்டு வந்துதர வேண்டி யதுதான் அவருடைய பணி. குடிநீர் வழங்குபவர் இல்லாத நேரத் தில் அவர்களே குவளைகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடிக்க முடியும். என்னுடைய நிலைமையில் இது சாத்தியமில்லை. நான் அந்தக் குவளைகளைத் தொடமுடியாது. ஏனெனில் நான் தொடு வதால் அந்தத் தண்ணீர் தீட்டுப்பட்டு விடும். குடிநீர் வழங்கு பவரின் தயவைத்தான் நான் நம்பியிருக்க வேண்டியிருந்தது. எனது உபயோகத்துக்காக அழுக்கடைந்த ஒரு சிறு பானை வைக்கப்பட் டிருந்தது என்னைத் தவிர அதை யாரும் தொடவோ கழுவவோ மாட்டார்கள். இந்தப் பானையில்தான் குடிநீர் வழங்குபவர் எனக்குச் சிறிதளவு தண்ணீர் ஊற்றுவார். குடிநீர் வழங்குபவர் இருந்தால்தான் எனக்கு தண்ணீர் கிடைக்கும். எனக்குத் தண்ணீர் ஊற்றுவது அவருக்குப் பிடிக்கவில்லை. நான் தண்ணீருக்காக வருவதைக் கண்டு அவர் எப்படியோ எங்கேயாவது நழுவி விடுவார். விளைவு, நான் தண்ணீரில்லாமல் அவதிப்பட வேண்டி யதுதான். இவ்வாறு நான் குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் கழித்த நாட்கள் ஒன்று இரண்டல்ல.

என்னுடைய குடியிருப்புப் பிரச்சினையும் இதேபோன்று கஷ்டமானதுதான். போர்ஸாத்துக்கு நான் புதியவன். எந்தச் சாதி இந்துவும் எனக்கு வாடகைக்கு வீடு கொடுக்க மாட்டார். ஓர் எழுத்தர் போல அதாவது என் தகுதிக்குமேல் நான் வாழ முயல் வதை விரும்பாத இந்துக்களின் வெறுப்பிற்கு ஆளாகி விடுவோமோ

என்று பயந்த போர்ஸாத் தீண்டத்தகாதவர்கள் எனக்குக் குடியிருப்பு கொடுக்கத் தயாரில்லை. உணவைப் பொறுத்தவரை இதைவிட சொல்லொண்ணா அவதி. நான் உணவு பெறுவதற்கு இடம் எதுவுமோ அல்லது மனிதரோ கிடையாது. காலையிலும் மாலையிலும் நான் 'பஜாஸ்' வாங்குவது வழக்கம். கிராமத்திற்கு வெளியே ஏதாவது ஒரு தனி இடத்தில் சாப்பிட்டுவிட்டு இரவு வந்து மாம்லத்தார் அலுவலகத் தாழ்வாரத்தின் நடைபாதைத் தளத்தில் உறங்குவது வழக்கம். இவ்விதம் நான்கு நாட்களைக் கழித்தேன். இவையாவும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குப் போய்விட்டன. என் மூதாதையரின் கிராமமான ஜென்ட்ராலில் போய் வசிக்கத் தொடங்கினேன். போர்ஸாத்திலிருந்து அது 6 மைல் தொலைவில் இருந்தது. தினந்தோறும் நான் பதினோரு மைல் நடக்க வேண்டியிருந்தது. ஒன்றரை மாதம் இப்படிக் கழிந்தது.

இதற்குப் பிறகு வேலையைக் கற்றுக் கொள்வதற்காக மாம்லத்தார் என்னை ஒரு தலாத்தியிடம் அனுப்பினார். ஜென்ட்ரால், காப்பூர், ஸாஜிப்பூர் ஆகிய மூன்று கிராமங்களும் இந்தத் தலாத்தியின் பொறுப்பில் இருந்தன. ஜென்ட்ரால்தான் அவருடைய தலைமையகம். இந்தத் தலாத்தியுடன் ஜென்ட்ராலில் இரு மாதங்கள் கழித்தேன். அவர் எனக்கு ஒன்றும் கற்றுக் கொடுக்கவில்லை. மேலும் கிராம அலுவலகத்துக்குள் நான் ஒரு தடவை கூட நுழைந்தது கிடையாது. கிராமத் தலைவர் முக்கியமாக என்மீது மிகுந்த விரோதம் கொண்டிருந்தார். ஒரு தடவை அவர் சொன்னார்: ''ஏய் பையா, உன் அப்பன், அண்ணன் எல்லோரும் இந்தக் கிராமத்து அலுவலகத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நீ எங்களுக்குச் சமமாக அலுவலகத்தில் உட்கார விரும்புகிறாயா? ஜாக்கிரதை! இந்த வேலையை நீ விட்டு விடுவது நல்லது.''

ஒரு நாள் தலாத்தி என்னை ஸாஜிப்பூருக்கு அழைத்து, அந்தக் கிராமத்தின் மக்கட் தொகை அட்டவணையைத் தயாரிக்கச் சொன்னார். ஜென்ட்ராலிலிருந்து நான் ஸாஜிப்பூருக்குச் சென்றேன். கிராமத் தலைமை அதிகாரியும் தலாத்தியும் கிராம அலுவலகத்தில் ஏதோ வேலைசெய்து கொண்டிருப்பதைக் கண்டேன். நான் அங்கு சென்று அலுவலக வாசலருகே, ''காலை வணக்கம்'' என்று அவர்களுக்கு முகமன் கூறினேன். ஆனால் அவர்கள் என்னைக் கண்டு கொள்ள

வில்லை. நான் வெளியே சுமார் 15 நிமிடங்கள் நின்று கொண்டிருந்தேன். ஏற்கெனவே வாழ்க்கையில் சலித்துப் போயிருந்த நான் இந்த மாதிரி புறக்கணிக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுவதைக் கண்டு கோபமடைந்தேன். அங்கே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். நான் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த கிராமத் தலைமை அதிகாரியும் தலாத்தியும் என்னிடம் ஒன்றும் கூறாமல் அமைதியாக வெளியேறினர். சிறிது நேரத்துக்குப் பிறகு மக்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். விரைவிலேயே என்னைச் சுற்றி ஒரு பெருங் கூட்டம் கூடிவிட்டது. கிராம நூலகத்தின் நூலக அதிகாரி இந்தக் கூட்டத்தை வழிநடத்திக் கொண்டிருந்தார் படித்த மனிதரான அவர் ஏன் இந்தக் கும்பலை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை அந்த நாற்காலி அவருடையது என்பதை பிறகுதான் தெரிந்து கொண்டேன். மிக மோசமான முறையில் அவர் என்னை வசைபாட ஆரம்பித்தார். ரவனியாவிடம் (கிராம ஊழியர்) அவர் பின்வருமாறு கூறினார்: ''இந்த பங்கி நாயை நாற்காலியில் உட்கார யார் அனுமதித்தது?'' ரவனியா என்னை நாற்காலியில் இருந்து இறக்கிவிட்டு நாற்காலியை எடுத்துச் சென்றான். நான் தரையில் உட்கார்ந்தேன் விரைவில் கூட்டம் கிராம அலுவலகத்துக்குள் நுழைந்து என்னைச் சூழ்ந்து கொண்டது. சிலர் வசைபாடிக் கொண்டிருக்க, சிலர் என்னை தர்யாவால் (வாள் போன்ற கூர்மையான ஆயுதம்) கண்டதுண்டமாக வெட்டிவிடுவதாக அச்சுறுத்தினர். என்னை மன்னித்து எனக்கு இரக்கம் காட்டும்படி அந்த மூர்க்கத்தனமானக் கூட்டத்திடம் கெஞ்சினேன். எனது கெஞ்சுதல் கூட்டத்தினரிடம் எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. என்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை எனக்கு ஏற்பட்ட கதியையும், இந்தக் கூட்டத்தில் நான் கொல்லப்பட்டால் என் உடலை என்ன செய்ய வேண்டுமென்பதையும் விளக்கி மாம்லத்தாருக்கு எழுதுவது என்ற யோசனை எனக்குத் தோன்றியது. அவர்களுக்கு எதிராக உண்மையிலேயே மாம்லத்தாருக்கு புகார் செய்கிறேன் என்பதை அந்தக் கூட்டம் தெரிந்து கொண்டால் அவர்கள் என்னை விட்டுவிடுவார்கள் என்று நம்பினேன் ரவனியாவிடம் ஒரு துண்டுக் காகிதம் தருமாறு கேட்க அவனும் கொடுத்தான். எல்லோரும் படிக்கும்படியாக பெரிய தடித்த எழுத்தில் என் பேனாவால் பின்வருமாறு எழுதினேன்:

போர்ஸாத் தாலுகா
மாம்லத்தார் அவர்களுக்கு,

ஐயா,

பார்மர் காளிதாஸ் ஷிவ்ராமின் தாழ்ந்த வணக்கங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். இன்றைக்கு மரணத்தின் கொடிய கரம் என்னைத் தாக்குகிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெற்றோர்களின் வார்த்தைகளைக் கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்காது என்னுடைய மரணத்தைப் பற்றி என் பெற்றோர்களுக்குத் தயவு செய்து தெரிவியுங்கள்.''

நூலக அதிகாரி கடிதத்தைப் படித்துவிட்டு உடனே அதைக் கிழித்தெறியும்படி சொல்ல, நானும் அப்படியே செய்தேன். பல்வேறு வசைமொழிகளால் என்னை மூழ்கடித்தார்கள். ''உன்னை எங்கள் தலாத்தி'' என்று அழைக்க வேண்டுமா? நீ ஒரு பங்கி. எனினும் இந்த அலுவலகத்தில் நுழைந்து நாற்காலியில் அமர விரும்பு கிறாய்.'' நான் இரக்கம் காட்டுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண் டேன். ''இவ்வாறு மீண்டும் நடக்காது, இந்த வேலையை விட்டு விடுகிறேன்'' என்று சொன்னேன். இரவு ஏழு மணிவரை என்னை அங்கே வைத்திருந்தார்கள். அப்பொழுதுதான் கூட்டம் கலைந்தது. அதுவரை தலாத்தியோ முக்கியாவோ வரவில்லை பிறகு 15 நாட்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு பம்பாயிலுள்ள என் பெற்றோர் களிடம் திருப்பி வந்தேன்.''

# பாகம் VI

# பலவகைக் குறிப்புகள்

# பாகம் VI

# பலவகைக் குறிப்புகள்

1. பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம்.
2. நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றிய குறிப்புகள்.
3. இந்திய வரலாறு பற்றிய குறிப்புகள்.
4. மனுவும் சூத்திரர்களும்.
5. சமூக ஒழுங்கைப் பாதுகாப்பது.
6. இந்துக்களுடன்.
7. ஏமாற்றம்.
8. அரசியல் ஒடுக்குமுறைப் பிரச்சினை.
9. எது மிக மோசமானது? அடிமைத்தனமா அல்லது தீண்டாமையா?

# I

# பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம்

## 1. அறிமுகம்: தலைப்புப் பொருளின் வரையறைகள்

பிரிட்டிஷ் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 1919 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் என்று அழைக்கப்படும் சட்டத்தினுள் அடங்கியுள்ளது. ஆங்கில அரசியல் அமைப்புச் சட்ட மாணவன் அடிப்படைச் சட்டத்தைத் தேடுவதுபோல் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட மாணவன் தேட வேண்டிய அவசியமில்லை. அவனுடைய நிலைமை பெரும்பாலும் அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்ட மாணவனின் நிலைமை போன்றதுதான். அவனுக்கு அமெரிக்காவின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள சட்டங்களைப் புரிந்துகொண்டு விளக்குவதைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த நோக்கில் பார்த்தால் அரசியல் அமைப்புச் சட்டம் என்றால் என்ன, அதன் வரம்புக்குள் எழக்கூடிய கேள்விகள் என்ன என்ற பிரச்சினைகளை எழுப்புவது தேவையற்றதெனத் தோன்றும் இரண்டாவதாக, அரசியல் அமைப்புச் சட்டம் எனும் தலைப்புப் பொருளின் வரம்புகளை நிர்ணயிக்க வேண்டுமென்பது அவசியம் என்று கருதப்பட்டால், இப்படிப்பட்ட ஆய்வுப் பொருளைப் பற்றிய விவாதத்தின் ஆரம்பமாக அது அமைய வேண்டுமா அல்லது இறுதி பாகமாக அமைய வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. மறைந்த பேராசிரியர் மேய்த்லேண்ட் தம் ஆங்கில அரசியல் அமைப்புச் சட்ட வரலாறு என்ற நூலில் பிந்தைய முறையைப் பின்பற்றியுள்ளார். இந்த முறையை ஆதரித்துச் சொல்ல வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன. எனினும் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட ஆய்வைப் பொறுத்தவரை இந்த முறை பொருந்தாது என்று சொல்வதற்குக் காரணங்கள் உள்ளன.

அரசியல் அமைப்புச் சட்டம் என்றால் என்ன என்ற கேள்வியை ஆரம்பத்திலேயே எழுப்புவதன் மூலம் நாம் ஆய்வுக் கெடுத்துக் கொண்ட பொருளின் வரம்புகளை தெளிவாக உணர முடி

வதோடு ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலம் எந்தெந்த விஷயங்கள் அதனுள் அடங்கும் என்பதும் தெளிவாகும். இந்திய அரசியல் சட்டத்தில் ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணையைப் பற்றியோ, செயலுறுத்தும் ஆணையைப் பற்றியோ, அல்லது நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணை பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. போர்க்காலச் சட்டத்தைக் குறித்தோ அல்லது நிர்வாகச் சட்டத்தைப் பற்றியோ அது ஒன்றும் கூறவில்லை. இந்திய சமஸ்தானங்களுடனான தனது உறவுகளில் இந்திய அரசு சந்தேகத்துக்கு இடமின்றி கையாண்டுவரும் தலைமை அதிகார உரிமையைப் பற்றி ஒன்றும் கூறப்பட வில்லை. இந்தப் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்வது அவசியமா, இல்லையா? - இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆய்வதற்குத் தேவையான விஷயங்கள் அதில் இல்லையா? மற்ற நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களை ஆய்வு செய்த அந்நாடுகளின் வல்லுநர்கள் இந்த விஷயங்களை எப்படிக் கையாண்டுள்ளார்கள் என்பதைப் பார்க்கும்போது இந்த விஷயங்கள் எல்லாம் பொதுவான ஒப்புதல் மூலம் அரசியல் அமைப்புச் சட்ட அதிகார வரம்புக்குட்பட்டதாகக் கருதப்பட்டுள்ளது என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை. எனவே இந்த விஷயங்கள் இந்திய அரசாங்கச் சட்டத்தில் இடம்பெறா விட்டாலும் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிய ஆய்வின் பகுதியாக உள்ளதால் பொருளை நிர்ணயம் செய்வது முக்கியத்துவம் பெறுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் என்றால் என்ன என்ற கேள்விக்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர். ஆஸ்டின் மற்றும் மேய்த்லேண்ட்டை எடுத்துக் கொண்டால் இரு வேறு போக்குகளை அவர்கள் பிரதிபலிக்கின்றனர். அரசியல் நிலைமைகளின் சட்டம் என்று அவர் குறிப்பிடும் பொதுச் சட்டத்தை, அரசியல் அமைப்புச் சட்டம் என்றும் நிர்வாகச் சட்டம் என்றும் இரு உட்பிரிவுகளாகப் பிரிக்கிறார். அரசின் இறையாண்மை அதிகாரத்தை பெற்றிருக்கும் நபர்களை அல்லது நபர்களின் வகுப்புகளை நிர்ணயிப்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டம் என்பது அவர் கருத்து. இந்த நபர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் முறையை அவர் நிர்ணயித்துள்ளார். அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிய ஆஸ்டினின் வரையறுப்பு மேலாண்மை அமைப்பின் கட்டமைப்பையும் அதன் இயைபையும் நிர்ணயிக்கும் விதிகளை மட்டும் கொண்டுள்ளது என்பது தெள்ளத் தெளிவு. இறையாண்மை சபை தன் இறையாண்

மையைச் செயல்படுத்தும் எல்லாவிதச் சட்டங்களையும் அவர் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கிவிடுகிறார். அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தன்னுடைய கோட்பாடுகளின் தர்க்கரீதி யான முடிவுகளைச் சார்ந்திருப்பதாக ஆஸ்டின் நிர்ணயம் செய்யும் போது, மேய்த்லேண்ட் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரம்பு களை மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறார். மேய்த்லேண்டைப் பொறுத்த வரை அரசியல் அமைப்புச் சட்டம் என்பது மேலாண்மை சபையின் இயைபை பற்றிய நியதிகளை நிர்ணயிக்கும் சட்டங்கள் மட்டுமல்லாமல், பிரிட்டனின் பிரிவிக் கவுன்சில், அரசு இலாகாக் கள், அமைச்சர்கள், நீதிபதிகள், அமைதிகாண் நடுவர்கள், ஏழையர் சட்டப் பாதுகாவலர், உடல்நல வாரியங்கள், காவலர் வாரியங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்தக் கண்ணோட் டங்கள் இரு துருவங்களைப் பிரதிபலிக்கின்றன. ஆஸ்டினின் பார்வை மிகவும் குறுகியது என்றால், மேய்த்லேண்ட்டின் பார்வை மிகவும் பரந்தது எனலாம்.

இருப்பினும் ஓர் இடைப்புட்ட நிலையை, பேராசிரியர் ஹாலண்ட் தம் சட்ட நூலில் விளக்கிய கருத்துகளின் அடிப்படை யில் காணலாம். மற்றவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஒருவனுக்குள்ள சட்டத்தகுதியே உரிமையாகும். இத்தகுதி அரசின் சம்மதத்துடனும் உதவியுடனும் பெறப்படுகிறது. ஒரு குடிமகன் இன்னொரு குடிமகனுக்கு அளிக்கும் உரிமை தனியார் சட்டத்தின் பொருளாக அமைகிறது. குடிமக்களுக்கு எதிராக அரசு கோரும் உரிமைகள், அது தனக்கு எதிராக அனுமதிக்கும் உரிமைகள் பொதுச் சட்டம் ஆகின்றன. அரசியல் அமைப்புச் சட்டம் சந்தேகத்துக்கு இட மின்றி பொதுச்சட்டத்தின் பகுதிதான். எனவேதான் குடிமக்களுக்கு எதிரான அரசின் உரிமைகளையும் அரசுக்கு எதிரான குடிமக்களின் உரிமைகளையும் அது விவாதிக்க வேண்டும். ஆனால் அரசியல் அமைப்புச் சட்டம் இதைவிட அதிக உள்ளடக்கம் கொண்டுள்ளது. அரசு அமைப்பைப் பற்றிய ஆய்வு அதில் அடங்கியிருக்க வேண்டும். ஏனெனில் அரசு ஒரு செயற்கையான சக்தி. அது தண்டிப்பதற்கும், சொத்துக்களை வைத்திருப்பதற்கும் ஒப்பந்தங்கள் செய்வதற்கும் உரிமை பெற்றிருப்பதுடன் அதற்கும் குடிமக்களுக்கு இடையேயும் மற்றும் குடிமக்களுக்கிடையேயான உரிமைகளையும் கடமை களையும் ஒழுங்குபடுத்தும் உரிமையையும் கொண்டுள்ளது. இந்தச் செயற்கை சக்தி எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி

ஆய்வு செய்ய வேண்டும். எனவே அரசியல் அமைப்புச் சட்டம் மூன்று விஷயங்களைப் பற்றிய ஆய்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்· 1) அரசின் அமைப்பு முறை, 2) குடிமக்களுக்கு எதிரான அரசின் உரிமைகள், 3) அரசுக்கு எதிரான குடிமக்களின் உரிமைகள். அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரம்பு, மற்றும் சாத்தியப்பாடுகள் குறித்த இந்தக் கண்ணோட்டத்தைத்தான், இந்திய அரசாங்கச் சட்டத்தைப் பற்றிய எனது சொற்பொழிவில் பின்பற்ற நான் தீர்மானித்திருக்கிறேன். இந்தக் கண்ணோட்டத்தைத்தான் பேராசிரியர் ஆன்சன் இங்கிலீஷ் அரசியல் அமைப்புச் சட்ட ஆய்வில் கையாண்டுள்ளார்.

இன்னுமொரு கேள்வியும் எழக்கூடும். அதை ஆரம்பத்திலேயே முடிவு செய்வது நல்லது. இந்த விஷயத்தை வரலாற்று பூர்வமாகக் கையாள வேண்டுமா அல்லது விரிவான விளக்கத்தாலா? இந்திய அரசாங்கச் சட்டத்தைப் பற்றிய ஆய்வில் வரலாற்றை முற்றிலும் தவிர்க்க முடியாது. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிரான பரிகாரங்கள் இந்தியா மந்திரிக்கு எதிராகவும் தொடர்ந்து இருந்து வரும் என்று இந்திய அரசாங்கச் சட்டம் கூறுகிறது. அதிகாரப் பட்டயங்கள் மூலம் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் உயர்நீதி மன்றங்களை நிறுவலாம் என்று இந்திய அரசாங்கச் சட்டம் கூறுகிறது. உச்சநீதி மன்றத்துக்கு மாற்றாக உருவாக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்றங்கள் அதன் எல்லா அதிகாரங்களையும் செயல்படுத்த முடியும் என்று உரிமைப் பத்திரங்கள் கூறுகின்றன. இத்தகைய தன்மைகளைக் கொண்ட பல பிரிவுகளையும் இந்திய அரசாங்கச் சட்டத்திலிருந்து எடுத்துக்காட்டலாம். மேலே குறிப்பிட்ட இரு உதாரணங்களே வரலாறு தவிர்க்க முடியாதது என்பதைக் காட்டப் போதுமானது. ஏனெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசும்போது இந்தியா மந்திரிக்கு எதிரான பரிகாரங்களைப் பற்றிப் புரிந்துகொள்ள விரும்பினால் கிழக்கிந்தியக் கம்பெனிக்கெதிராகக் குடிமக்களுக்குள்ள பரிகாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். உச்சநீதிமன்றத்துக்கு என்ன அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளாமல் உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களைப் புரிந்துகொள்ள முடியாது. ஓரளவு வரலாறு தேவைப்பட்டாலும், இன்றைய நடைமுறையில்

உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிய ஆய்வில் அதன் எல்லாப் பகுதிகளையும் வரலாற்றுப்பூர்வமாக ஆய்வது நியாய மாகத் தெரியவில்லை. எல்லாக் கடந்த காலமும் நிகழ்காலத்துக்கு முக்கியமானதல்ல. ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொள்ள அதை வரலாற்றுப் பூர்வமாக கையாள வேண்டியிருந்தால் அப்பொழுது அதன் தற்காலப் பகுதியாக உள்ளதை மட்டும் சுட்டிக்காட்ட நான் தீர்மானித்திருக்கிறேன்.

*(இந்த விஷயம் குறித்து வேறு எந்தக் கட்டுரையும் எங்களுக்குக் கிடைக்கவில்லை - ஆ-ர்)*

# 2

# நாடாளுமன்ற நடைமுறைகளைப் பற்றிய குறிப்புகள்

ஓர் அமைப்பின் செயல்பாடுகளே அதன் நடைமுறைகளின் வடிவங்களைத் தீர்மானிக்கின்றன.

ஒரு நாடாளுமன்றத்தின் முக்கியமான செயல்பாடுகள் வருமாறு:

(1) ஆட்சித்துறை நடவடிக்கைகளை விமர்சிக்கவும் அவை குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும் உள்ள அதிகாரம்.

(2) சட்டங்கள் இயற்றும் அதிகாரம்.

(3) நிர்வாகச் செலவுகளுக்கான நிதிஆதாரங்களை அளிப்பதற்கான அதிகாரம்.

1. ஆட்சித்துறை எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கவும் விமர்சிக்கவும் உள்ள அதிகாரம். அலுவல் விதிகள்,

1. கேள்விகள் கேட்கவும்,

2. தீர்மானங்கள் முன்மொழியவும்,

3. அவையை ஒத்தி வைக்கத் தீர்மானம் கொண்டு வரவும்,

4. அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரவும், அனுமதிக்கின்றன.

(1) கேள்வி கேட்கும் அதிகாரம்.

விதி 7.

இது கீழ்வரும் வரையறைகளுக்கு உட்பட்டுள்ளது.

## அலுவல் ஏற்பாடுகள்

*(1) முன்னுரிமை வரிசை.*

*1. கேள்விகள் 1 மணிநேரம்: 1/2 மணிநேரம் மானியக் கோரிக்கைகள் மீதான வாக்களிப்பின்போது.*

*2. மசோதாக்கள்.*

*3. நிலை ஆணைகளைத் திருத்துவதற்கான தீர்மானங்கள்.*

*4. தீர்மானங்கள்.*

*எந்த விஷயத்திற்கும் குடியரசுத் தலைவர் முன்னுரிமை அளிக்கலாம்.*

(II) *மசோதாக்கள், பிரேரணைகள், தீர்மானங்கள் ஆகியவைகளுக்கான முன்னுரிமைகள்.*

**(i) *மசோதாக்களும் பிரேரணைகளும்***

*மிகவும் முன்னதாகக் கொண்டுவரப்பட்டவற்றிற்கு பின்னதாகக் கொண்டுவரப்பட்டவற்றை விட முன்னுரிமை அளிக்கப் படுகிறது.*

**(ii) *தீர்மானங்கள்***

*வாக்கெடுப்பின் மூலம் முன்னுரிமை தீர்மானிக்கப்படுகிறது.*

**அவை நடைபெறுவதற்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்கள் (கோரெம்) எண்ணிக்கை**

*பம்பாயில் 25 உறுப்பினர்கள்*

'கோரெம்' இல்லையென்றால் அவைத்தலைவர் அடுத்த நாளைக்கு அவையை ஒத்திப்போடுவார்.

**விதி 27.** *நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) இரண்டு கட்டங்களாகக் கையாளப்படுகிறது.*

(I) பொதுவான விவாதம்; மேலும்

(II) மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு.

பொது விவாதத்திற்கு ஆளுநர் தம் விருப்பப்படி எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் ஒதுக்கலாம்.

பொது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எந்தத் தீர்மானமோ அல்லது பட்ஜெட்டோ வாக்கெடுப்புக்காக சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முடியாது.

**விதி 29, மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு**

மானியக் கோரிக்கைகளுக்கான வாக்கெடுப்புக்கு ஆளுநர் 12 நாட்களுக்கு மிகாமல் அனுமதிக்கலாம். எந்த ஒரு கோரிக்கைக் கும் 2 நாட்களுக்கு மிகாமல் அனுமதிக்க வேண்டும். மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான தீர்க்கப்படாத நிலுவையிலுள்ள எல்லா விஷயங்களையும் முடிவு கட்டுவதற்குக் குறிப்பிட்ட கடைசி நாளன்று தலைவர் எல்லா விவரங்களையும் அவை முன் வைத்து விடுவார்.

**விதி 30.**

ஆளுநர் மேலவைக்குப் பரிந்துரை அனுப்புவதன் மூலமே நிதி ஒதுக்கீடுக்கான பிரேரணைகளைக் கொண்டு வர முடியும். ஏதாவது மானியத்தைக் குறைக்கவோ தள்ளவோ மானியத்தில் ஏதாவது இனத்தை குறைக்கவோ தீர்மானம் கொண்டுவர முடியும் ஆனால் மானியத்தை அதிகரிக்கவோ, அல்லது எந்த இனத்திற் கான மானியமோ அந்த இனத்தை மாற்றவோ முடியாது.

**விதி 31. அதிகப்படியான மானியங்கள்**

*(ஆசிரியரால் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது)*

**விதி 32. துணை அல்லது அதிகப்படியான மானியம்**

தொகை குறைவாக இருக்கும்போது

புதிய திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் நேரும்போது.

### பொதுக்கணக்குக் குழு

**விதி 33** பொதுக்கணக்குக் குழுவின் அமைப்பு
(ஆசிரியரால் வெற்றிடமாக விடப்பட்டுள்ளது)

**விதி 34:** பொதுக்கணக்குக் குழுவின் கடமைகள்:

(1) மானியக்கோரிக்கையின் வரம்புக்குள் தொகை செல வழிக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதும் மேலும் அதை அவை யின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் அதன் கடமைகளாகும்.

## அலுவல் நடைமுறை

இது, நிலை ஆணைகளால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

### 1. மேலவைக் கூட்டத்தொடர்

1. ஆளுநரின் அறிவிக்கை குறிப்பிடும் நேரத்திலும் இடத் திலும் மேலவை கூட்டப்படும்.

2. ஆளுநரின் உத்தரவின் பேரில் கூட்டத்தொடர் முன் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

3. தலைவரின் ஆணையின்படி மேலவை குறிப்பிட்ட நேரங் களில், குறிப்பிட்ட இடங்களில் அமரும்.

### கூட்டத்தொடர் முன்தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் படுவதால் ஏற்படும் விளைவுகள்

கூட்டத்தொடர் முன்தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் படும்போது, நிலுவையிலுள்ள எல்லா முன்னறிவிப்புகளும் காலா வதியாகிவிடும், அந்தக் கூட்டத் தொடருக்கு புதிதாக முன்னறி விப்புகள் தரப்பட வேண்டும். பின்கண்ட விஷயங்களுக்கு மட்டும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும் :

(1) கேள்வி
(2) சட்டம் சம்பந்தப்பட்ட பிரேரணைகள்
3. அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்கள்
4. தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்ட நிலை ஆணைகளைத் திருத்துவதற்கான பிரேரணைகள்

இந்த விஷயங்களெல்லாம் அடுத்தக் கூட்டத்தொடரின் அலுவல் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

## நடைமுறை

### I. கேள்விகள் பற்றி

தலைவர் தம் உசிதம்போல் தீர்மானிக்கும் முறையில் கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் அளிக்கப்படுகின்றன.

### II. ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி

30 உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

4 மணிக்கு தீர்மானம் விவாதிக்கப்படும், விவாதம் 6 மணிக்கு முடிந்து அதன் பிறகு தீர்மானத்தின் மீது எந்தக் கேள்வியையும் எழுப்ப முடியாது.

### III. மசோதாக்கள்

(1) நான்கு கட்டங்கள்

1. அறிமுகம், அவையின் அனுமதி கேட்டல்
2. முதல் வாசிப்பு
3. இரண்டாவது வாசிப்பு
4. மூன்றாவது வாசிப்பு

(1) ஆஸ்திரேலியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 49.

(2) கனடா நாட்டு அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 18.

(3) தென் ஆப்பிரிக்காவின் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 57.

சட்டமன்றங்களுக்குத் தனிச் சலுகை அளிக்கும் எந்தப் பிரிவும் இந்திய அரசாங்கச் சட்டத்தில் இடம்பெறவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு சலுகைகள் மட்டுமே இந்திய அரசாங்கச் சட்டம் அளிக்கிறது.

**I. பேச்சு சுதந்திரம்**

*பிரிவு 67(7)*

இந்திய சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் பேச்சு சுதந்திரம் இருக்கும். எந்த ஓர் அவையில் நிகழ்த்திய உரையின் அல்லது வாக்களிப்பின் காரணமாக எந்த உறுப்பினர் மீதும் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது. அதேபோல் எந்த ஓர் அவையின் நடவடிக்கைகளைப் பற்றி அதிகார பூர்வமான வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதாவது விஷயத்தின் அடிப்படையில் நடவடிக்கை ஏடுக்க முடியாது.

*பிரிவு 72டி(7)*

ஆளுநரின் மேலவையிலும் பேச்சு சுதந்திரம் உண்டு. இத்தகைய மேலவையில் நிகழ்த்திய உரையினாலோ அல்லது வாக்களிப்பினாலோ எந்த உறுப்பினர் மீதும் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது அல்லது அவையின் நடவடிக்கைகளைப் பற்றிய அதிகார பூர்வமான வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள எந்த ஒரு விஷயத்திற்காகவும் உறுப்பினரின் மீது நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்தப் பேச்சு சுதந்திரச் சலுகைக்கு இரண்டு வரையறைகள் உள்ளன.

(1) நிலை ஆணைகள்

(2) அதிகாரபூர்வ அறிக்கை

**II. கைதாவதிலிருந்து சுதந்திரம்**

இந்தத் தனிச் சலுகை இந்திய அரசாங்கச் சட்டத்தால் அளிக்கப்படவில்லை. இந்தியச் சட்டமன்றச் சட்டத்தால் இது அளிக்கப்படுகிறது. அது 1925 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் விதிவிலக்குச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது (எண் 23, 1925)

இந்தச் சட்டத்தின்படி

1 இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சட்டமன்றங்களின் உறுப்பினர்கள் சான்றாயர்களாகவும் தீர்ப்பு

உதவியாளர்களாகவும் பணியாற்ற வேண்டிய பொறுப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப் படுகிறது.

2 சிவில் நடவடிக்கைகளின் மூலம் பின்வரும் சந்தர்ப்பங் களில் யாரையும் கைது செய்யவோ அல்லது சிறையில் தள்ளவோ முடியாது;

*(அ)* அவர் இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் அமைக் கப்பட்ட சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்து, அந்த மன்றத் தின் கூட்டத்தொடர் நடக்கும்பொழுது,

*(ஆ)* இந்த மன்றத்தின் எந்தஒரு குழுவிலும் அவர் உறுப்பினராக இருந்து அந்தக் குழுவின் கூட்டம் ஏதாவது நடந்து கொண்டிருக்கும்பொழுது,

*(இ)* இந்தியச் சட்டமன்றத்தின் இரு அவைகளில் ஒன்றில் அவர் உறுப்பினராக இருந்து இவ்விரு அவைகளின் கூட்டு அமர்வு நடக்கும்பொழுது அல்லது அதன் கூட்டம் நடக்கும் பொழுது அல்லது அந்த இரு அவைகளின் கூட்டுக்குழுவின் கூட் டமோ மாநாடோ நடக்கும்போது மற்றும் இந்தமாதிரிக் கூட்டம் அல்லது அமர்வுக்கு 14 நாட்கள் முன்பும் பின்பும் உள்ள காலக்கெடு வின்பொழுது கைதுசெய்யவோ சிறையில் தள்ளவோ முடியாது.

**கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள்:**

*(1)* சிவில் சட்டப்படி கைது செய்வதிலிருந்து மட்டும் சுதந் திரம்.

*(2)* அந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப் பிறகு மீண்டும் கைது செய்ய முடியும்.

### சட்டமன்றங்களின் நடைமுறைகள்

I. இந்தியச் சட்டமன்றங்களின் நடைமுறைகள் பின்வருப வற்றின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

*(1)* அலுவல் விதிகள்

*(2)* நிலை ஆணைகள்

| | |
|---|---|
| பிரிவு 67(1) | மத்திய சட்டமன்றங்களுக்கான நிலையாணைகள் மற்றும் |
| பிரிவு 67(6) | விதிகளை உருவாக்க வழிசெய்கிறது. |
| பிரிவு 72 (டி) 6 | ஸ்தல சட்டமன்றங்களின் நிலையாணைகள் |
| பிரிவு 73 டி (7) | மற்றும் விதிகளை உருவாக்க வழிசெய்கிறது. |

II விதிகள் மற்றும் நிலை ஆணைகளை இயற்றும் அதிகாரம் சட்டமன்றங்களுக்கு இல்லை.

டொமினியன் அரசுகளுக்கு அது உள்ளது.

இந்தியாவில் பிரிவு 129 அ ஆல் இந்த விஷயம் தீர்மானிக்கப் படுகிறது.

கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபை விதிகளையும் நிலை ஆணைகளையும் பிறப்பிக்கிறது.

**நிலை ஆணை மற்றும் விதிகளுக்கிடையேயான வேறுபாடுகள்**

1. விதிகளை மாற்றவோ ரத்துசெய்யவோ மத்திய அல்லது தல இந்தியச் சட்டமன்றங்களினால் முடியாது.

2. சில நிபந்தனைகளுக்குட்பட்டு நிலை ஆணைகளை திருத்த முடியும்.

**விதிகள் மற்றும் நிலை ஆணைகளின் மாறுபட்ட நோக்கங்கள்**

இரு கேள்விகள்:

1. ஒரு சட்டமன்றம் எந்த விஷயங்களை விவாதிக்கலாம், அதனுடைய வரையறைக்குட்பட்ட விஷயங்கள் என்ன, எந்த விஷயங்களை அது விவாதிக்க முடியாது?

2. ஒரு விஷயம் அதனுடைய அதிகார வரம்பிற்குட்பட்டது என்று வைத்துக் கொண்டால், அந்த விஷயத்தை எப்படி விவாதிப்பது? அதை எப்படி விவாதத்திற்கு உரிய பிரச்சினையாக மாற்றுவது? எந்த வரிசையில் உறுப்பினர்கள் அதைப் பற்றிப் பேசுவது? பேசுவதில் யாருக்காவது முன்னுரிமை உண்டா? எப்படி வாக்கு

களைப் பதிவு செய்வது? எப்படி அவைகளை எண்ணுவது? எப்படி அதை மதிப்பீடு செய்வது?

முதல் கேள்வி, அலுவல் விதிகளினால் தீர்மானிக்கப்படுகிறது. இரண்டாம் கேள்வி, நிலை ஆணைகளினால் தீர்மானிக்கப்படுகிறது. சட்டத்தின் சொற்களில் சொல்வதென்றால்

அலுவல்களின் போக்கை அலுவல் விதிகள் ஒழுங்குபடுத்துகின்றன. அலுவல்கள் நடைபெற வேண்டிய முறையை நிலையாணைகள் ஒழுங்குபடுத்துகின்றன

**அலுவல் விதிகளும் நடவடிக்கைச் சுதந்திரமும்**

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான சுதந்திரத்தை அலுவல் விதிகள் அளிக்கின்றனவா?

**விதி 8.** பொதுமக்களைப் பாதிக்கும் விஷயத்தைப் பற்றி தகவல்கள் பெற, கேள்விகள் கேட்கலாம். யாரிடம் கேட்கப்படுகிறதோ அவருடைய விசேஷ கவனத்தில் (அவரால் கையாளப்படும் விஷயங்கள் சம்பந்தமானவைப் பற்றி) உள்ள விஷயங்களைப் பற்றி மட்டும் கேள்வி கேட்கப்பட வேண்டும்.

**முன்னறிவிப்புக்கான காலக்கெடு**

(அ) ஸ்தல அரசுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள் குறித்த கேள்விகளைத் தலைவர் அனுமதிக்க மறுக்கலாம்.

(ஆ) தலைவரால் அனுமதிக்கப்பட்ட ஒரு கேள்வியை பின்வரும் காரணங்களுக்காக ஆளுநர் அனுமதி மறுக்கலாம்:

(i) மேன்மை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தின் அல்லது இந்திய அரசின் அல்லது ஆளுநரின், ஆளுநரது நிர்வாக சபையின் எந்த ஒரு வெளிநாட்டுடனான உறவுகளைப் பாதிக்கும் விஷயங்கள்

(ii) மேன்மைதங்கிய மன்னர்பிரான் அதிகாரத்தின் கீழுள்ள எந்த ஒரு சமஸ்தான மன்னருடன் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள ஆட்சியாளர்கள் கொண்டுள்ள உறவுகளைப் பாதிக்கும் விஷயங்கள் அல்லது, அந்த சமஸ்தான மன்னர் மற்றும் தலைவன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அல்லது அந்த மன்னர் அல்லது தலைவனின் ஆட்சிப் பகுதிகளில் நடைபெறும் நிர்வாக விஷயங்கள்.

(III) மேன்மை தங்கிய மன்னர்பிரானின் ஆட்சிக்குட்பட்டுள்ள ஏதாவது நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் விஷயம்.

குறிப்பு - ஏதாவது ஐயப்பாடு தோன்றுமானால், ஆளுநரின் முடிவே இறுதியானது.

*(இ)* கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபைக்கும் அல்லது இந்தியா மந்திரிக்கும் அல்லது ஸ்தல அரசுக்கும் ஏற்படும் கருத்து வேறுபாட்டின்போது நடந்த உண்மைகளை பற்றி மட்டுமே கேள்வி கேட்கப்பட வேண்டும் நடந்த உண்மைகள் பற்றிய விளக்கம் மட்டுமே பதிலாக அமைய வேண்டும்

## (ii) தீர்மானங்கள் கொண்டுவரும் உரிமை

**விதி 22-23.**

**விதி 23.** *(1)* எல்லாத் தீர்மானங்களும் அரசுக்கு அளிக்கும் ஒரு குறிப்பிட்ட ஆலோசனையாக இருக்க வேண்டும்.

*சட்டரீதியான தடைகள்*

கேள்வி கேட்க முடியாத ஒரு விஷயத்தைப் பற்றி தீர்மானம் கொண்டுவர முடியாது.

**விதி 22.** தீர்மானங்கள் கொண்டுவருவதற்கான உரிமைக்கு சட்டபூர்வமான தடைகள் உள்ளதைத் தவிர, எந்தத் தீர்மானத்தையும் முன்னறிவிப்புக்கான காலக்கெடுவுக்குள் ஆளுநர் மறுக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். அதாவது முக்கியமாக அந்த விஷயம் தல அரசுக்கு சம்பந்தமில்லாத விஷயம் என்று கருதினாலும் அல்லது பொதுமக்களின் நலனுக்கு பாதகமானது என்ற அடிப்படையிலும் தீர்மானத்தை மறுக்க முடியும்.

*தீர்மானங்களுக்கெதிரான தடைகள்*

விதி 24 ஏ. தீர்மானங்கள் கொண்டுவருவதற்கான விதிகளின் படி கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைத் தவிர வேறு எந்தவிதத்திலும் பொதுநலன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றி எந்தவித விவாதங்களும் நடைபெற முடியாது. தலைவர் மற்றும் இந்தப் பிரேரணை எந்தத்துறை சம்பந்தப்பட்டதோ அந்தத் துறையின்

மாண்புமிகு உறுப்பினரின் சம்மதத்துடன் கொண்டுவரும் தீர்மானங்கள் இதற்கு விதிவிலக்கு ஆகும்.

2. தீர்மானம் நிறைவேற்ற முடியாத எந்த விஷயத்தைக் குறித்தும் பிரேரணை கொண்டுவர அனுமதி அளிக்க தலைவருக்கோ அந்தத் துறையின் பொறுப்பை வகிக்கும் மாண்புமிகு உறுப்பினருக்கோ உரிமை கிடையாது.

### (iii) அவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம்

*விதி 11 மற்றும் 12.*

**விதி 11:** பொதுநல முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தை விவாதிப்பதற்காக அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க பிரேரணைக் கொண்டு வரலாம்.

விதி 12: இதற்கு பின்வரும் வரையறைகள் உள்ளன:

(i) ஒரே ஒரு தடவைதான் ஓர் அமர்வில் இவ்வாறான தீர்மானத்தைக் கொண்டுவர முடியும்.

(ii) ஒரே ஒரு விஷயத்திற்கு மேல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது. அண்மையில் நிகழ்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வைப் பற்றி மட்டுந்தான் அது இருக்கவேண்டும்.

(iii) ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட விஷயத்தைத் தீர்மானம் திரும்பவும் எழுப்பக்கூடாது, மறுபடியும் புத்துயிருட்டக் கூடாது.

(iv) ஏற்கெனவே பொருள்பட்டியலில் உள்ள விஷயத்தைக் குறித்தும் தீர்மானம் இருக்கக்கூடாது அல்லது ஏற்கெனவே முன்னறிவிப்பு கொடுத்த விஷயத்தைப் பற்றி இருக்கக் கூடாது.

1. தீர்மானம் கொண்டுவர வாய்ப்பில்லாத விஷயம் குறித்து பிரேரணை கொண்டுவர முடியாது.

2. அவைத் தலைவர் அனுமதி அளிக்க வேண்டும்.

### (iv) நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

**விதி 12 ஏ:** ஓர் அமைச்சருக்கு எதிராக அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அமைச்சரின் கொள்கைக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

# 3

# இந்திய வரலாறு பற்றிய குறிப்புகள்

**(கையெழுத்துப் பிரதிகளிலிருந்து பிரசுரிக்கப்படுகிறது - ஆ-ர்)**

## I

நவீனகால துருக்குமெனியர்களைப் போன்ற தோற்றங் கொண்ட மத்திய ஆசியாவின் நாடோடி இனத்தவர்களான சாகர்கள் மற்றும் யூ-சி-க்களின் வெற்றிகளே இந்திய வரலாற்றின் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும்[1]. இலி ஆற்றுப்படுகைகளில் வாழ்ந்ததாக சாகர்களைப் பற்றி முதலில் கேள்விப்படுகிறோம். யூ-சி- இனத்தவர் முன்னேறிச் சென்று அவர்களை விரட்டிய பிறகு, அவர்கள் தெற்கு நோக்கி நகர்ந்து சுமார் கி மு. 150 வாக்கில் வடமேற்கு இந்தியாவை வந்தடைந்தனர். இங்கு அவர்கள் பல குறுநில அரசுகளை உருவாக்கினர். சத்ராப் என்ற பட்டத்தைப் பெற்றிருந்த அவர்கள் சிலகாலம் பார்த்தியர்களின் மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. சாகர்கள், யவனர்கள் அல்லது பல்லவர்கள் ஆகிய வெளிநாட்டு மன்னர்களிடம் மேற்கிந்தியா பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இவர்களுடைய எல்லைகளும் அவர்களுக்கிடையே இருந்த உறவுகளும் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தன. இந்தக் குறுநில அரசுகளில் சவுராஷ்ட்ரா (கத்தியவார்) மற்றும் அண்டைப் பகுதிகளையும் சேர்ந்த பெரிய சதிராப்தான் மிக முக்கியமானதாக இருந்தது. கி.பி. 395 வரை இக்குறுநில அரசு நிலைத்திருந்தது.

சுமார் கி.மு.100ல் சீனாவின் எல்லைப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்ட யூ-சி இனத்தவர் தங்களுக்கு முன்பு குடியிருந்த சாகர்களை விரட்டிவிட்டு பாக்ட்ரியாவில் தங்கிவிட்டனர். இங்கு வாழ்ந்துவந்த பல்வேறு பழங்குடிகளில் ஒன்றான குஷானர்களின் தலைவனான கட்பிசஸ் மற்ற பழங்குடிமக்களின்மீது தன்ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் வெற்றிகண்டான் இவர்கள் ஒன்றிணைந்து உருவான நாடே குஷான் என்ற பெயருடன் விளங்கியது. குஷானப் பேரரசரின் காலத்தைக் கணிப்பது இந்திய வரலாற்றில் ஒரு சிக்க

1 மொழி சம்பநதமாகக கூற முடியாது. குஷானாகள அலலது யூ-சி இனததவாகள ஈரானிய மொழியை உபயோகித்ததாக அணமை ஆராய்சசிகள கூறுகினறன

வான கேள்வியாக உள்ளது. விவரமான விவாதத்திற்கு இங்கு போதிய இடமில்லாததால் நிகழ்ச்சிகள் நடைபெற்ற தேதிகள் நம்பிக்கையுடன் கொடுக்கப்பட்டுள்ளன. உண்மையின் அடிப்படையில் மேலும் தெளிவுகள் கிடைக்க வேண்டும் என்ற ஆசையில் கொஞ்சம் தயக்கத்துடனேயே இந்தத் தேதிகள் அளிக்கப்பட்டுள்ளன. முதலாம் கட்பிசஸ் (கி.பி.15-45) தனது பேரரசைப் பலப்படுத்திக் கொண்டபிறகு தனது படையைத் தெற்குநோக்கி செலுத்தி காபூலை வெற்றிகொண்டதுடன் அநேகமாக காஷ்மீரையும் வென்றான் எனலாம். அவனுக்குப் பின் வந்த இரண்டாவது கட்பிசஸ் (கி.பி.45-78) வடசிந்து, பஞ்சாப், உள்ளிட்ட வடமேற்கு இந்தியா முழுவதையும் இணைத்துக் கொண்டான். காசியையும் கூடச் சேர்த்துக் கொண்டான் என்று கருதப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் ரோமானியப் பேரரசுடன் இந்தியாவிற்கு வாணிப உறவுகள் கணிசமான அளவு வ்ளர்ந்திருந்தன. கட்பிசஸுக்கு பின்வந்த கனிஷ்கர் (கி.பி.78-123) ஒரு தூதுக் குழுவை ட்ரோஜனுக்கு அனுப்பி வைத்தார். இந்தப் பேரரசரும் பிற்காலத்திய புத்தமத வரலாற்றில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கிறார். அசோகர் பண்டைய காலத்தில் புத்த மதத்திற்கு ஆற்றிய சேவையுடன் இதனை ஒப்பிடலாம்.[1] பார்த்தியர்கள் மற்றும் சீனர்களுடன் கனிஷ்கர் போர்த் தொடுத்தார் பெஷாவரைத் தலைநகராகக் கொண்டிருந்த இவரது பேரரசு ஆப்கானிஸ்தான், பாக்ட்ரியா, காஷ்கர், யார்கண்ட், கோட்டான்[2] மற்றும் காஷ்மீரைக் கொண்டிருந்தது. கிழக்குப் பகுதியில் கயா வரை பரந்துகிடந்த இந்த அரசுகள் அவருக்குப் பின்வந்த ஹுவிஷ்கர் (கி.பி 123-140) மற்றும் வாசுதேவர் (கி.பி.140-178) ஆகியவர்களின் ஆட்சியில் தொடர்ந்து இருந்துவந்தன. இதற்குப் பிறகு குஷான் மற்றும் ஆந்திரப் பேரரசுகள் இந்திய அரசியல் சக்திகள் என்ற நிலையிலிருந்து வீழ்ந்து விட்டன. இருப்பினும் குஷான அரசர்கள் காபூலில் தொடர்ந்து ஆட்சியில் இருந்தனர். அவர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் தெரியாவிடினும், பெர்சிய நாட்டின் சசானித்களின் வளர்ச்சிக்கு இது தொடர்புடையதாக இருக்கலாம். ஒரு நூற்றாண்டுக்கு மேல் இந்திய அரசியல் வரலாறு வெற்றிடமாகவே காட்சியளிக்கிறது. சாகர்கள் பேரரசின் கீழ் சவுராஷ்ட்ரா அரசு இருந்தது என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

---

1 இரண்டு கடபிசஸ் அரசர்களும் முநதையவர் கனிஷ்கர் என்றும் அவர் ஆடசி செய்தது சுமாரா கி மு 58 என்றும பளீட மறறும பரோங் கருதுகிறாாகள

2 சீன ஜெனரல் பான-சாவோவிடம் கி பி 90 ஆம் ஆண்டில இந்தப் பிராந்தியத்தில அவர் தோற்றுப் போனதாகத தெரிகிறது ஆனால் 15 ஆண்டுகள கழித்து அவர் நல்ல வெற்றி பெற்றார்

குப்தப் பேரரசின் தோற்றத்துடன் ஒளி திரும்பத் தோன்ற ஆரம்பிக்கிறது. புத்த மதத்திற்கு எதிரான போக்கையும், நவீன இந்து மதத்தின் ஆரம்பத்தையும் குறிப்பதாக இக்காலத்தைக் கூறலாம். மௌரியர்களின் தலைநகராக விளங்கிய பண்டைய பாடலிபுத்தரத்தைப் பற்றி நமது சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு எந்தச் செய்தியும் இல்லை அந்நகரம் நீடித்து வந்தது. கி.பி. 320 ஆம் ஆண்டில் முதலாம் சந்திரகுப்தர் என்ற உள்ளூர் அரசர் தனது அரசை விரிவுபடுத்திக் கொண்டு தனது முடிசூட்டு விழாவைக் கொண்டாடி குப்தர்களின் காலத்தை வரலாற்றில் தொடங்கி வைத்தார். அவருடைய மகன் சமுத்திர குப்தர் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றதுடன் கி.பி 340 ஆம் ஆண்டில் முடிந்த ஒரு விசேஷப் போர் நடவடிக்கைகளின் மூலம் தீபகற்பத்தின் பெரும்பகுதியையும் தமது அதிகாரத்துக்குள் கொண்டு வந்தார். இந்தப் பகுதிகளையெல்லாம் தமது ஆட்சியில் வைத்துக் கொள்ள அவர் அக்கறையெடுத்துக் கொள்ளாவிட்டாலும் மேற்கில் ஹுக்ளி யிலிருந்து யமுனை மற்றும் சம்பல் நதிக்கரைகள் வரையும். இமாலயத்திலிருந்து நர்புதா வரையிலும் உள்ள பகுதி கள் அவருடைய அதிகாரத்தில் இருந்தன அவருடைய மகன் இரண் டாவது சந்திரகுப்தர் அல்லது விக்கிரமாதித்தர் ஏற்கெனவே உள்ள பகுதிகளுடன் மால்வா, குஜராத், கத்தியவார் ஆகிய பகுதிகளை இணைத்துக் கொண்டார். ஓர் அரை நூற்றாண்டுக்காலம், ராஜபுதன மற்றும் சிந்து பிராந்தியங்களைத் தவிர வட இந்தியா முழுவதிலும் குப்தர்களின் ஆட்சி அமைதியான முறையில் தொடர்ந்த நடந்து வந்தது. ஆரம்பத்தில் அவர்களின் தலைநகரம் பாடலிபுத்தரமாக இருந்தாலும் பிறகு கௌசாம்பியும் அயோத்தியும் அரசு குடும் பங்கள் வசிக்கும் நகரங்களாகி விட்டன.

ஹுணர்கள் என்று அழைக்கப்படும் எப்தலைட்டுகள்[1] அல்லது காட்டுமிராண்டிகளான வெள்ளை ஹுணர்களின் படை யெடுப்பால் குப்தப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. இவர்கள் ஐரோப் பாவைத் தாக்கிய ஹுணர்களின் ஒரு பிரிவாக இருக்கலாம். இந்தப் பிரிவு ஆசியாவில் தங்கி வட பெர்ஷியாவில் குடியேறியது முதன் முதலாக கி.பி.455 ஆம் ஆண்டில் அவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தனர். ஆனால் அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். கி.பி.490 ஆம் ஆண்டில் திரும்பவும் அதிகப்படைகளுடன் படை

1 மூலத் தகவலகளுக்கு வினசெனட ஸ்மித்தின் ''இநதியாவின் பண்டைய வரலாறு'', என்ற நூலைப பார்க்க, 1908, பக்கம 401

யெடுத்து குப்தர்களை வீழ்ச்சி அடையச் செய்தனர் கி பி.540 ஆம் ஆண்டு வரை அவர்களது அரசர்களான தோரமனன் மற்றும் மிகிர குலன் வட இந்தியாவில் ஆட்சி நடத்தினர். அவர்களது தலை நகரம் பஞ்சாபிலுள்ள சியல்கோட்டாக இருந்தாலும், பனியான் மற்றும் பால்கில்தான் நகரங்களில்தான் அவர்களது தலைமை ஆட்சி அலுவலகங்கள் இருந்தன. மிகிரகுலனின் கொடுமைகள் இந்து அரசர்களிடையே ஒரு கூட்டணியை உருவாக்க வகை செய்தது. சுமார் கி.பி.565 ஆம் ஆண்டில் ஹூணர்கள் வடக்கே விரட்டப்பட்டனர். சுமார் கி.பி.565ல் பெர்ஷியர்கள் மற்றும் துருக் கியர்களின் கூட்டுப்படைகள் அவர்களுக்கு முடிவுகட்டின. அவர் கள் நிரந்தர அரசை நிறுவவில்லை என்றாலும் அவர்களுடைய படையெடுப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் களுடைய அரசியல் ஆதிக்கம் மறைந்துவிட்டாலும் குர்ஜார்கள் (குஜார்கள்) போன்ற பல பழங்குடி இனத்தவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர். மேற்கு இந்தியாவின் மக்கட்தொகை வளர்ச்சிக்குச் சாகர்கள் மற்றும் குஷானர் போன்று இவர்களும் துணை புரிந் திருக்கிறார்கள். முக்கியமாக ராஜபுத்திர இனத்தின் வளர்ச்சியைக் குறிப்பிட வேண்டும்.

ஹூணர்களின் தோல்வியைத் தொடர்ந்து மீண்டும் ஓர் இருண்ட காலகட்டத்தைக் காண்கிறோம் ஆனால் 7 ஆம் நூற் றாண்டின் ஆரம்பத்தில் தானேசரத்தைச் சேர்ந்த அரசன் ஹர்ஷர் (கி.பி. 606 - 647) முப்பத்தைந்து ஆண்டுப் போர் நடவடிக்கைளுக்குப் பிறகு ஓர் அரசை நிறுவினார் குப்த பேரரசைப் போன்று செல்வச் செழிப்புடன் பரந்து விரிந்து கிடந்த இவ்வரசு அவருடைய வாழ் நாள் முடியும் வரைகூட நீடிக்கவில்லை. சீன யாத்திரிகர் யுவான் சுவாங் கனாஜிலுள்ள இவரது அரசவையைச் சென்று பார்த்து எழுதிய குறிப்பிலிருந்து வங்காளம், அஸ்ஸாம், உஜ்ஜயினி நாட்டு அரசர்கள் இவருடைய அதிகாரத்தின் கீழ் இருந்ததையும் பஞ்சாப், சிந்து, காஷ்மீர் அரசுகள் சுதந்திர அரசுகளாக இருந்ததையும் தெரிந்து கொள்கிறோம். வங்காளத்துக்குத் தெற்கே இருந்த கலிங் கத்தின் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர். எனினும் தக்காணத்தைச் சேர்ந்த சாளுக்கிய அரசனான இரண் டாவது புலிகேசியை ஹர்ஷரால் வெற்றி கொள்ள முடியவில்லை.

தென்னாட்டின் வரலாற்றையும் இப்பொழுது நாம் கொஞ்சம் பார்க்கலாம் வரலாற்று நிகழ்ச்சிகள் மற்றும் காலநிர்ணயத்தைப் பொறுத்தவரையில் வடநாட்டைவிட தெளிவற்ற நிலைமையில்தான் தென்னாடும் இருந்தது. ஆனால் திராவிட நாடுகளில் மக்கள் வாழ

வில்லை என்றோ அல்லது காட்டுமிராண்டிகள்தான் வாழ்ந்தார்கள் என்றோ நாம் நினைத்துவிடமுடியாது. ஐரோப்பாவைச் சேர்ந்த பண்டைய கிரேக்க, இலத்தீன் எழுத்தாளர்கள்கூட இந்நாடுகளைப் பற்றி ஓரளவு தெரிந்திருந்தார்கள். பாண்டிய அரசன் கி மு.20ல்[1] அகஸ்டஸின் அரசவைக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியிருந்தான். பிளினி[2] மதுரையைப் பற்றிக் குறிப்பிடுகிறான். தாலமி மற்றும் 40 ஆசிரியர்கள் இந்த நகரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அகஸ் டஸுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கோவில் மஜ்ரிசில் எழுப்பப்பட்ட தாகக் கூறப்படுகிறது. கிராங்கண்ணூர்தான் மஜ்ரிஸ் என்று தெரிய வந்துள்ளது. மிகவும் பண்டைய காலத்திலிருந்தே தென்கோடி யில்[3] சேர, சோழ, பாண்டிய அரசுகள் இருந்தன என்பது தெரிய வருகிறது. முதலாவது குறிப்பிட்ட அரசு மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டிருந்தது. இன்றைய திருவிதாங்கூரின் மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்ததுதான் சேர அல்லது கேரள அரசு. மைசூரின் பெரும் பகுதிகளையும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய பகுதிகளையும் கொண்டிருந் தது சோழ அரசு. சென்னை மாகாணத்தின் வடபகுதியிலிருந்து வந்த பல்லவர்கள் கி.பி. ஆறிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை ஒரு நான்காவது சக்தியாகத் திகழ்ந்தனர். அவர்களுடைய தலை நகரம் காஞ்சிபுரத்தில் இருந்ததுடன் எப்பொழுதும் அவர்கள் மற்ற மூன்று அரசுகளுடனும் போரிட்டு வந்தனர். நரசிம்ம வர்மன் (கி.பி.625-648) சோழ அரசின் பெரும்பகுதியையும் தக்காணத் தின் ஒரு பகுதியையும் ஆண்டு வந்தான். ஆனால் கி பி.750ல் அது வலிமை இழந்தது. எனினும் அதேநேரத்தில் சோழர்களின் பலம் அதிகரிக்க ஆரம்பித்தது. சென்னை மாகாணம் மற்றும் மைசூர் அடங்கிய ராஜராஜனின் அரசு (கி.பி 985 - 1018) தென் னாட்டில் பேரரசாகத் திகழ்ந்தது 13வது நூற்றாண்டு வரை இது நீடித்தது.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல ஆந்திரர்கள் தக்காணத்தை கி.மு. 220 லிருந்து கி.பி.236 வரை ஆண்டு வந்தனர். அடுத்த மூன்று நூற்றாண்டுகளுக்கு எந்த நிகழ்வுகள் பற்றியும் தெரிய

1 ஸ்ட்ராபோ XV 4 (73)

2 வரலாறு VI 23 (26)

3 அசோகரின் கல்வெட்டுகள் நான்கு அரசுகளைப் பற்றிக கூறுகினறன. பாண்டியா, கேரளபுத்திரா, சோழர் மறறும் சதயபுத்திரா

வில்லை பீஜப்பூரில் வாதாபியில் (பாதாமி) சாளுக்கிய பேரரசு தோன்றும்வரை ஒரு தகவலும் இல்லை இந்தப் பேரரசைச் சேர்ந்த ஹர்ஷரின் சமகாலத்தவரான இரண்டாம் புலிகேசி (608-642), ஒரு போட்டி பேரரசை உருவாக்குவதில் சிலகாலம் வெற்றி பெற்றார். குஜராத்திலிருந்து சென்னை வரை அது பரந்திருந்தது. பெர்ஷிய அரசன் இரண்டாம் குஸ்ருவின் அரசவைக்குத் தூதுக் குழு பரிமாற்றம் செய்யும் அளவுக்கு அவர் பெரும் அதிகாரம் பெற்றிருந்தார். அஜந்தா சுவர் ஓவியங்களால் இது தீட்டப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால் கி.பி 642 ல் பல்லவர்களால் அவர் தோற்கடிக்கப்பட்டு வெட்டிச் சாய்க்கப்பட்டார்.

புலிகேசியின் ம்ரணத்துடன் ராஜபுத்திரர்கள் காலத்தை ஹர்ஷர் தொடங்கி வைத்தார். இது கி.பி.650 லிருந்து 1000 வரை நீடித்தது. பெயருக்கு இந்து அரசர்களின் ஆட்சி நடைபெற்றதாகக் கூறப்பட்டாலும் பல வேளைகளில் வடநாட்டின் மீது போர்த் தொடுத்த இந்துக்களல்லாத நாடோடி இனமக்களின் வம்சாவழி யினராலும், இந்துக்கள் அல்லாத நாடோடி மன்னர்களாலும் ஆளப்பட்ட பல அரசுகளின் ஆட்சி நடைபெற்றது இந்தக் கால கட்டத்தின் முக்கிய அம்சமாகும். அவைகளில் பின்வரும் அரசு களைக் குறிப்பிடலாம்:

1. கனோஜ் அல்லது பாஞ்சால அரசு ஹர்ஷரின் மறைவுக் குப் பிறகு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது. ஆனால் கி.பி.840 லிருந்து 910 வரை போஜராஜனின் மற்றும் அவரது மகனின் கீழ் வடபீகாரிலிருந்து சிந்துவரை பரவிய அந்த அரசு இந்தியா வின் ஒரு முக்கிய அரசாக விளங்கியது பன்னிரண்டாம் நூற்றாண் டில் கார்வார் அரச குடும்பத்தின் கீழ் அது மீண்டும் முக்கியத் துவம் பெற்றது.

2 கி.பி.730-ல் தோன்றிய புத்த அரசர்களின் வழியில் வந்த வங்காளத்திலுள்ள பாலாஸ் அரசுடன் கனோஜ் அரசு அடிக்கடி போர் தொடுத்தது கனோஜ் அரசனைப் பட்டமிழக்கச் செய்யும் அளவுக்குச் சக்தி வாய்ந்த அரசனாக தர்மபாலா (கி.பி. 800லிருந்து) விளங்கினான். பிறகு பாலா அரசின் கிழக்குப்பகுதி தனியாகப் பிரிந்து ஒரு போட்டிப் பேரரசு சேனர் என்ற பெயரில் உருவானது.

3. ஜமுனாவுக்குத் (யமுனாவுக்குத்) தெற்கே உள்ள மாவட்டங்களில் ஜெஜக்கபுக்தி (பண்டெல்கண்ட்) மற்றும் சேடி(மத்திய மாகாணங்களுக்குச் சமமானது) என்று அழைக்கப்பட்ட பகுதிகளில் சந்தால் மற்றும் கல்ச்சூரி அரச பரம்பரையினரால் ஆளப்பட்டு வந்தன. முதலாவது குறிப்பிடப்பட்டவர்கள் ஆதிகோண்டர்கள் என்று கருதப்படுகிறது. அவர்கள் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர். அவர்கள் கட்டிய நினைவுச் சின்னங்களில் கஜுராஹோ குறிப்பிடப்பட வேண்டியதாகும் கீர்த்திவர்மன் (1049-1100) தம் ஆட்சியின் எல்லைகளை மிகவும் விரிவுபடுத்தினார். கல்வி வளர்ச்சிக்கு மிகப் பாடுபட்டதோடு உருவக நாடகங்களை ஊக்கப்படுத்தினார். அவருடைய அவையில்தான் பிரபோசந்த்ரோதயம் என்ற நாடகம் அரங்கேறியது.

4. மாளவத்தைச் சேர்ந்த பரமாரர் (பவார்) அரச வம்சமும் இதேபோன்று இலக்கிய மறுமலர்ச்சிக்கு பேராதரவு அளித்த அரசு என்று புகழ்பெற்றிருந்தது. முன்ஜா (974-995) மற்றும் போஜா (1018 -1060) அரசர்கள் சிறந்த போர் வீரர்களாக விளங்கியதுடன் சிறந்த இலக்கிய ஆசிரியர்களாகவும் திகழ்ந்தனர்.

## II

## சாகர்கள் காலம்

கனிஷ்கரால் துவக்கப்பட்ட சாகர்கள் காலம் கி.பி.78 ஆக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர் ஸ்மித் ஆரம்பத்தில் கருதினாலும் இறுதியில் கி பி.120 என்று முடிவு செய்ததை நாமும் பின்பற்றலாம்.

முக்கியமான குஷான அரசர்கள் யாருக்குப்பின் யார் ஆட்சி செய்தனர் என்று வரிசைப்படுத்துவதில் இன்னும் பல ஐயப்பாடுகள் உள்ளன. கட்பிசஸ் (குஜுல கர கட்பிசஸ்) மற்றும் இரண்டாம் கட்பிசஸ் (வீமாகட்பிசஸ்) அவர்களுக்குப் பிறகே கனிஷ்கரின் காலம் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரு கட்பிசஸ் அரசர்களில் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்ட்ரிய

நாட்டு சிதியன் டாக்டர் ஸ்மித்தின் கருத்துப்படி கி.பி.40ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். பார்த்திய இளவரச னான கோண்டோபாரசிடமிருந்து தட்சசீலம் மற்றும் காந்தார நாடு களை வென்று தன்வசம் ஆக்கிக் கொண்டான். இந்தப் பாத்திய அரசன்தான் புனித தாமஸை வரவேற்றதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்தக் கூற்று ஐயத்துக்கிடமானதாக இருக்கிறது. அவ ருடைய மகன் (78-110) வீமா கங்கை சமவெளியின் மேற்குப் பகுதியின் பாதியையும் மற்றும் பஞ்சாபையும் இணைத்துக் கொண்டு தனக்கு ஒரு பேரரசை உருவாக்கிக் கொண்டான்.

கட்பிசஸ் அரசர்களுக்கும் கனிஷ்கருக்கும் இடையில் ஒரு பத்தாண்டு இடைவெளி உள்ளது. கனிஷ்கர் வஜேஷ்கர் என் பவரின் மகனாவார் அவர் கட்பிசஸ் அரசர்களுடைய உறவின ரல்லர் அவர் பாக்ட்ரியாவிலிருந்து வரவில்லை, கோட்டாணி லிருந்து வந்ததாகவே கருதப்படுகிறது. அவர் கோடைகாலத்தை பரோப்பானிலுள்ள கபிசியிலும்[1] பனிக்காலத்தைப் புருஷபுரத் திலும் (பெஷாவர்) கழித்தார். அவருடைய பேரரசின் (மையம்)[2] கிரேக்க ரரானிய நாடுகளின் மத்தியில் இருக்கவில்லை.

கனிஷ்கப் பேரரசு நீண்டகாலம் நிலைத்து நிற்கவில்லை. அவருடைய இரண்டு மகன்களில் வசிஷ்கர் மற்றும் ஹவிஷ்கர் ஆகியவர்களில் ஹவிஷ்கர் மட்டுமே அவருக்குப் பின் உயிர் வாழ்ந்தார்.

மூன்றாம் நூற்றாண்டில் கனிஷ்கப் பேரரசு காபூல் மற்றும் காந்தாரத்தை உட்கொண்ட பாக்ட்ரியாவாகக் குறுகிற்று; அவர்கள் சசனித்களின் கட்டுப்பாட்டுக்குள்ளானார்கள்.

**ஷத்ரப்பாக்கள் அல்லது சத்ராப்புகள்**

யூ-சி மக்களின் படையெடுப்பால் தங்களது நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட சாகர்கள் இரண்டு அரசுகளை நிறுவினார்கள். அவர் கள்தான் இந்த ஈரானிய பட்டங்களை பெற்றிருந்தனர்.

1 கையெழுத்துப் பிரதியில எழுத்துகள காணபபடவிலலை - ஆசிரியர்

2. கறையான் அரிக்கப்பட்டதால சோககப்பட்டது - ஆசிரியர்

i) முதல் அரசு சவுராஷ்டிராவில்(கத்தியவாரில்) நிறுவப் பட்டது. இந்த அரசப் பரம்பரையில் வந்த அரசர் சஸ்தான குஷானர் களின் செழிப்பான நாட்களுக்கு முன்பு மாளவத்தைத் தம் அரசில் கொண்டிருந்தார். அவர் கனிஷ்கரின் கீழ் ஒரு சிற்றரசனாக இருந் தார். இந்தியப் பண்பாட்டின் தொட்டிலான உஜ்ஜயினி அவர் அதிகாரத்தில் இருந்தது.

ii) ஆந்திரர்களின் பரம்பரை விரோதிகளாக இருந்த இரண் டாவது அரச பரம்பரை க்ஷகரதர் என்ற பட்டத்தை பெற்றிருந்தது. நவீன சூரத் மற்றும் பம்பாய் நகரங்களுக்கு இடைப்பட்டிருந்த மகராஷ்டிரப் பகுதியை இவர்கள் ஆண்டு வந்தனர். இந்த பின் குறிப்பிடப்பட்ட சாகர் அரசுதான் சதகர்ணியால் வீழ்த்தப்பட்டது உஜ்ஜயினியின் சத்ராப் ருத்ரமன் ஆந்திர அரசனை வென்றவுடன் முந்தையவர் இதற்கு ஏற்பாடு செய்தார் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கிடையேயான விரோதப் போக்குகளுக்குக் கொள்கை வேறுபாடுகளும் ஒரு காரணமாக இருந்ததாகத் தெரிகிறது. சாகர் கள் இந்தியாவிலுள்ள எல்லா சித்தியர்கள் அல்லது செரிந்திய தோர்கான்களைப் போன்று தாங்கள் வெளிநாட்டில் தோன்றியதால் புத்தமதத்தின் மீது அனுதாபம் கொண்டிருந்தனர், ஆனால் ஆந்திரர் கள் பிராமணியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

## குப்தர்கள்

மூன்றாம் நூற்றாண்டில் வரலாற்று நிகழ்ச்சிகள் வெளிச் சத்துக்கு வராததால் குஷானப் பேரரசைப் பற்றி அதிக விவரங்கள் கிடைக்கவில்லை.

கி.பி.318-319 ஆம் ஆண்டுகளில் பண்டைய நாடான மகதத் தில் குப்த அரசு என்ற புதிய அரசு தோன்றிய பிறகு வரலாற்றிலே ஒளி திரும்பியது.

குப்தர்கள் - இரண்டாவது சந்திரகுப்தர் மாளவம், குஜராத் மற்றும் சவுராஷ்டிரா (கத்தியவார்) நாடுகளை வெற்றி கொண்டதுடன் உஜ்ஜயினியின் சாகர் அரசகுடும்பத்தைச் சேர்ந்த முதலாம் பெரும் சத்ராப்பை வீழ்த்தினார் பாடலிபுத்திரத்திற்குப் பதிலாக அயோத் தியை மற்றும் கௌசாம்பியை தனது தலைநகரங்களாக ஆக்கினார். சுமார் கி.மு.155ல் சிந்துநதியின் கீழ்ப்பிராந்தியத்தையும் கத்திய

வாரையும் வெற்றி கொண்டதுடன் ராஜபுதனத்திலும், ஔத்திலும் போர் நடத்தினார், ஜமுனாவிலுள்ள மதுராவைக் கைப்பற்றிக் கொண்டார்; பாடலிபுத்திரம் வரை படையெடுத்தார்.

புஷ்யமித்ரனிடம் அவர் பெரும் தோல்வி அடைந்தார். பார்த்தியாவுக்கும் இந்தியாவுக்கும் எல்லையாக வடக்கில் பாக்ட்ரியனா இருந்தது, பார்த்தியாவிலிருந்து தாக்குதலுக்கான வாய்ப்புகள் இதனால் குறைந்திருந்தது. இருப்பினும் முதலாம் மித்ரதேத்தஸ் என்ற ஒரு பார்த்திய அரசர் இருந்தார் (171-136). 138 வாக்கில் அவர் தட்சசீலம் என்ற நாட்டை தனது அரசுடன் சில ஆண்டுகள் இணைத் திருந்தார்.

## பார்த்தியா மற்றும் பாக்ட்ரியா நாடுகளது சுதந்திரத்தின் முடிவு

இந்தியாவுக்கு வெகுதொலைவில் மங்கோலிய ஸ்டெப்பி புல்வெளிகளில் ஏற்பட்ட பழங்குடி மக்களின் இடப்பெயர்ச்சி களினால் ஏற்பட்ட ஒரு புதிய படையெடுப்பால் பார்த்தியா மற்றும் பாக்ட்ரியா நாடுகள் தங்கள் சுதந்திரத்தை இழக்க வேண்டிவந்தது.

சுமார் கி.மு.170ல் நாடோடி சித்தியர்கள் யூ-சி- அல்லது தொக்கரியர்கள் கோபியிலிருந்து (தற்போதைய கன்சு) விரட்டப் பட்டபோது ஹியாங்- அல்லது ஹூணர்கள் நாடுவிட்டு இஷ்டப் படியான வேற்றிடம் செல்ல ஆரம்பித்தனர் ஆசியாவில் ஏற்கெனவே இருந்த சமூக நிலையில் இது ஒரு பெரும் ஆட்டத்தைக் கொடுத்தது.

பெர்ஷியப் பேரரசின் வடக்கில் தங்கியிருந்த ஈரானியமய மாக்கப்பட்ட சித்தியர்களை வீழ்த்தியதுடன் அவர்களுடைய மேய்ச் சல் பகுதிகளான ஐசுரேட்சுக்கு வடக்கில் தங்கிவிட்டனர். சுமார் கி.மு.140 மற்றும் 120க்கும் இடையில் பார்த்தியா மற்றும் பாக்ட்ரியா வில் இருந்த கிரேக்க ஆட்சியின் எச்சமிச்சங்களைச் சாகர்கள் முடிவுக் குக் கொண்டு வந்தனர். யூ-சூன் இன மக்களால் தோற்கடிக்கப்பட்ட தோகரியர்கள் அக்சஸில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். அதற்குப் பிறகு இந்தியா வாயிலுக்கு அருகே எல்லா கிழக்கு ஈரானிய சாகர்களின் நாட்டையும் எடுத்துக்கொண்டனர். கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் அந்த நுழைவாயில் தோன்றியது.

யூ-சி இன மக்களை ஒன்றிணைத்த குஷானர்கள் அரச வம்சமே இந்தியாவின் மீது ஆக்கிரமிப்பு நடத்தி தங்களுடைய

ஆட்சியை தங்களது இனமக்களான பார்த்தியாவிலுள்ள சாகர்கள் மீதும் மற்றும் பஞ்சாப் மக்கள் மீதும் ஏற்படுத்தியது.

இந்த வழியில் வந்த முக்கியமான அரசரான கனிஷ்கர் பட்டத்திற்கு வந்தது கி.மு. 57 அல்லது கி.பி.200 என்ற முடிவற்ற நிலையில் இருந்தது.

சிபரானி லிவி குறிப்பிடுவதுபோல புஷ்யமித்ரன் அரண் மனை தலைமை அதிகாரி.

மூன்றாவது ஆன்டியோசோஸால் கி.மு.(261-246) ஆளப் பட்டு வந்த செலுசிட் பேரரசு பார்த்தியா மற்றும் பாக்ட்ரியா மாகாணங்களை இழந்தது. அவை ஒன்றாக விடுதலையடைந்தன இந்தியர்கள் பகல்வர்கள் என்று அழைக்கும் பார்த்தியர்கள் துருக் மெனிய புல்வெளியிலுள்ள நாடோடிக் கூட்டங்களுக்கு உறவினர் கள். காஸ்பியனுக்கு தென்கிழக்குப் பகுதியை ஆண்டு வந்தனர். பார்த்தியர்களை ஒட்டியிருந்த பாக்ட்ரியர்கள் வடகிழக்கில் இந்துக் குஷ் மற்றும் ஆக்ஸஸ் மத்தியில் தங்கி இருந்தனர். அவர்களது நக ரங்கள் எண்ணிக்கையிலும் செல்வச் செழிப்பிலும் மிகப் பிரபல மானவையாக இருந்தன. ஆன்டியோசோஸ் மற்றும் அவரது வாரிசுகள் இரண்டாம் செல்யூகஸ் (கி மு.246-226) மற்றும் மூன்றாம் செல்யூகஸ் (கி.மு. 226-223) ஆகியோரின் கஷ்டங்களைச் சாதக மாக்கிக் கொண்டு மேற்குப் பகுதியில் நுழைந்தனர்.

அர்சாசெஸ்ஸால் தலைமைதாங்கி நடத்தப்பட்ட பார்த்தி யர்களின் புரட்சி ஒரு இயற்கையான நிகழ்வுதான். அவர்தான் பெர்ஷியாவை ஏறத்தாழ 500 ஆண்டுகள் ஆண்டுவந்த அரச பரம் பரையை உருவாக்கியவர்.

ஒரு கிரேக்க மாகாணத்தலைவன் டியோட்டஸின் அதிகார ஆசையின்விளைவே பாக்ட்ரியாவின் எழுச்சி என்று சொல்லலாம். டியோட்டலை ஆசியாவின் மத்தியில் தோன்றிய கிரேக்க இனப் பண்பாட்டு எழுச்சியின் சின்னம் எனலாம்

இந்தோ-ஈரானிய எல்லையில் தோன்றிய இந்த துடிப் புள்ள நாடுகள் அசோக பேரரசை அவரின் வாரிசுகளின் காலத்தில் ஆட்டம் காணவைத்தன

பஞ்சாப் ஒரு காலத்தில் பெர்ஷிய நாட்டு மாகாணமாகவும் பிறகு அலெக்சாண்டரின் கீழ் ஒரு மாகாணமாகவும் இருந்து வந்தது. ஊக்கமும் துடிப்பும்மிக்க சிற்றரசுகள் அதன் வாயிலிலேயே உருவாகியதால் தாக்குதலுக்கு எப்பவும் அது ஆளாக வேண்டியிருந்தது முதலாம் இரண்டாம் டியோட்டஸுக்குப் பிறகு பாக்ட்ரியாவின் மன்னனாக வந்தவன் எத்திதெமஸ்; அவன் சிரியாவின் அன்டியோ சோஸுடன் போர் தொடுத்தான். சுமார் 208ல் பாக்ட்ரியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்ததற்குப் பிறகு அமைதி ஏற்பட்டது. தகராறுகளின் போது சிறிய துருப்புகள் இந்துக்குஷ்ஷை கடந்து வந்து காபூல் பள்ளத்தாக்கில் சுபகசேனா அரசனுக்கு பெரும் தொல்லை அளித்தன எத்திதெமோஸின் மகன் டெமட்ரியஸ் தற்போதைய ஆப்கானிஸ்தானமாக இருக்கும் பகுதியில் தனது ஆட்சியை விரிவுபடுத்தியதுடன் இந்தியாவிலும் செல்வாக்கை அதிகரிப்படுத்திக் கொண்டான்; கி மு. (200-190)ல் இந்தியர்களின் அரசன் என்ற பட்டமும் பெற்றான் கி.மு. 190 - 160 ஆம் ஆண்டுகளுக்கிடையே பாலியோன் மற்றும் அகதோகிலஸ் என்ற கிரேக்க துணிச்சல்கார வீரர்கள் தட்சசீலத்தை ஆண்டனர். ஏறத்தாழ கி.மு. 160 லிருந்து 140 வரை உண்மையான கிரேக்கரான மைலிந்தர் அல்லது மினாந்தர் என்பவர் காபூல் மற்றும் பஞ்சாப் பகுதிகளை ஆட்சி செய்தார். அவர் புத்தமத வரலாற்றில் அழியாத இடம் பெற்றுள்ளார்.

## III

## ஹூணர்கள்

குமாரகுப்தரின் கடைசி ஆண்டுகளில் புதிய ஈரானிய மக்கள் அந்தப் பேரரசைத் தாக்கினர்; ஆனால் எல்லையுடன் நிறுத்தப்பட்டனர். ஸ்கந்தகுப்தரின் காலத்தில் அதே எல்லைகள் வழியாகத் தடுக்கமுடியாதபடி குடியேற்றக்காரர்கள் அலை அலையாக நுழைந்தனர் நாடோடி மங்கோலிய இனத்தைச் சேர்ந்த இவர்களை இந்தியர்கள் **ஹூணர்கள்** என்ற பெயரில் அழைத்தனர் ஐரோப்பாவைத் தாக்கியவர்கள் இவர்கள்தான் என்பதை நாம் காண்கிறோம்.

ஐந்தாம் நூற்றாண்டின் மத்திய காலத்திற்குப் பிறகு இந்தியாவை அடைந்தவர்கள் எப்தலைட்டுகள் எனப்படும் வெள்ளை ஹூணர்கள் ஆவர். அடில்லாவின் கோடூரமான சீடர்களாக இல்லாமல் இவர்கள் துருக்கியர்கள் போன்றிருந்தார்கள் ஆக்ஸஸ் பள்ளத்தாக்கில் தங்கிய பிறகு அவர்கள் பெர்ஷியாவையும் காபூலையும்

பிடித்துக் கொண்டனர். சில ஆண்டுகள் ஸ்கந்தகுப்தர் அவர்களை விரட்டி அடித்தார் (கி.பி.455). எனினும் கி.பி.488ல் சசனித் பிரோஸை வெட்டிக் கொன்ற பிறகு எந்த இந்திய அரசாலும் அவர்களை நிறுத்த முடியவில்லை. வெள்ளை ஹூணர்களில் தோரமனன் என்பவர் கி.பி.500ல் மாளவத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டார். அவருடைய மகனான மிகிர்குலன் பஞ்சாபிலுள்ள சகோலைத் (சியால்கோட்) தலைநகரமாக அமைத்துக் கொண்டார்.

ஒரு இந்திய அரசகுமாரர் யெசோதர்மன் மிகிர்குலனின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். ஹூணர்களை முற்றிலுமாக வெளியேற்றுவதில் வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியாது. இந்து சமவெளிப் பள்ளத்தாக்கில் பலர் தங்கிவிட்டனர்.

இந்தக் குழப்பங்களுக்கிடையே 7 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸதன்விஸவராவில் (டில்லி அருகே தனேஸ்வரம்) ஒரு சிற்றரசு உருவாகியது. ராஜா பிரபாகர் வர்த்தன் என்ற வீரமிக்க அரசர் ஓர் அரசை தோற்றுவித்தார். குர்ஜர்கள், மாளவியர்கள் மற்றும் இதர அண்டை அரசுகளுக்கு இணையாக தலைநிமிர்ந்து அந்த அரசு நின்றது. அவருடைய மரணத்திற்குப் பிறகு (கி.பி.604 அல்லது 605ல், வங்காள தேசத்து கவுடா அரசனின் உத்தரவால் அவர் மகன் கொலை செய்யப்பட்டான். அவருடைய இளைய சகோதரர் ஹர்ஷர் முடிசூட்டப்பட்டார்.

# 4

## மனுவும் சூத்திரர்களும்

*(டாக்டர் அம்பேத்கர் கைப்பட எழுதிய 31 பக்கக் கட்டுரை இது. இந்த அத்தியாயத்திற்கு தலைப்பு இல்லை. கட்டுரை முற்றுப் பெறவில்லை. தலைப்பு நாங்கள் கொடுத்ததே - ஆசிரியர்.)*

## I

மனுவின் திட்டத்தின்படி சதுர்வர்ணத்திற்கு உள்ளே உள்ள வர்கள், சதுர்வர்ணத்திற்கு வெளியே உள்ளவர்கள் என இரண்டு முக்கியமான சமூகப் பிரிவுகள் உள்ளன என்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். இன்றைய தீண்டப்படாதவர்கள் சதுர்வர்ணத்திற்கு வெளியே உள்ளவர்களின் நகல்கள்தான். சதுர்வர்ணத்திற்கு உட் பட்டவர்கள் வெளியே உள்ளவர்களுக்கு நேர்மாறானவர்கள். அவர் களை பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் மற்றும் சூத்தி ரர்கள் என்ற நான்கு வேறுபட்ட வகுப்பினரைக் கொண்ட ஒரு கூட்டு அமைப்பு எனலாம். சமுதாயச் சிந்தனையை விட வகுப்பைப் பற்றிய எண்ணமே மேலோங்கி ஆட்சி செலுத்தும் ஓர் அமைப்பு இந்து சமுதாய அமைப்பு. அது, வகுப்பினர்களிடையே சமத்துவ மின்மையை அடிப்படையாகக் கொண்டது. எனவே தனி மனிதர் களுக்கிடையே ஏற்றத் தாழ்வை அடிப்படையாககக் கொண்டது. தெளிவாகச் சொல்வதென்றால், பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் மற்றும் அந்தியஜாஸ், (தீண்டப்படாத வர்கள்) என்ற வகுப்பினர்கள் எல்லோரும் சமநிலையில் அதாவது ஒரே மட்டத்தில் உள்ளவர்களாக இல்லை. அவர்கள் படிநிலை யில் அதாவது ஒருவரை விட ஒருவர் உயர்வான நிலையில் இருக் கிறார்கள். இந்தக் கூற்றை எந்த இந்துவும் மறுக்க மாட்டார். ஒவ் வொரு இந்துவுக்கும் இது நன்கு புரியும். இதைப்பற்றி ஏதாவது ஐயம் கொள்பவராக யாராவது இருப்பாராகில், அவர் வெளி நாட்டவராகத்தான் இருக்க முடியும் ஆனால் வெளிநாட்டவருக்கு ஏற்படும் ஐயப்பாடு இந்து சமூகத்தின் தலைமைச் சிற்பியான மனுவின் சட்டத்தைப் புரட்டிப் பார்த்தால் கரைந்துபோகும். அந்தச்

சட்டங்களின் அடிப்படையில்தான் இந்து சமூகமே கட்டப்பட்டுள்ளது. அவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக, இந்து சமூகம் ஏற்றத்தாழ்வுக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் கட்டப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க, மனு ஸ்மிருதியிலிருந்து தேவையான வாசகங்களை எடுத்தெழுதுகிறேன்

## II

மனு ஸ்மிருதியில் மனுவால் விதிக்கப்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுநிலை, வரலாற்று முக்கியத்துவம் மட்டுமே உள்ள ஒரு நிகழ்வு என்று வாதிடக்கூடும். அது பழைய வரலாறு, மற்றும் இன்றைய இந்துக்களின் வாழ்க்கை நடைமுறையில், அதற்கு எந்த விதத் தொடர்பும் இல்லை என்றும் கூறலாம். இதைவிடப் பெரும் தவறு வேறு இருக்க முடியாது என்று நிச்சயமாகக் கருதுகிறேன். மனு நியதி என்பது ஒரு கடந்தகால நடைமுறையல்ல. தற்காலத்தின் இறந்தகாலத்தைவிட அது அதிகமெய்யானது. அது 'வாழ்ந்துவரும் கடந்தகாலம்'. எனவே எந்த நிகழ்காலத்தையும் போலவும் அது ஓர் உண்மையான நிகழ்கால விஷயந்தான்.

மனு நிர்ணயித்திருந்த ஏற்றத்தாழ்வுக் கோட்பாடு பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே இந்த நாட்டின் சட்டமாக இருந்தது என்பது பல வெளிநாட்டவர்களுககுத் தெரியாமலிருக்கலாம். இதுதான் உண்மையான நிலை என்பதை சில விவரக் குறிப்புகளே தெளிவாகக் காட்டும்

மராட்டியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் ஆட்சியின்போது, பேஷ்வாக்களின் தலைநகராக இருந்த புனா நகரத்திற்குள் மாலை 3 மணியிலிருந்து காலை 9 மணிவரை தீண்டப்படாதவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில், ஒன்பதுக்கு முன்பும் மூன்றுக்குப் பிறகும் அவர்களுடைய உடல்கள் நீண்டநிழல்களை ஏற்படுத்தியதே இதற்குக் காரணம். இந்த நீண்ட நிழல்கள் ஒருபிராமணரின் மீது பட்டுவிட்டால் அவர் குளித்துத் தனது தீட்டைப் போக்கிய பிறகே உணவு அருந்தவோ, தண்ணீர் குடிக்கவோ முடியும். இதே போன்று மதில் சுவரால் அரண் செய்யப்பட்ட நகரங்களுக்குள், தீண்டப்படாதவர்கள் வசிக்க அனுமதிக்கப்படவில்லை., கன்று

காலிகளும், நாய்களும் சுதந்திரமாக நகருக்குள் நுழைய அனுமதிக்கப் பட்டாலும், தீண்டப்படாதவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.[1]

மராட்டியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் சட்டப்படி தீண்டப் படாதவர்கள், தரையில் துப்புவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் எச்சிலை ஓர் இந்து மிதித்தால் அவர் தீட்டுக் குள்ளாகக்கூடும். எனவே எச்சிலை துப்புவதற்காக தீண்டப்படாத வர் தன் கழுத்தில் ஒரு பானையைக் கட்டிச் செல்ல வேண்டு மென்ற விதி இருந்தது. தனது காலடித் தடத்தை அழித்து விட ஒரு புதர்ச் செடியை இழுத்து செல்ல வேண்டுமென்றும் இருந்தது. ஒரு பிராமணன் வருவது தெரிந்தால் தீண்டப்படாதவன் தரை யில் குப்புறப்படுத்து தனது நிழல் பிராமணன் மீது விழுவதைத் தவிர்க்க வேண்டுமென்ற நிலையும் இருந்தது.[2]

ஒருவன் தாழ்த்தப்பட்டவன் என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவன் கழுத்தைச் சுற்றியோ, இடுப்பைச் சுற்றியோ கறுப்புக் கயிறு அணிய வேண்டுமென்ற விதி மகாராஷ்டிராவில் நிலவி வந்தது.

குஜராத்தில், தீண்டப்படாதவர்கள் தங்களை வேறுபடுத்திக் காட்டும் சின்னமாக, ஒரு கொம்பை அணிய வேண்டுமென்ற கட் டாயம் இருந்தது.[3]

பஞ்சாபில் ஒரு தெருக் கூட்டுபவன் தெருவில் நடந்து செல்லும் போது தான் ஒரு துப்புரவு பணியாளன் என்பதை வெளியார் அறிந்து கொள்ள தனது அக்குளில் ஒரு துடைப்பத்தை வைத்திருக்க வேண்டும்.[4]

பம்பாயில், தீண்டப்படாதவர்கள் சுத்தமான துணிகளை உடுத்த அனுமதிக்கப்படவில்லை. கந்தல் துணிகளையே உடுத்த வேண்டும். தீண்டப்படாதவர்களுக்குத் துணிகள் விற்கும்போது,

---

1 டாக்டர் மர்ரே மிச்சல் - இந்தியாவின முககிய மதஙகள, பக்கம 63

2. பமபாய கெஜெட்டீர் ( அரசிதழ), தொகுதி XII, பககம் 175

3 என் சி ஆா மறறும் இ தொகுதி IX, பக்கம 636 (பி)

4 பஞ்சாப குடிமதிபபுப புளளிவிவரத தொகுதி, 1911, பக 413

அந்தத் துணிகளை கந்தலாக்கியும் அழுக்கடையச் செய்தும் விற்பதில் கடைக்காரர்கள் கவனமாக இருந்தார்கள்.

மலபாரில் தீண்டப்படாதவர்கள் ஒரு மாடிக்கு அதிகமான மாடிகளுடன் வீடுகள் கட்ட அனுமதிக்கப்படவில்லை.[1] இறந்தவர் களை எரியூட்டவும் அனுமதிக்கப்படவில்லை.[2]

குடை எடுத்துச் செல்லவும், காலணிகள் அணியவும், நகை கள் அணியவும், பசுக்களிடமிருந்து பால் கறக்கவும், நாட்டில் சர்வசாதாரணமாகப் புழங்கும் மொழியை உபயோகிக்கவும் மலபாரிலுள்ள தீண்டப் படாதவர்கள் அனுமதிக்கப்படவில்லை.[3]

தென் இந்தியாவில் தீண்டப்படாதவர்கள் இடுப்பிற்கு மேலே எந்தத் துணியும் அணியக் கூடாது என்று திட்டவட்ட மான விதியிருந்தது. தீண்டப்படாத பெண்மக்களும் உடலின் மேற் பகுதியை மூட அனுமதிக்கப்படவில்லை.[4]

பம்பாய் மாகாணத்தில் சோனர்கள்(பொற்கொல்லர்கள்) தங்கள் வேஷ்டியைத் தார்பாய்ச்சி உடுத்திக் கொள்ள அனுமதிக்கப் படவில்லை.[5] ஒருவருக்கு வணக்கம் தெரிவிக்கையில் 'நமஸ்காரம்' என்ற வார்த்தையை உபயோகிக்க அவர்களுக்கு அனுமதி அளிக்கப் படவில்லை.[6]

---

1 படடாசசாாயா - பககம் 259

2 சென்னை மககட் தொகைக் கணககெடுப்பு 1891, பககம 299

3. படடாச்சார்யா - இந்து சாதிகள பக்கம் 259

4 செனனை மக்கட் தொகைக கணககெடுப்பு, 1891, பக்கம 224.

5 இநத மாதிரி வேஷ்டி கட்டுவது பிராமணர்களுக்கு மட்டுமே உரித்ததாக இருந்தது சூத்திராகள மடிப்பிலலாமல வேடடி கடடினாாகள

6 மனு தாமம் நாடடின சடடமாக இருந்ததா, இலலையா என்பதைச் சிறபபாக விளக்கும் இநதக கடிதம் வாசகாகளுககுச் சுவையாக இருககும்

தமுல்செட டிரிமபக்செடடுக்கு,

பொற்கொல்லர்களின் சாதித் தலைவருககு,

''மேல் சபையின மாணபுமிகுத தலைவா பொறகொல்லாகள் 'நமஸ்காரம்' எனறு வணககத்தைத் தெரிவிப்பதைத் தடை செயய வேண்டும என்று கருதுவதால், இந்த உத்தரவையும், தீர்மானததையும அந்தச சாதியினர் முழுவதுக்கும் அறிவிககவும் அது கண்டிபபாக பினபற்றபபடுவதைக கணகாணிககவும் இவ்வாறு உங்களுக்கு உத்தரவிடப்படுகிறது

பம்பாய மாளிகை
9 ஆகஸ்டு 1779

உததரவுபபடி
(ஒப்பம்) டபிளயூ பேஜ்
அரசுச் செயலாளர்

(தொடாசசி அடுதத பககம்)

மராட்டியர்களின் ஆட்சியில் பிராமணர்களைத் தவிர மற்ற வர்கள் வேத மந்திரங்களை உச்சரித்தால் நாக்கை வெட்டிவிடும் தண்டனை வழக்கத்தில் இருந்ததால் சட்டத்தை மீறி வேதத்தை உச்சரித்த துணிச்சலுக்காக பேஷ்வாவின் ஆணையினால் பல சோனர் களின் நாக்குகள் வெட்டப்பட்டதாக அறிகிறோம்.

இந்தியா முழுவதும் பிராமணர்களுக்குத் தூக்குத் தண்டனை யிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது அவன் ஒரு கொலை செய் திருந்தாலும் தூக்குத் தண்டனை விதிக்க முடியாது.

பேஷ்வாக்களின் ஆட்சியில் குற்றவாளிக்கு அவர்களின் சாதி யின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டது. தீண்டப்படாத் வர்களுக்கு எப்பொழுதும் மரண தண்டனையும், கடின உழைப் பும் தண்டனையாக அளிக்கப்பட்டு வந்தன.#

பேஷ்வாக்களின் ஆட்சியில் பிராமண எழுத்தர்கள் வாங்கும் பண்டங்களுக்கு சில வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு இறக்குமதி செய்யப் பட்ட தானியங்களை ஓடங்களில் கொண்டுவருவதற்கு கூலி கிடையாது பிராமண நிலக்கிழார்களின் நிலங்களுக்கு மற்ற வகுப்பினர்கள் செலுத்தவேண்டிய வரியை விடக் குறைவாகவே விதிக்கப்பட்டுள்ளது. வங்காளத்தில் நிலத்

---

(முனபககத் தொடர்ச்சி)

**அரசுத் தீர்மானம்**

**28 ஜுலை, 1779**

''வணககததைத தெரிவிககும முறைகளில ஒன்றான 'நமஸகாரம்'' என்பதைப பொறகொலலர்கள உபயோகபபடுததுவது தவறு எனறு பிராமணாகள தெரிவிபபதுடன், பொற்கொல்வர்களுக்கு இதற்கு உரிமை இல்லை என்றும், இது இந்து மத உரிமைக்ளின் மீறல் எனறும், இதனமூலம் அவாகள புனிதத தனமையைக கெடுககிறாாகள என்றும பிராமணாகள பலமுறை புகார்கள அளிததுளளனா பொறகொலலர்கள் 'நமஸ்காரம'' என்று வணககம சொல்லும் முறையைத் தடைசெய்யவேண்டும என்று பேஷவாவும தலைவருக்கு எழுதியுளளாா இந்த இரணடு சாதிகளுககும் இடையேயான தகராறைத தீர்கக வேண்டும் எனற முடிவுடன், பிராமணர்களின் புகாரில காரணம இருப்பதாகத தெரிவதால் பொற்கொலலர்கள 'நமஸ்காரம்'' எனபதை உபயோகிககககூடாது எனறு அறிவிககப்படுகிறது கம்பெனியின நலனைப் பாதிக்கக்கூடிய விஷயம் இது இலலை எனபதால் நமமுடைய தீர்மானததை அறிமுகப்படுதத விரும்பும பேஷவாவுககுத் தலைவரின வாழத்துகளின அடிககுறிப்பாக இதைக கொடுக்கவும ''

# ஜி பி பாரெஸ்டு, 'மவுண்டு ஸ்டூவர்டு எலபினஸ்டனின்' அதிகாரபூாவமான கட்டுரை

திற்கான குத்தகை அதை அனுபவிப்பவரின் சாதியைப் பொறுத்திருந்தது. தீண்டப்படாதவர் அதிகமான குத்தகை கொடுக்க வேண்டியிருந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்போ, அல்லது சில ஆண்டுகளுக்கு பின்போ மனு பிறந்திருந்தாலும் இந்த விவரங்கள் அவர் இன்னும் மடிந்துவிடவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்து அரசர்கள் ஆட்சியில் இருந்தபோது இந்துக்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே, தீண்டப்படாதவர்கள் மற்றும் தீண்டத்தக்கவர்களுக்கும் இடையேயான உறவுகள் மனுவின் சட்டப்படி தீர்மானிக்கப்பட்டன. அந்தச் சட்டம் வெளிப்படையாகவே ஏற்றத்தாழ்வின் அடிப்படையில்தான் அமைந்து இருந்தது.

## III

இதைத்தான் மனுதர்மம் எடுத்துரைக்கிறது. அது மானவ தர்மம் என்று அழைக்கப்படுகிறது அதனுடைய உள்ளார்ந்த சிறப்பினால் எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும், எல்லா மக்களுக்கும் அது பொருத்தமானது என்று கருதப்படுகிறது. இந்தியாவுக்கு வெளியே அது வழக்கத்தில் இல்லாதது ஒரு சாபமா அல்லது வரமா என்பதை நான் ஆராயப்போவதில்லை. இந்த மானவ தர்மத்தின்படி பிராமணர்களுக்கு எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படுவதுடன் சூத்திரர்களுக்கு மனிதப் பிறவி என்ற உரிமைகூட வழங்கப்படவில்லை. பிராமணன் அவனது உயர்ந்த பிறவியின் காரணத்தினால் மட்டுமே, மற்ற எல்லோரையும் விட எல்லா விஷயத்திலும் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சூத்திரன் எல்லோருக்கும் கடைசியில் தள்ளப்பட்டதுடன், அவனுடைய மதிப்பு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அவனுக்கு எந்த சமூக அந்தஸ்தும் கிடையாது.

இந்த மானவ தர்மத்தின் வெட்கம்கெட்ட தன்மையையும் இழிவையும் அம்பலப்படுத்துவதற்கு அதைத் தலைக்கீழாக திருப்பிக் காட்டுவதைத் தவிர வேறு சிறந்த வழியில்லை. இப்பணியை

கல்வியாளரும், அரசியல்வாதியும் சமூகச் சீர்திருத்தவாதியுமான டாக்டர் ஆர்.பி.பராஞ்சபேயை விட வேறு யாரும் சிறப்பாகச் செய்து விடவில்லை எனத் துணிந்து கூறலாம். இதுகுறித்து அவர் தெரிவித்துள்ள கருத்துகளை முழு வதுமாக அளிப்பதில் மிக்க மன நிறைவு பெறுகிறேன்.

## எதிர்காலத்தைப் பற்றிய ஒரு பார்வை[1]

பம்பாய், சென்னை ராஜதானி மற்றும் மத்திய மாகாணங் களில் ஆட்சி புரிந்து வந்த பிராமணர்கள் அல்லாத கட்சிகளுக்கு எதிராக எழுதப்பட்டது இந்தக் கட்டுரை. அரசுப் பணிகளில் ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு, வகுப்பினருக்கு மட்டும் ஏகபோகம் இருக்கக்கூடாது என்ற தெளிவான குறிக்கோளின் அடிப்படையில் தான் பிராமணர்கள் அல்லாதவர்களின் கட்சிகள் துவங்கப்பட்டன. இந்தியாவில் எல்லா மாகாணங்களிலும் சமஸ்தானத்தில் எல்லாத் துறைகளிலும் அரசுப் பணிகளில் அனேகமாக பிராமணர்களின் ஆதிக்கமே முற்றிலும் ஏகபோகமாக இருந்தது. வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் என்று அறியப்பட்ட கொள்கையைப் பிராமணரல்லாத கட்சியினர் முன்வைத்தனர் அதாவது குறைந்த தகுதியுடையவர் களை அரசுப் பணிகளில் வேலைக்கு அமர்த்தும்போது பிராமண வகுப்பினரைச் சேர்ந்தவர்களை விட பிராமணர்கள் அல்லாதவர் களுக்கே அதிக முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற கோட்பாடு தான் அது. இந்தக் கொள்கையில் எந்தவிதத் தவறும் இருப்பதாக என் பார்வையில் தெரியவில்லை. ஒரு தனிப்பட்ட வகுப்பினரின் கைப்பிடியில், அந்த வகுப்பினர் எவ்வளவுதான் புத்திசாலிகளாக இருந்தாலும், ஒரு நாட்டின் நிர்வாகத்தையே கொடுப்பது சந்தேகத் துக்கிடமின்றி தவறு என்று கூறலாம்.

ஒரு நல்ல அரசு ஒரு திறமையான அரசை விடச் சிறந்தது என்ற கருத்தைப் பிராமணர்கள் அல்லாதவர்களின் கட்சி கொண் டிருந்தது. ஆனால் இது சட்டமன்றத்துக்கும் ஆட்சித்துறைக்கும்

1 22 மே குஜராத்தி - பஞ்சசிலிருந்து பிரசுரிக்கப்படுகிறது (கையெழுததுப பிரதியில் குறிக்கபபடவில்லை - ஆசிரியர்

மட்டுமே உரித்தான கொள்கையாக இருந்துவிடக்கூடாது. மாறாக, அது நிர்வாக விஷயங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிர்வாகத்தின் மூலமே ஓர் அரசு மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்கிறது. எந்த ஒரு நிர்வாகமும் அனுதாபத்துடன் செயல்படா விட்டால் நன்மைகளைச் செய்ய முடியாது. பிராமணர்கள் மட் டுமே பொறுப்பில் இருந்தால் அந்த நிர்வாகம் அனைவரிடமும் அனுதாபத்துடன் செயல்படமுடியாது. மற்ற பொதுமக்களைவிட தன்னை மேன்மையாகக் கருதுபவன் ஒரு பிராமணன்; மற்றவர் களைத் தாழ்ந்த சாதியினர், சூத்திரர்கள் என்று இகழ்பவன், அவர் களுடைய விருப்பங்களுக்கு எதிராகச் செயல்பட்டு, இயற்கையி லேயே தன் வகுப்பினருக்குச் சாதகமாக செயல்படுபவன். மக்களின் மீது அக்கறையில்லாததால் ஊழலுக்கு பலியாகிறவனாக இருக் கும் இப்படிப்பட்ட ஒரு பிராமணன் எப்படிச் சிறந்த நிர்வாகியாக இருக்க முடியும்? மற்ற எந்த அன்னியர்களையும் போலவே அவனும் இந்தியப் பொதுமக்களுக்கு அன்னியனே. இதற்கு மாறாக, சுத்த சுயம்புவான திறமையே எல்லாம் என்ற நிலையைப் பிராமணர்கள் எடுக்கிறார்கள். கல்வியில் அவர்கள் முன்னணியில் இருப்பதன் காரணத்தால் இந்தத் துருப்புச் சீட்டைத்தான் வெற்றிகரமாகப் பயன் படுத்தமுடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். திறமை மட்டுமே அளவுகோலாக இருந்தால், அரசுப் பணிகளை இந்த அளவுக்கு ஏகபோகமாக வைத்திருக்க அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். திறமை தான் எல்லாவற்றையும் விட மிக முக்கியமானதென்றால் ஒரு ஆங்கிலேயரையோ, பிரெஞ்சு, ஜெர்மன் அல்லது துருக்கி நாட்ட வரையே, வேலைக்கு அமர்த்துவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. இது இப்படியென்றால் பிராமணரல்லாத கட்சியினர், திறமை மட்டுமே எல்லாம் என்று மூடத்தனமாக அதைப் பின்பற்றக் கூடாது, அரசுப் பணிகளில் வகுப்புவாரி விகிதாசாரம் புகுத்தப்பட வேண்டும், நிர்வாகத்தில் எல்லா வகுப்பினரின், பிரிவினரின் கூட் டமைப்பும் இருந்தால்தான் அது ஒரு நல்ல நிர்வாகமாக அமையு மென்று அவர்கள் பதவியில் இருந்தபோது எண்ணினர். நிர்வாகத் தில் பிராமண ஆதிக்கத்தை நீக்கும் ஆர்வத்தில் இந்தக் கொள்கையை அமலுக்குக் கொண்டுவருவதில், அரசுப்பணிகளில் பிராமணர்கள் மற்றும் பிராமணர்கள் அல்லாதவர்களிடையே ஒரு சமநிலை ஏற் படுத்தும் முயற்சியில் குறைந்த அளவு திறமை என்ற வரையறைக்கு

தங்களை உட்படுத்திக்கொண்டதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஆனால் தங்களுக்கு வழிகாட்டியாக அவர்கள் மேற்கொண்ட கொள்கை பொதுமக்களின் நன்மைக்கு உகந்ததல்ல என்று இதற்கு அர்த்தமல்ல

இந்தக் கொள்கை பிராமணர்களைப் பெருங்கோபத்திற்குள்ளாக்கியது. அவர்கள் கோபத்தின் உச்சியில் இருந்தனர். பிராமணர்கள் அல்லாத கட்சியினரின் கொள்கையைப் பற்றி டாக்டர் பரஞ்சிபே ஒரு மிகச் சிறந்த நையாண்டிச் சித்திரத்தை வெளியிட்டார். பிராமணர் அல்லாத கட்சியினரின் கொள்கைகளை அது பயங்கரமாக நையாண்டி செய்கிறது. அது வெளிவந்தபோது பல பிராமணரல்லாத தலைவர்கள் சினமுற்றதுடன் மௌனமாகிப் போயினர். டாக்டர் பரஞ்சிபே மீது எனது குற்றச்சாட்டு அதிலுள்ள நகைச்சுவையை அவர் பார்க்க மறுத்ததுதான். பிராமணரல்லாதவர்கள் கட்சி புதிதாக ஒன்றையும் செய்துவிடவில்லை மனு ஸ்மிருதியைத் தலைகீழாக மாற்றினர். அதைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டார்கள். மனு சூத்திரர்களுக்கு எந்த இடத்தைக் கொடுத்தாரோ அந்த இடத்தைப் பிராமணர்களுக்குக் கொடுத்தார்கள். ஒருவன் பிராமணன் என்பதற்காகவே மனு அவனுக்குச் சலுகைகள் அளிக்கவில்லையா? சூத்திரர்கள் உரிமைகள் பெறத் தகுதி பெற்றிருந்தும் மனு அந்த உரிமைகளை மறுக்கவில்லையா? இப்பொழுது சூத்திரர்கள் என்பதற்காகவே சில சலுகைகள் அளித்ததால் அதைப் பற்றி குறை கூற முடியுமா? அது அபத்தமாகத் தோன்றலாம். ஆனால் இந்த விதிக்கு முன் உதாரணம் இல்லாமல் இல்லை. மனு ஸ்மிருதிதான் அந்த உதாரணம். பிராமணர்கள் அல்லாத கட்சியின் மீது யார் கல்லெறிய முடியும்? பிராமணர்கள் பாவம் செய்யாமலிருந்தால் அவர்களால் முடியும். ஆனால் மனு ஸ்மிருதியை உயர்த்திப் பிடிக்கும், வணங்கிப் போற்றும் அவர்கள் பாவிகள் இல்லை என்று சொல்ல முடியுமா? மானவ தர்மத்தின் ஏற்றத் தாழ்வுக் கொள்கைக்கு ஒரு சிறந்த சவுக்கடிதான் டாக்டர் பரஞ்சிபேயின் இந்தக் கட்டுரை. ஒரு சூத்திரனின் நிலையில் ஒரு பிராமணனை வைத்தால் அவன் எப்படி அதை எதிர்கொள்வான் என்பதை இதைவிட எதுவும் படம்பிடித்துக் காட்ட முடியாது.

## IV

இந்துக்கள் மட்டுந்தான் ஏற்றத்தாழ்வுக் கொள்கையைக் கொண்டிருந்தனர் என்று கூற முடியாது. மற்ற இடங்களிலும் இது நிலவியிருந்தது. இதுதான் சமுதாயத்தை உயர்ந்தவர்கள் தாழ்ந்த வர்கள் என்றும் சுதந்திரமானவர்கள் அடிமைகள் என்றும் பிளவு படுத்தியது.

*(கையெழுத்துப் பிரதி முடிவு பெறாமல் விடப்பட்டுள்ளது. ஆ-ர்)*

□□□

5

# சமூக அமைப்பைப் பாதுகாத்தல்

(இவை டாக்டர் அம்பேத்கர் கைப்பட எழுதிய நான்கு பக்கங்கள், இவற்றில் இடையிடையே வேதங்களிலிருந்து எடுக்கப் பட்டுள்ள மேற்கோள் கள தடடச்சுப்பபடிகளில காணப்படுகின்றன முதல் பக்கத்திற்கு 56 எனற எண் கொடுக்கபபடடுள்ளது இதிலிருநது இதற்கு முந்திய பகுதிகள் இலலை என்று தெரிகிறது அதே போன்று பிற்பகுதியும் காணபபடவில்லை இநத அததியாயத் தின் தலைப்பு எங்களால் கொடுககப்பட்டுள்ளது - ஆசிரியர்)

★ ★ ★

XII 100 'ராணுவங்களை தலைமை தாஙகி நடததிச் செலவது, அரசதி காரம், தண்டனை வழங்கும் உரிமை, எலலா நாடுகளின் மீதான இறை யாண்மை உரிமை ஆகியவை வேத சாஸ்திரங்களை எவனொருவன் நன்கு புரிந்து கொள்கிறானோ அவனுககு உரித்தாகும் (அதாவது ஒருவன் பிராமணனாக இருததல் வேண்டும்) **(மனு ஸ்மிருதி)**

ஏற்கெனவே உள்ள சமூக அமைப்பை பராமரித்துப் பாது காக்கக் கையாளப்பட்ட இரண்டாவது வழிமுறை, முதலாவதை விட முற்றிலும் மாறுபட்டுள்ளது. உண்மையைச் சொல்வதென் றால் இந்து சமூக அமைப்பின் சிறப்பம்சமாக இது அமைந்துள்ளது எனலாம்.

கடுமையான தாக்குதல்களிலிருந்து சமூக அமைப்பைப் பாது காக்க மூன்று விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. ஒரு புரட்சி வெடிப்பதற்கு மூன்று காரணிகள் உள்ளன. அவை (1) சமூகத்தில் அநீதி நிலவுவது, (2) தன் துயரங்களுக்கெல லாம் காரணம் அநீதிதான் என்பதை உணரும் ஆற்றல், (3) ஆயுதங் கள் பெறுவதற்கான வாய்ப்பு. ஓர் எழுச்சியை இரண்டுவிதமாக அடக்குவது என்பதே இரண்டாவது விஷயமாகும். முதலாவதாக எழுச்சியை முளையிலேயே கிள்ளி எறிவது; இரண்டாவதாக எழுச்சி வெடித்த பிறகு அதை நசுக்குவது மூன்றாவது விஷயம் என்னவென்றால் கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிவது சாத்தியமா அல்லது அதை நசுக்குவதுதான் ஒரே வழியா என்பது கிளர்ச்சிக்கான மூன்று முன்நிபந்தனைகளை நெறிப்படுத்தும் விதி களைப் பொறுத்துள்ளது.

சமுதாய எழுச்சிக்கான வாய்ப்புக்குத் தடையும், கல்வி கற்பதற்கான உரிமைக்குத் தடையும், ஆயுதம் ஏந்துவதற்கான தடையும் ஒரு சமூக அமைப்பில் இருக்குமானால் அந்தச் சமூக அமைப்பிற்கு எதிரான எழுச்சியை அவை தடுக்கமுடியும். ஆனால் அதே நேரத்தில் எழுச்சிக்கு வாய்ப்பு, கல்வி கற்பதற்கான உரிமை, ஆயுதம் வைத்துக்கொள்ளும் உரிமை ஆகியவற்றை வழங்கும் ஒரு சமூக அமைப்பு, அநீதிக்கு உள்ளானவர்களின் எழுச்சியைத் தடுக்க முடியாது இந்த நிலையில் சமூகஅமைப்பைப் பாதுகாப்பதற்கான ஒரேவழி பலாத்காரமும் அடக்குமுறையுந்தான். இந்து சமூக அமைப்பு இந்த வழிமுறைகளில் முதல் வழிமுறையைக் கையாள்கிறது. கீழ் மட்டத்திலுள்ளவர்களின் எல்லாத் தலைமுறைகளுக்குமாக, அது சமூக அந்தஸ்தை நிர்ணயித்துள்ளது. அவர்களுடைய பொருளாதார நிலையையும் அது நிர்ணயித்துள்ளது இந்த இரண்டுக்குமிடையே வேற்றுமையில்லாததால் அதிருப்தி வளர்வதற்கான வாய்ப்பு இல்லை எனலாம். கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்குக் கல்வி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக தன் தாழ்ந்த நிலை வருந்தத்தக்கது என்பதை அவன் உணர்வதில்லை. அவன் உணர்ந்திருந்ததெல்லாம் தன் தாழ்ந்த நிலைக்கு யாரும் காரணம் அல்ல என்பதுதான். அது விதியின் விளைவு. சமூகத்தில் அநீதி நிலவுகிறது; அந்த அநீதியை மக்கள் உணர்ந்துள்ளனர் என்று வைத்துக் கொண்டாலும் தாழ்த்தப்பட்டவர்களால் இந்து சமூக அமைப்பை எதிர்த்துப் புரட்சி செய்வது சாத்தியமில்லை. ஏனென்றால் மக்கள் ஆயுதம் ஏந்தும் உரிமையை அது மறுக்கிறது..... வேறு சில சமூக அமைப்புகள் . ... எதிர்மறையான போக்கை கடைப்பிடிக்கின்றன. அவை எல்லோருக்கும் சம உரிமை அளிக்கின்றன. எல்லோரும் அறிவுபெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆயுதம் பெறவும் அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களின் எழுச்சி பலாத்காரமாகவும் அடக்குமுறையாலும் நசுக்கி ஒடுக்கப்படுகிறது. சமவாய்ப்புக்கான சுதந்திரத்தை மறுப்பது, அறிவு பெறுவதற்கான வாய்ப்பைத் தடைசெய்வது, ஆயுதம் பெறும் உரிமையை மறுப்பது ஆகியவை மிகவும் கொடூரமான விஷயங்கள்தான். அதன் விளைவு....... மனிதனுக்கும். இந்துக்களின் சமூக அமைப்பு இதைப் பற்றி வெட்கப் படுவதில்லை. அது இரண்டு விஷயங்களைச் சாதித்துள்ளது. ஏற்கெனவே உள்ள சமூக அமைப்பைப் பாதுகாக்க, ஒரு பயனுள்ள வழி முறையை, வெட்கப்படக் கூடியதாக இருந்தாலும், அது கண்டு பிடித்துள்ளது. இரண்டாவதாக, ஆண்மைப் பண்பையும் தைரியத்

தையும் அழிக்க மிகவும் மனிதத் தன்மையற்ற வழிமுறைகளை அது கையாண்டாலும், இந்துக்கள் மிகவும் மனிதாபிமானமிக்க மக்கள் என்ற புகழைப் பெற்றுத் தந்துள்ளது.

இந்து சமூக அமைப்பின் வேறு ஒரு சிறப்பம்சம் அதைப் பாதுகாப்பதற்காகக் கையாளப்படும் வழிமுறையாகும்.

இந்த வழிமுறை இருவகைப்பட்டது.

முதலாவது, சமூக அமைப்பைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பை மன்னரின் தோள்களில் சுமத்துவதாகும். மிகவும் வெளிப்படையான முறையிலேயே, மனு இதைத் தெளிவாக்குகிறார்

VIII *410.* ''வைசியர்களை வாணிபத்திலும், பணம் கொடுக்கல் வாங்கலிலும், விவசாயத்திலும் அல்லது கன்றுகாலிகளை வளர்ப்பதிலும் அரசன் ஈடுபடுத்த வேண்டும், அடிமை மக்களைப் பிராமணர்களுக்குச் சேவைசெய்வதில் ஈடுபடுத்தல் வேண்டும்.

VIII *418.* வைசியர்களும் கைவினைஞர்களும் தங்கள் கடமைகளைச் செய்ய அரசன் வலியுறுத்த வேண்டும். இதில் அரசன் மிகவும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் ஏனெனில் இவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறும் போது உலகமே பெரும் குழப்பத்திற்குள்ளாகிறது ''

இதைப் பொறுத்தவரையில் அரசனின் கடமைகளை விளக்குவதுடன் மட்டுமே மனு நிறுத்திக்கொள்வதில்லை. அவன் .... அரசன் எல்லா நேரங்களிலும் தன் கடமையைச் செய்வதுடன் ஏற்கனவே உள்ள ஒழுங்கைக் காப்பாற்ற உறுதியுடன் செயல்பட வேண்டும். மேலும் இரண்டு நிபந்தனைகளை அவன் அளித்துள்ளான். ஏற்கெனவே உள்ள சமூக அமைப்பைக் காப்பாற்ற அரசன் தவறும்போது அவன் மற்ற சாதாரண மனிதர்களைப் போன்று தண்டனைக்கும், சிறைத்தண்டனைக்கும் உள்ளாகிறான் பின்வரும் மனுவின் எடுத்துக்காட்டுகளிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம்.

VIII. *335* ''ஒரு தகப்பனோ, ஓர் ஆசானோ, ஒரு நண்பனோ, ஒரு தாயோ, ஒரு மனைவியோ, ஒரு மகனோ, ஒரு வீட்டு பூசாரியோ தங்களுடைய கடமையைப் பற்றுறுதியுடன் நிறை வேற்றாவிட்டால் அரசன் அவர்களைத் தண்டிக்காமல் விடக் கூடாது.''

VIII. *336.* ''கீழ்க்குடியில் பிறந்த ஒருவனுக்கு ஒரு பணம் தண்டனை விதித்தால் அரசனுக்கு அளிக்கப்படும் தண்டனை ஆயிரம் பணமாக இருக்க வேண்டும். அவன் அந்த அபராதத்தைப் பூசாரிகளுக்குக் கொடுக்க வேண்டும் அல்லது ஆற்றில் எறிய வேண்டும். இது புனிதமான விதி.''

அரசன் அசட்டையாக நடந்து கொள்ளும்போது அல்லது ஏற்கெனவே உள்ள சமூகஅமைப்பிற்கு எதிராகச் செயல்படும்போது அவனைத் தண்டிக்க மனு மற்றொரு ஏற்பாட்டை வகுத்துத் தந்துள் ளான். அரசனுக்கு எதிராக பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர் கள் புரட்சி செய்யும் உரிமைதான் அது.

VIII *348.* ''தங்கள் கடமையை ஆற்றும்போது இரு பிறவி யாளர்களான பிராமணர்கள் பலவந்தமான இடையூறுகளுக்கு ஆளாகும்போதும், கெட்டநேரங்களில் அவர்களுக்கு ஆபத்து நேரும்போதும், அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடலாம்''

(கையெழுத்துபபிரதி முறறுப் பெறாமல் விடப்பட்டுள்ளது - ஆசிரியர்)

# 6

# இந்துக்களுடன்

***(கையெழுத்துப் பிரதியிலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது - ஆசிரியர்)***

இந்துக்கள், என்றைக்காவது ஒரு நாள் தீண்டப்படாதவர்களைத் தங்கள் சமுதாயத்தில் இணைத்துக்கொள்வார்கள் என்பதை நம்புவது இயலாத காரியமாக உள்ளது. அவர்களது சாதி அமைப்பு முறையும், மதக் கொள்கைகளும் இதைப் பற்றி எத்தகைய நம்பிக்கை கொள்வதையும் முற்றிலும் தடுக்கின்றன. இருப்பினும், இந்து சமுதாயத்தில் தீண்டப்படாதவர்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளமுடியும் என்ற அசைகக முடியாத நம்பிக்கை தீண்டப்படாதவர்களிடையே உள்ளதைவிட இந்துக்களிடையே அதிகம் காணப்படுகின்றது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள இவர்கள் நம்பிக்கையில் நேர்மையானவர்களா, இல்லையா என்பதையும் கவனிக்காமல் விட்டு விட முடியாது. எந்தக் கால வரம்புக்குள் இந்தத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல் நிகழும் என்பதை அவர்களால் வரையறுத்துக் கூறமுடியவில்லை. ஒருக்கால் இதில் நம்பிக்கையுள்ளவர்களை நேர்மையானவர்கள் என்று கருதினாலும், இந்தத் தன்வயமாக்கிக் கொள்ளும் பிரச்சினை பல நூற்றாண்டுகளுக்கு இழுத்தடிக்கும் ஒரு செயல்பாடாகவே இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கமுடியாது இதற்கிடையில் இந்துக்களின் சமூக, அரசியல் ஆதிக்கத்தின் கீழ் தீண்டப்படாதவர்கள் வாழ வேண்டியிருக்கும் கடந்த காலத்தைப் போலவே இந்துக்களின் கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைகளுக்கும் அவர்கள் தொடர்ந்து அடங்கி வாழவேண்டியிருக்கும். நிச்சயமில்லாத ஏதோ ஓர் எதிர்காலத்தில் இந்து சமுதாயத்திலே அவர்கள் ஒன்றிணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் இந்துக்களின் விருப்பத்திற்கும், இஷ்டத்திற்கும் அவர்களை விட்டுவிடுவது சரியல்ல என்றுதான் அறிவுள்ள எவரும் நினைக்கமுடியும். இந்த மாற்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். இந்தக் காலகட்டத்தில் இந்துக்களின் ஆதிக்கத்திற்கும அடக்குமுறைக்கும் எதிராக சில ஏற்பாடுகள் அவசியமாகின்றன. இதற்கு என்ன நிபந்தனைகள்

தேவைப்படுகின்றன? இந்தக் கேள்வியைத் தீண்டப்படாதவர்களிடம் விட்டுவிட்டால் அவர்கள் இரண்டு நிபந்தனையை முன் வைப்பார்கள். ஒன்று, அரசியல் சாசன அடிப்படையிலான பாதுகாப்புகள், இரண்டு, தனியான குடியிருப்புப் பகுதிகள்.

# I

அரசியல்சாசன அடிப்படையில் தீண்டப்படாதவர்களின் பாதுகாப்புப் பற்றி, இந்தியாவின் தீண்டப்படாதவர்களின் அரசியல் அமைப்பான அகில இந்திய ஷெட்யூல்டு வகுப்பினர் சம்மேளனம் தனது தீர்மானங்களில் வரையறுத்துள்ளது. தீர்மானங்கள். 3 மற்றும் 7ல் அவை வரையறுக்கப்பட்டுள்ளன, அந்த தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

தீர்மானம் எண் 3 (மேற்கோள் பக்கம் 359)
(கையெழுத்துப் பிரதியில் கொடுக்கப்படவில்லை - ஆ-ர)

தீர்மானம் எண் 7 (மேற்கோள் பக்கம் 361)
(கையெழுத்துப் பிரதியில் கொடுக்கபபடவிலலை - ஆ-ர)

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்வதில் இந்துக்கள் மிகவும் வேண்டாவெறுப்பாக நடந்து கொள்கிறார்கள். இந்த மறுப்பு பொதுவானதுதான் என்றாலும், குறிப்பிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது தீண்டப்படாதவர்கள் சிறுபான்மையினர் அல்லர், எனவே சிறுபான்மை வகுப்பினர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புக்கு அவர்கள் தகுதியானவர்கள் அல்ல என்பது பொதுவான எதிர்ப்பாக உள்ளது. ஒரு வகுப்பினர் சிறுபான்மையினரா என்பதை மதத்தின் அடிப்படையில்தான் முடிவு செய்ய வேண்டும் என்ற வாதத்திலிருந்து இது எழுகிறது. மதத்தைப் பொறுத்தவரை தீண்டப்படாதவர்கள் இந்துக்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்று கூற முடியாது, எனவே அவர்கள் சிறுபான்மையினர் அல்லர் என்று வாதிக்கப்படுகிறது இந்தப் பிரச்சினையை ஆழ்ந்து படித்தவர்களுக்குச் சிறுபான்மையினரைப் பற்றிய இந்த வாதம் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமானது என்பது நன்கு புரியும்

(முடிவுறாமல உள்ளது - ஆசிரியர்)

# 7

# ஏமாற்றம்

வரலாறு கண்ணுற்ற மக்களில் மிகவும் பரிதாபத்திற்குரிய, சோர்ந்துபோன, வெறுத்தொதுக்கப்பட்ட மக்கள் தீண்டப்படாதவர்கள்தான் எனலாம் அவர்கள் தேய்ந்து, ஓய்ந்து, நலிவுற்ற, பலி கொடுக்கப்பட்ட மக்கள் கவிஞர் ஷெல்லியின் வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர்கள் -

> ''சுவர்க்கத்துக்கு ஏறிச் சென்ற களைப்பில் வெளிறிப் போனவர்கள், மாறுபட்டுப் பிறந்த விண்மீன்களுக்கிடையே துணையின்றி உலகை நோக்கிய ஏக்கப் ப்ார்வையுடன் அலைபவர்கள்.''

இதை எளிய சொற்களில் கூறுவதென்றால் தீண்டப்படாதவர்கள் பெரும் ஏமாற்றத்தால் முற்றிலும் பாதிக்கப்பட்டவர்கள் மாத்யூ ஆர்னால்டு கூற்றின்படி[1] '' ஒருவன் தன் வாழ்வின் சாரத்தை உறுதிப்படுத்த எடுக்கும் முயற்சியில்தான் வாழ்க்கை அமைந்திருக்கிறது, அதன் பொருள் என்னவென்றால் ஒருவனுடைய வாழ்க்கை முற்றிலும் சுதந்திரமாக வளர்ச்சியடைய, ஏராளமான ஒளியும் காற்றும் பெற (.... .)[2] ஆகவோ அல்லது இருண்ட நிழலால் மறைக்கப்படாமலோ இருப்பதுதான். ஒருவன் தன் வாழ்வின் சாரத்தை உறுதிப்படுத்தமுடியாமல் தோற்றுப்போவதே ஏமாற்றம் என்பது. சாதனைகளைச் செய்வதற்கான முயற்சிகளை நிறைவேற்ற முடியாத நிலைமை, மனோசக்திகள் உலர்ந்து போதல், ஆளுமையின் வளர்ச்சி நின்றுபோதல் ஆகியவைதான் அந்த ஏமாற்றம்

பல்வேறு மக்கள் தங்கள் வரலாற்றில் இம்மாதிரியான ஏமாற்றங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால் இதிலிருந்து விடுபட்டு புதிய துடிப்புடன் மீண்டு, புகழின் உச்சிக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் தீண்டப்படாதவர்களின் நிலை முற்றிலும் மாறான அடித்தளத்தில் உள்ளது இந்த ஏமாற்றம் நிரந்தரமான

---

1 மககளாடசி பறறிய கடடுரைகள்

2 கையெழுததுப பிரதியில் அழிககப்பட்டுளளது - ஆ-ர

ஏமாற்றம். காலமோ இடமோ இதிலிருந்து அவர்களை விடுவிக்க உதவுவதில்லை.

இது சம்பந்தமாக தீண்டப்படாதவர்களின் நிலை யூதர்களின் நிலையிலிருந்து நேர்மாறாக உள்ளது.

யூதர்கள் முதலில் அனுபவித்த பெருந்துன்பம் எகிப்தில் அவர்கள் கைதியாகப் பிடிக்கப்பட்டதுதான் பைபிளில் கூறுவது போல -

(குழந்தைகள் பைபிளிலிருந்து மேற்கோள் - 39) ( மேற்கோள் பதிவு செய்யப்படவில்லை- ஆசிரியர்)

கடைசியாக எகிப்திய அரசன் பரோவா பணிந்தான். அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட யூதர்கள் கனானுக்குச் சென்று, பாலும் தேனும் ஓடும் நாட்டில் தங்கினர்.

யூதர்கள் அனுபவித்த இரண்டாவது பெருந்துன்பம் பாபிலோனியாவில் கைதாகிச் சிறைப்படுத்தப்பட்டதுதான். (சில பக்கங்கள் காணப்படவில்லை - ஆசிரியர்.)

தீண்டப்படாதவர்கள் ஏமாற்றத்தால் ஏன் வருந்தினார்கள் என்பதை நாம் இப்பொழுது விளக்குவோம். அவர்கள் உடலிலோ உள்ளத்திலோ அதிகப்படியான துடிப்பு இல்லை. அவர்களுடைய உற்சாகமற்ற, மந்தமான, உணர்ச்சியற்ற இறந்தகாலத்தில் எதிர்கால வளர்ச்சிக்கான நம்பிக்கை ஒளி அளிக்கும் எதுவும் இருக்கவில்லை இது அவர்களின் குற்றம் இல்லை. அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பெரும் எதிரியான இந்து சமூக அமைப்பின் சாதகமற்ற சூழ்நிலையின் விளைவே ஏமாற்றம் எனும் இந்தக் கதிப்போக்கு

அவர்கள் கதிப்போக்கு முற்றிலும் சகிக்க முடியாததுதான் - கார்லைல் கூறியதுபோல -

(மேற்கோள் பக்கம் 201)
(மேற்கோள் கொடுக்கப்படவில்லை - ஆசிரியர்)

இந்து சமூக அமைப்பை வீழ்த்த புரட்சியை, ஏன் ஓர் இரத்தப் புரட்சியைப் பற்றிச் சிந்திப்பவர்களும் இருக்கிறார்கள். காப்ளி வில்லியம்ஸ் ஒரு காலத்தில் சொன்னதை எல்லோரும் சொல் கிறார்கள் -

(மேற்கோள் பக்கம் 152)
(மேற்கோள் கொடுக்கப்படவில்லை - ஆசிரியர்)

இத்தகையதுதான் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றம்

## III

எமெர்சனின் மொழியில் சொல்வதென்றால் கடவுளுடனான உடன்பாடு என்பது உடல், மற்றும் மனத்தின் உந்துசக்தியுடனான நிலையைக் குறிக்கிறது எமெர்சன் கூறியபடி "வெற்றி என்பது உடல் கட்டமைப்பைப் பொறுத்தது மனம் மற்றும் உடலின் உந்து சக்தி நிலையை, வேலை செய்யும் ஆற்றலை, தைரியத்தின் அடிப்படை யைப் பொறுத்தது அது. வெற்றி எப்பொழுதுமே ஒருவித உந்து சக்தி அல்லது ஆக்கபூர்வமான சிந்தனை சக்தியைத் தொடர்ந்தே செல்கிறது· ஒரு அவுன்ஸ் எடையை ஒரு அவுன்ஸ் ஆற்றல் சரிக் கட்டிவிடும்."

முதலில் சிறைப்படுத்தப்பட்ட யூதர்கள் மீண்டும் எழுச்சி அடைந்தார்கள் என்றால் முக்கியமாக அதற்குக் காரணம் மனம் மற்றும் உடலின் உந்துசக்தி நிலைதான். மனம் மற்றும் உடலின் உந்து சக்திநிலை தோன்ற இரண்டு ஆதாரங்கள் உள்ளன கடவுளைச் சார்ந்திருப்பதால் இது தோன்றக்கூடும். கடவுள், வேறு எதுவும் இல்லையென்றாலும், குறைந்தபட்சம் மனோசக்திக்கு, மன எழுச் சிக்கு ஆதாரமாக உள்ளது நெருக்கடியான நேரங்களில் மனித னுக்கு மனோசக்தி தேவைப்படுகிறது. மனம் மற்றும் சரீரததின் உந்து சக்தி வெற்றிக்குத் தேவைப்படுகிறது எனவே கடவுளுட னான உடன்பாடே, அதைச் சரியான நோக்கில் தெரிந்து கொண் டால், யூதர்களின் வெற்றிக்கு காரணம் என்று சொல்வது தவறலல

1 அழிககப்படடுள்ளது, மககளாடசி பறறிய கடடுரை

## IV

*சமூகச் சூழலின், அதுவும் சாதகமான சூழலின் விளைவு தான் இந்த மனம் மற்றும் உடலின் உந்து சக்திக்கான நிலை. கட்டுப் பாடற்ற ஒரு சமூகத்தில், தடையற்ற ஒரு சுதந்திர சமூகத்தில், ஒவ்வொரு மனிதனும் வாழ வகைசெய்யும், அவனது நல்வாழ் வுக்கு வழிசெய்யும் ஒரு சமூகத்தில், உழைக்க வேண்டியிராத சமூகத்தில், தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ளும் உரிமைகள் பறிக்கப்படாத சமூகத்தில், எங்கு எல்லோரிடமும் நல்லெண்ணம் இருக்கிறதோ அங்கு (இதற்கு அடுத்துள்ள பகுதிகள் அழிக்கப்பட் டுள்ளன. தெளிவாகத் தெரியவில்லை - ஆசிரியர்)*

*( டாக்டர் அம்பேத்கரின் கையெழுத்தில் உள்ளது மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகள். ஒவ்வொரு பகுதியும் தனித்தனிக் காகிதத் தில் எழுதப்பட்டுள்ளது - ஆசிரியர்)*

★ ★ ★

# 8

# அரசியலில் அடக்குமுறைப் பிரச்சினை[1]

இந்தியாவில் அரசியல் சுதந்திரக் கோட்பாடு மெத்தனமாக வும் மிகவும் மெதுவாகவும் அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டமன்ற அமைப்புவிதிகளில் பொதுப் பிரதிநிதித்துவம் என்ற கொள்கை அறிமுகமானபோது 1892ல் அது ஆரம்பமாகியது. 1909ல் அது விரிவுப்படுத்தப்பட்டது. 1909ல் உள்ள நிலவரப்படி பொது பிரதி நிதித்துவக் கொள்கையில் இரண்டு குறைபாடுகள் இருந்தன. முதல் குறைபாடு வாக்குரிமை பெற்றவர்கள் மிக உயர்ந்த நிலையிலுள்ள வர்களாக இருந்தனர். மிகப் பெரும்பான்மையான மக்கள் அடைய முடியாதபடி வாக்குரிமைபெறும் தகுதி மிக உயர்வாக இருந்தது இந்துக்கள் மற்றும் முஸ்லீம் மக்களில், உயர் வகுப்பினர்களே இந்தத் தகுதியைப் பெறமுடிந்தது பொதுப் பிரதிநிதித்துவம் என்ற கோட்பாடு சட்டமன்றத்து எல்லைக்குட்பட்டிருந்தது. அது நிர்வாகத் துறைக்கு விரிவுபடுத்தப்படவில்லை. நிர்வாகத்துறை சுதந்திரமாக இயங்கிவந்தது. சட்டமன்றத்தினால் நிர்வாகத் துறையை ஆக்கவோ, அழிக்கவோ முடியவில்லை அடுத்த திட்டம் 1919ல் எடுக்கப் பட்டது. ஆச்சரியப்படும் விதத்தில் 1919 ஆண்டு திட்டத்தின்படி பொதுப் பிரதிநிதித்துவக் கோட்பாடு நிர்வாகத் துறையில் அம லாக்கப்பட்ட அளவிற்கு சட்டமன்றத்தில் அமலாக்கப்படவில்லை. இது ஏனென்றால், இந்திய அரசியல் இயக்கம் மேற்குடியின ராலேயே வழிநடத்தப்பட்டது வாக்குரிமையை விரிவுபடுத்துவதை விட நிர்வாக அதிகாரத்தைப் பெறுவதில்தான் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர் அது இயற்கைதான். நிர்வாக அதிகாரம் பெறுவது அவர்களுக்கு ஆதாயமாக இருந்தது வாக்குரிமையை விரிவுபடுத் துவதன் மூலம் ஆதாயம் பெறுபவர்கள் சாதாரணப் பொதுமக்களே.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஆதரவுக்குரியவர்களான மேல் தட்டு வகுப்பினர்கள் வாக்குரிமைத் தளத்தை விரிவுபடுத் தாமலே நிர்வாக அதிகாரத்தை வலியுறுத்திப் பெற்றனர்.

---

1 இந்து சமூக அமைபபு எனற தலைப்பில் அத்தியாயம் XIII எனற இநத ஆறு பககக கையெழுததுக கட்டுரை டாகடா அமபேத்கரால எழுதப்பபட்டது கடைசி வாக்கியத திலிருந்து அந்த அத்தியாயம் முடிககப்படாமல் விடபபட்டுளளது - ஆசிரியர்

1909ல் நிர்ணயிக்கப்பட்ட வரம்பைவிட ஐயப்பாடின்றி வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டது ஆனால் அது தீண்டப்படாத வர்கள் வரை எட்டிச் செல்லவில்லை வயது வந்தோர் வாக் குரிமையின் மூலம் மட்டுமே அன்றி வேறு எந்த வகையிலும் வேட்பாளர்கள் பட்டியலில் சேர வாய்ப்புக் கிட்ட முடியாத அளவுக்கு அவர்கள் அவ்வளவு ஏழைகளாக இருந்தார்கள்.

இந்திய அரசாங்கம் மிகவும் அமைதியற்றிருந்தது. அவர் களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தேர்தலில் வாக்களிக்கும் உரிமைஅளிக்காமல், தீண்டபபடாதவர்களை மேல்தட்டு இந்துக் களின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ்வைத்திருப்பதில் தங்களுக் குள்ள கவலையை அவர்கள் வெளிப்படுத்தினர் 1919 மார்ச் 19 அன்று இந்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் இப்படி அறிவிக்கப் பட்டிருந்தது -

(மேற்கோள்)

பிரிட்டிஷ் அரசால் 1935ல் கொண்டுவரப்பட்ட வகுப்புவாரித் தீர்ப்பு என்று அழைக்கப்படும் திட்டம், நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

(I) தீண்டப்படாதவர்களின் மக்கட் தொகையில் சுமார் பத்து சதவிகிதம் பேர் வாக்குரிமை பெறும் வகையில் தீண்டப் படாதவர்களுக்கு ஒரு மாறுபட்ட வாக்குரிமை அளிக்கப் படும்.

(II) அவர்களுக்கு மாறுபட்ட வாக்குரிமை அளிக்கப்படுவ துடன் மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களில் சில இடங்கள் அவர்களுக்கென ஒதுக்கப்படும்.

(III) தீண்டப்படாத வகுப்பினர்களை மட்டுமே கொண்ட தனித்தொகுதிகள் மூலம் இந்த ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படும்.

(IV) தீண்டப்படாதவர்களுக்கான தனித் தொகுதிகளில் ஒரு வாக்குடன் இந்துக்களுக்கான பொதுத் தொகுதிகளிலும் இரண்டாவது அல்லது ஓர் அதிகப்படியான வாக்கு அவர் களுக்கு இருக்கும்

தீண்டப்படாதவர்களுக்கான தனிப் பிரதிநிதித்துவத்தை திரு.காந்தி மறுத்து வந்ததுடன் பிரிட்டிஷ் அரசின் தீர்மானத்திற்கு எதிராகக் கண்டனம் தெரிவித்தார் இந்தச் சலுகைகளைப் பிரிட்டிஷ் அரசு வாபஸ் பெறாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் மிரட்டினார் தீண்டப்படாதவாகள் மற்றும் இநதுக் களிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படாத வரையில் பிரிட்டிஷ் அரசு தனது சிபாரிசுகளை வாபஸ் வாங்க மறுத்தது. முக்கியமாகத் தனித் தொகுதிகள் உருவாக்கப்படுவதை திரு காந்தி எதிர்த்து வந்தார் இறுதியில் 1932 செப்டம்பரில் இந்துக்களுக்கும் தீண்டப் படாதவர்களுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அது 'புனா ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது. அதன் விபரங்கள் பின் வருமாறு:

## புனா ஒப்பந்தம்[1]

(1) மாகாணச் சட்டமன்றங்களில் பொதுத் தொகுதிகளுக் கான இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குப் பின்வரும் எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கப்படும்.

மதராஸ் 30; பம்பாய் மற்றும் சிந்து 15, பஞ்சாப் 8; பீகார் மற்றும் ஒரிசா 18; வங்காளம் 30, மத்திய மாகாணங்கள் 20; அசாம் 7; ஐக்கிய மாகாணங்கள் 20, ஆக மொத்தம் 148 இடங்கள்

பிரதம மந்திரியின் தீர்மானத்தில் அறிவிக்கப்பட்ட மாகாண கவுன்சிலின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில இந்த ஒதுக்கீடு தயாரிக்கப்பட்டுள்ளது

(2) இந்த இடங்களுக்கான தேர்தல் பின்வரும் நடைமுறை களுக்குட்பட்டு கூட்டுத் தொகுதிகளாக இருக்கும்:

ஒரு தொகுதியில் உள்ள சமஷ்டி வாக்காளர் படடியலில் பதிவுசெய்யப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுபபினைச் சேர்ந்தவர்கள் இப்படி ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு இடத்துக்கும் ஒற்றை வாக்கு

1 1932ல செப்டமபர் 295ல கையெழுததாகியது

முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த நான்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்தப் பூர்வாங்க தேர்தலில் அதிக வாக்குகள் பெற்ற நான்கு பேர்களும் பொது வாக்காளர் தொகுதிக்கு நிற்கும் வேட்பாளர்கள் ஆவார்கள்.

(3) மத்தியச் சட்டமன்றத்திற்கான தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதித்துவம் கூட்டு வாக்காளர் தொகுதி அடிப்படையில் இருக்கும். மாகாணச் சட்டமன்றங்களுக்கான அவர்களது பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான தேர்தல் அடிப்படையில் அதாவது மேலே இரண்டாவது பிரிவில் குறிப்பிட்டபடி இருக்கும்.

(4) மத்தியச் சட்டமன்றங்களில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்ட பொதுத்தொகுதிகளுக்கான இடங்களில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும்.

(5) மத்திய மற்றும் மாகாணச் சட்டமன்றங்களுக்கான பூர்வாங்க தேர்தல் மூலம் வேட்பாளர் தொகுப்பைத் தேர்ந்தெடுக்கும் முறை மேலே குறிப்பிட்டது போன்று, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுக்கு வரும். கீழே குறிப்பிட்டுள்ள பிரிவு ஆறின்படி பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் அதற்கு முன்பு இதை முடிவுக்குக் கொண்டுவரலாம்.

(6) பிரிவு 1 மற்றும் 4 ல் வகைசெய்யப்பட்டுள்ள மாகாண மற்றும் மத்தியச் சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பிரதிநிதித்துவ ஒதுக்கீடு முறை ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட வகுப்பினர்களுக்கிடையே பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலமே முடிவுக்கு வரும்.

(7) லோதியன் குழு அறிக்கையில் குறிப்பிட்டபடி தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான மத்திய மற்றும் மாகாணச் சட்டமன்றங்களுக்கான வாக்குரிமை இருக்கும்.

(8) ஸ்தல நிர்வாக அமைப்புகளுக்கான தேர்தல்களில் நிற்பது மற்றும் அரசு வேலைகளுக்கு நியமனம் பெறுவது ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில்

எவருக்கும் தடை இருக்காது. அரசு வேலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இவைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய எல்லா முயற்சிகளும் செய்யப்படும்.

(9) ஒவ்வொரு மாகாணத்திலும் கல்விக்கான மானியத் தொகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குக் கல்வி வசதிகள் அளிப்பதற்குப் போதுமான தொகை ஒதுக்கப்படும்.

தாழ்த்தப்பட்டவர்களின் அரசியல் விடுதலைச் சாசனமாக இந்த ஒப்பந்தம் அமைந்தது. முதல் தேர்தல்....

*(முடிக்காமல் விடப்பட்டுள்ளது - ஆசிரியர்)*

9

# எது மிகவும் கொடுமையானது? அடிமைத்தனமா, தீண்டாமையா?

*(''பிரசசினையின் வேர்கள'', ''ஒரே மாதிரியான நோவுகள்'' என்ற தலைப்புகளில் இததொகுப்புகளின் 5வது தொகுதியில் 3 மற்றும் 8 ஆவது அத்தியாயங்களில அடிமைதததனம் மறறும் தீண்டாமை பறறி டாகடா அமபேத்கர் எடுதது விளக்கி யுளளாா*

*இருபபினும தொகுதி எண் 5 - அத்தியாயங்கள் 3 மற்றும 8ல் கொடுககப படாத சில பததிகளைக கொணட ஒரு சிறு பிரசுரத்தை நாம பெற்றுள் ளோம*

*இஙகு கொடுக்கப்பட்டுள்ள விஷயத்துடனும் அதையும சோத்துப் படிககுமபோது ஒரு தொடாச்சியான, முழுமையான விளககததைப பெறுகிறோம அநதப பிரசுரததின் மெயமமையைப பற்றி ஐயம கொள் வதறகு எந்த காரணமும் இல்லை ஏனெனில அதன வெளியீட்டாளரான திரு தேவி தயாள டாகடா அமபேதகருடன் 1943-47 ஆம ஆண்டுகளில் சோந்து பணியாற்றியவர் புததகத்தில அசசிடப்பட்டுள்ள அததியாயத்தின ஆரம்பத்திலுளள தலைப்பு டாக்டா அமபேத்கரின் படைபபுதான் அது என்பதை உறுதி செயகிறது இநதச சிறு பிரசுரததின் முந்தைய பத்திகள் அதாவது பககம் 1 லிருநது 11 வரை 'மனிதகுலததின நோக்கஙகள'' தொகுதி 5-ல் பககம் 80 லிருந்து 88 வரை அசசிடபபடடுளளது திரு தேவி தயாளுக்காக இநதக் கட்டுரையை வெளியிட்ட பெருமை டில்லியைச சோநத திரு பகவன்தாஸையே சாரும - ஆசிரியா)*

## இந்தியாவில் அடிமைத்தனம்

மற்ற நாட்டினரை விட தங்கள் உயர்வை வலியுறுத்த இந்துக்கள் எடுத்துக்கூறும் சிறப்பம்சங்களில் பின்வரும் இரண்டு விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை. அவை, இந்தியாவில் இந்துக் களிடையே அடிமைத்தனம் இருக்கவில்லை என்பதும், தீண் டாமையை விட மிகக் கொடூரமானது அடிமைத்தனம் என்பதும் ஆகும்.

முதலில் கூறப்பட்டுள்ள கூற்றே உண்மையல்ல. அடிமைத்தனம் என்பது இந்துக்களின் ஒரு பழமையான சமூக முறை எனலாம். இந்துக்களுக்குச் சட்டத்தை வழங்கியவரான மனுவால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மனுவைத் தொடர்ந்து, இதர ஸ்மிருதிகளின் ஆசிரியர்கள் இதை விரிவுபடுத்தி ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்தியுள்ளனர். இந்துக்களிடையேயான அடிமைமுறை ஏதோ ஒருகாலத்தில் வழங்கிவந்த சமூக அமைப்புமுறை என்று கூறிவிட முடியாது 1843 ஆம் ஆண்டு வரை, இந்திய வரலாற்றில் இந்த அடிமைமுறையைத் தொடர்ந்து காணமுடிகிறது. அந்த ஆண்டில் பிரிட்டிஷ் அரசு அதை ஒழித்திராவிட்டால் இன்றும் அது தொடர்ந்து வழக்கத்தில் இருந்திருக்கும். அடிமைத்தனம் இருந்த வரை தீண்டப்படாதவர்கள், தீண்டப்படுபவர்கள் ஆகிய இருவரையுமே அது பாதித்தது.

தீண்டப்படுபவர்களை விட தீண்டப்படாதவர்கள் தங்களுடைய வறுமை நிலையினால் அடிக்கடி அடிமைத்தனத்திற்குப் பலியானார்கள். எனவே, 1843 ஆம் ஆண்டு வரை இந்தியாவிலுள்ள தீண்டப்படாதவர்கள் தீண்டாமை மற்றும் அடிமைத்தனம் ஆகிய இரண்டு வகையான அடிமைத் தளைகளால் கட்டுண்டு, சொல்லொண்ணாத் துயரத்திற்கு ஆளானார்கள். இவற்றில் கொடூரம் குறைந்த தளை வெட்டப்பட்டு தீண்டப்படாதவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்றைய தீண்டப்படாத இனமக்கள் அடிமைத்தனச் சங்கிலியை அணிந்திருக்கவில்லை என்பதால் என்றைக்குமே அவர்கள் அடிமைத்தனத்திற்கு ஆட்படவில்லை என்று கருதிவிட முடியாது. அப்படி எண்ணுவது வரலாற்றின் பல பகுதிகளை இருட்டடிப்புச் செய்வதுபோல ஆகும்

முதலாவதாகக் கூறப்பட்டுள்ள அம்சம் அதிகமாக வலியுறுத்தப்படுவதில்லை. ஆனால் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது அப்படியல்ல. இந்து சமூகத்தைத் தாக்கி, மிஸ் மேயோ எழுதியதற்கு மறுப்புத் தெரிவித்து எழுதுகையில் மிகச் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியும் தீண்டப்படாதவர்களின் நல்ல நண்பருமான லாலா லஜபதிராய்,[1] அடிமைத்தனத்துடன் ஒப்பிடும்போது தீண்டாமை ஒன்றுமேயில்லை என்று அடித்துக் கூறுவதுடன், அமெரிக்காவி

1. மகிழ்ச்சியறற இந்தியா

லுள்ள ஒரு நீக்ரோவையும் இந்தியாவிலுள்ள தீண்டப்படாதவர் ஒருவரையும் ஒப்பிட்டு தமது முடிவே சரியானது என்று காட்டியுள் ளார். லாலா லஜபதிராய் போன்ற ஒருவரிடமிருந்து இந்த முடிவு வந்துள்ளதால் விஷயத்தை மிகவும் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய தாக உள்ளது.

அடிமைத்தனத்தை விட தீண்டாமை தீங்கற்றதா? தீண்டா மையைவிட அடிமைத்தனம் மனிதாபிமானமற்றதா? தீண்டா மையை விட அடிமைத்தனம் வளர்ச்சியைப் பாதிக்கிறதா? லாலா லஜபதிராய் எழுப்பியுள்ள சர்ச்சை ஒருபுறமிருக்க, இந்தப் பிரச் சினை மிகவும் முக்கியமானது. இது பற்றிய விவாதங்கள் சுவை யானது மட்டுமன்றி அறிவூட்டுபவையாகவும் இருக்கும். இரண் டுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள அடிமைத்தனம் என்பதற்கான துல்லியமான பொருளை முதலில் தெரிந்துகொண்டு ஆரம்பிக்கவேண்டும். இது மிகவும் அவசியமானது, ஏனெனில் அடிமைத்தனம் என்ற சொல் உருவகப் பொருளில் அடிமைத்தனம் போன்ற, ஆனால் அடிமைத்தனம் அல்லாத சமூக உறவுகளைக் குறிப்பிடும்போதும் உபயோகிக்கப்படுகிறது. கணவனின் முழு அதிகாரத்திற்கு மனைவி உட்பட்டிருப்பதாலும், சில நேரங்களில் அவளைக் கொடுமைப்படுத்திக் கொன்று விடுவதாலும் மனைவி யைப் பண்டமாற்று செய்வது அல்லது கடனுக்கு அளிப்பதாலும், அவளைத் தனக்குப் பணிசெய்ய கட்டாயப்படுத்துவதாலும், சில நேரங்களில் மனைவியை அடிமையென்று கூறுகிறோம். இந்தச் சொல் உருவகரீதியில் உபயோகப்படுவதைக் காட்ட மற்றொரு உதாரணம் பண்ணை அடிமைகளைக் குறிப்பதற்கானதாகும். ஒரு பண்ணை அடிமை குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்வதாலும், குறிப்பிட்ட சேவைகளைச் செய்வதாலும், ஒரு குறிப்பிட்ட தொகையை எஜமானனுக்கு அளிப்பதாலும், நிலத்துடன் பிணைக் கப்பட்டிருப்பதாலும் அவனையும் அடிமை என்று அழைக்கிறோம் இவை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தப்படுவதற்கான உதாரணங் களாகும் அடிமைத்தனத்திலும் சுதந்திரம் கட்டுப்படுத்தபபடுவதால் மேலே குறிப்பிடப்பட்டவையும் அடிமைத்தனத்தை போலாகிறது. ஆனால் சட்டத்துறையில் இந்தச் சொல் இந்தப் பொருளில் உப யோகப்படுத்தப்படுவதில்லை. வீண் விவாதத்தைத் தவிர்ப்பதற்கு,

அடிமைத்தனம் என்ற சொல்லை சட்டரீதியாக உள்ள பொருளின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பதே சிறந்தது என்று தோன்றுகிறது.

சாதாரண மனிதர்களின் மொழியில் ஒரு நபர் மற்றவரின் உடைமையாகும்போது அடிமையென்று அழைக்கப்படுகிறான். ஒரு சாதாரண வாசகருக்கு இந்த விளக்கம் மிகவும் சுருக்கமானதாகத் தோன்றும் அதிகப்படியான விளக்கமின்றி இதன் முக்கியத்துவம் முழுமையையும் அவனால் புரிந்து கொள்ள முடியாது. சொத்து என்பது ஏதாவது ஒன்றின் மீது ஒருவனுக்குள்ள மொத்த உரிமை களையும் குறிக்கும் சொல்லாக உள்ளது சொந்தமாக வைத்திருந்து அனுபவிக்கும் உரிமை, அதனுடைய பயனை அனுபவிக்கும் உரிமை, விற்பதன் மூலமோ, அடமானத்தின் மூலமோ குத்தகை மூலமோ மாற்றும் உரிமை, அழிக்கும் உரிமை முதலியவை இதில் அடங்கும் எனவே உடைமை என்பதன் பொருள் சொத்தின் மீதான முழுமையான அனுபவ உரிமையாகும். இதை மேலும் எளிய முறையில் சொல்வதென்றால், அடிமை ஒருவன் எஜமானனின் சொத்து என்றால் அதன் பொருள் எஜமானன் அடிமையிடம் அவன் விருப்பத்திற்கு மாறாக வேலை வாங்கமுடியும், அந்த அடிமை யின் அனுமதியின்றி அவன் உற்பத்திசெய்யும் பொருளின் பயனை அனுபவிக்க முடியும்; அடிமையின் விருப்பத்தைக் கேட்காமலேயே அவனை அடமானத்திற்கு அளிக்கவோ, குத்தகைக்கு விடவோ விற்கவோ எஜமானால் முடியும். இந்தச் சொல்லின் சட்டரீதியான கருப்பொருளின்படி அவனைக் கொல்வதுகூட சாத்தியமே சட்டத் தின் பார்வையில் அடிமை என்பவன் வெறும் ஜடப்பொருளே அதை எஜமானன் எந்த விதத்திலும் தன் விருப்பம்போல் கையாள லாம்.

சட்டரீதியான இந்த விளக்கத்தின் வெளிச்சத்தில், அடிமைத் தனத்தைப் பார்க்கும்பொழுது தீண்டாமையைவிட மிகக் கொடூர மாகத்தான் அது காணப்படுகிறது ஓர் அடிமையை விற்கவோ, அடகு வைககவோ, குத்தகைக்கு விடவோ முடியும் ஆனால் ஒரு தீண்டப்படாதவரை விற்கவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ முடியாது கொலைகாரன் என்ற குற்றச் சாட்டுக்குள்ளாகாமல் எஜமானன் அடிமையைக் கொல்ல முடியும் ஆனால் தீண்டப்

படாதவர்கள் விஷயத்தில் இது சாத்தியமல்ல. உண்மையில், ஓர் அடிமையைக் கொன்றால் தண்டனை கிடைக்காது என்று சொல்ல முடியாது. ஒரு சுதந்திர மனிதனின் மரணத்தில் சட்டம் எந்த நடவடிக்கைகளை எடுக்கிறதோ அது போலவே அடிமையின் கொலையையும் குற்றம் சாட்டப்படவேண்டிய கொலையாகவே சட்டம் அங்கீகரிக்கிறது. ஓர் அடிமையின் நிலைமையைச் சட்டத்தின் பார்வையில் பார்த்தால் அடிமையின் நிலைமைக்கும் தீண்டப்படாதவனின் நிலைமைக்கும் உள்ள வேற்றுமை தெள்ளத் தெளிவாகத் தெரியும் அதாவது அடிமையின் நிலைமை தீண்டப்படாதவரின் நிலைமையை விடக் கொடூரமானதுதான்.

இருப்பினும் ஓர் அடிமை என்பவன் யார் என்பதை விளக்க மேலும் ஒரு வழி இருக்கிறது இது வழக்கமான முறை அல்ல என்றாலும் இது சட்டரீதியானதும் துல்லியமானதும் ஆகும் ஓர் அடிமையைப்பற்றி விளக்குவதற்கான மாற்றுவழி இதுதான். சட்டத்தின் பார்வையில் அடிமை என்பவன் ஒரு நபர் என்று கருதப்படாத மனிதன் ஆவான் இந்த மாதிரி ஓர் அடிமையைப் பற்றி விளக்கம் அளிப்பது சிலருக்குக் குழப்பமாக இருக்கலாம். எனவே சட்டத்தின் பார்வையில் நபர் என்ற சொல் மனிதன் என்ற சொல்லுக்கு இணையானது என்பதைக் குறிப்பிட்டாகவேண்டும். சட்டம் நபர்களாக அங்கீகரிக்காத மனிதர்கள் சட்டத்தில் இருக்கலாம் மாறாகச் சட்டத்தில் மனிதரல்லாத நபர்கள் இருக்க முடியும் நபர் என்ற சொல்லுக்கு சட்டம் அளிக்கும் விளக்கத்தின் விளைவாக இந்த விசித்திர நிலை உருவாகிறது சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு நபர் என்பது உரிமைகளைப் பெறுவதற்கும் கடமைகளைச் செய்வதற்கும் திறன் பெற்ற மனிதரோ மனிதரல்லாத ஒரு ஸ்தூலப் பொருளோ என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. ஓர் அடிமை மனிதனாக இருப்பினும் சட்டத்தின் பாாவையில் அவன் ஒரு நபர் அல்ல. ஒரு சிலை ஜடப் பொருளாக இருப்பினும் சட்டத்தின் பார்வையில் அது நபராகக் கருதப்படுகிறது. இந்த மாறுபட்ட நிலைக்குக் காரணம் தெளிவானதுதான். ஓர் அடிமை மனிதனாக இருந்தாலும் அவன் ஒரு நபர் அல்ல. ஏனெனில் அவனை உரிமைகளைப் பெற, கடமைகள் ஆற்றத் தகுதி பெற்ற ஒரு ஸ்தூலப் பொருளாகச் சட்டம் அங்கீகரிக்கவில்லை. ஆனால் சிலை, மனிதனாக இல்லாவிடினும் ஒரு நபர் என்று சட்டம் அங்கீ

கரிக்கிறது - சரியா தவறா என்பது வேறு விஷயம் - உரிமை மற்றும் கடமைகளுக்கான அதன் திறனை அங்கீகரிக்கிறது. ஒரு நபராக அங்கீகரிக்கப்படுவது பெரும் விளைவுகளைக் கொண்டவிஷய மாகக் கருதப்படுகிறது. இந்தப் பிரச்சினையின்படி ஒருவனுக்கு உரிமை மற்றும் சுதந்திரம் கிடைக்கிறதோ இல்லையோ, நபர் என்ற அங்கீகரிக்கப்படுவதால் பெறப்படும் உரிமைகள் வாழ்க்கை ஆவதுடன் வாழ்க்கை போன்று முக்கியமானதுமாகும். ஜடப் பொருள் மீதான உரிமை, அதைப்பெறுவதற்கான உரிமை, அதை அனுபவிப்பதற்கான உரிமை, அதை விற்பதற்கான உரிமை என்பது சொத்து சம்பந்தமான உரிமைகளாகும். ஜடப்பொருளின் மீதான இந்த உரிமைகளைவிட மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த உரிமைகள் உள்ளன. முதலாவதாக ஒருவனின் சொந்த உடலின் மீதான உரிமை - சரியான சட்ட நடவடிக்கைகள் இல்லாமல், கொல்லப்படாமல், முடமாக்கப்படாமல், காயப்படுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமையை வாழ்க்கைக்கான உரிமை என்கிறோம். சரியான சட்ட நடவடிக்கைகளில்லாமல் சிறையில் அடைக்கப் படாமலிருப்பதற்கான உரிமையைச் சுதந்திரத்துக்கான உரிமை என்கிறோம். இரண்டாவதாக, ஒருவனின் நற்பெயர் சம்பந்தமான உரிமை - பரிகசிக்கப்படுவதிலிருந்தும் மற்ற மனிதர்களின் பார்வை யில் அவன் மதிப்பில் இழப்பு ஏற்படாமல் இருத்தல், அவனுடைய நற்பெயருக்கான உரிமை - மற்றவர்கள் அவன் மீது கொண்டுள்ள நற்பெயருக்குக் கேடு அளிக்காத உரிமை. மூன்றாவது அதி காரங்களையும் சுதந்திர நடவடிக்கைகளையும் தங்கு தடை யின்றி செயல்படுத்தும் உரிமை.[1]

---

1 முக்கியமாக சாதாரண வாசகருககான கடடுரையில உரிமைகள, அதிகாரங்கள, சுதந்திர நடவடிகைகைகள ஆகியவகைகளுககிடையேயான வேற்றுமைகளை விளக்க வேணடியது மிக அவசியமாகும ஒருவருககு ஓர் உரிமை உளளது என்றால, அதன் பொருள், வேறு ஒரு நபருககு அந்த உரிமையை நிறைவேறற வேணடிய கடமை உளளது எனபது ஆகும் அநதக கடமையை நிறைவேறறவேணடும அலலது தவறான செயலாலோ அலலது செயலாறறாமலோ அநத உரிமைககு பாதகம விளைவிககககூடாது

உரிமை எனற சொலலை சுதந்திரம எனற பொருள் உடபட பரந்த பொருளில் உபயோகபபடுத்துவதால உரிமை மறறும சுதநதிரம எனற சொறகளுககிடையேயான வேறுபாடடை மறந்துவிடுகிறோம் உதாரணமாக ஒரு நபருககு உரிமை இருககிறது எனறு கூறுகிறோம அதாவது அவன சுதந்திரமாக தான விருமபும் செயல்களைத் தன்

(தொடர்சசி அடுதத பககம)

எல்லாச் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் எந்த விதத் தடையூறுமின்றி நிறைவேற்றவும், ஒரு நபர் என்ற முறையில் தனக்குரிய எல்லாவிதச் சலுகைகளை அனுபவிக்கவும் ஒவ்வொரு நபருக்கும் உரிமையுள்ளது. இப்படிப்பட்ட உரிமைகளில் ஒரு மனிதன் தன் வாழ்க்கைத் தேவைக்காகத் தேர்ந்தெடுத்துள்ள தொழிலைத் தங்குதடையின்றி நடத்தும் உரிமை மிகவும் குறிப்பிடத்தக்கது. இதேபோல் பொதுப் போக்குவரத்துச் சாலைகள், நீர்வழிப் போக்குவரத்து, பொதுநலச்சேவை மையங்கள் ஆகியவற்றை உபயோகிக்கும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு மனிதர்கள் யாவரையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்ட இயந்திரம் அவனுக்குப் பாதகமாக, விரோதமாக, தீயநோக்கத்துடன் செயல்படாமல் இருக்கும் உரிமை இதனுள் அடங்கும் நான்காவதாக வலுக்கட்டாயத்தினால் மற்றும் மோசடியினால் ஏற்படும் இழப்பிலிருந்து சட்டப் பாதுகாப்புக்கான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. மோசடியான செயல்கள் மூலம் ஒரு நடவடிக்கைக்கு இசைவு தெரிவிக்கத் தூண்டிவிட்டு அதன் மூலம் இழப்பு ஏற்படுத்துவது, விருப்பத்திற்கு எதிராக செயல்பட பலாத்காரமாக ஒருவனைக் கட்டாயப்படுத்துவது ஆகியவைகளிலிருந்து சட்டப் பாதுகாப்புப் பெறவும் அவனுக்கு உரிமை உண்டு. ஐந்தாவதாக, குடும்ப உரிமைகள் என்று கூட்டாக அழைக்கப்படும் ஒரு நபரின் உரிமைகள். இந்தக் குடும்ப உரிமைகளை மணம் சம்பந்தமான உரிமைகள், பெற்றோர் சம்பந்தமான உரிமைகள், பாதுகாப்புச் சம்பந்தமான உரிமைகள் 'டொமினிக்கல்' சம்பந்தமான உரிமைகள் என்று வகைப்படுத்தலாம். வன்முறை மூலமோ ஆசைகாட்டுவதன் மூலமோ மனைவியுடனான கணவ

---

(முனபககத் தொடாச்சி)

விருபபபபடி செயது கொளளலாம் என்ற கருததில் கூறபபடுகிறது ஆனால இநதக கூற்று மற்றவருடைய சுதநதிரத்தில தலையிட ஒரு நபருககு உரிமையிலலை எனபதையும, இதில அவன விருபபப்படி சுதநதிரமாகச செயலபடடுவிடமுடியாது எனபதையும கணககில எடுத்துக்கொளள மறுககிறது

உரிமைககும சுதநதிரத்துககும உளள வேறுபாட்டை இபபடிக் கூறலாம, மறறவர்கள அவனுக்கு செய்யவேணடிய விஷயங்கள சமபந்தமானது ஒருவரின் உரிமைகள ஒருவன தனககே செயதுகொள்ளலாம் எனறு கருதபபடும் விஷயஙகள சமபநதமானது ஒருவனுடைய சுந்திரமாகும

சுதந்திர நடவடிககைகள் சடடததின தடையின்றி ஒருவன எடுககும் நடவடிக்கைகள ஒருவனுடைய சடடரீதியான சுதந்திரம் எனபது அவனுடைய நடவடிககை வரமபுககுள் சடடம் அவனைத தொடாமல விடடுவிடுவதுதான

னுடைய உறவைப் பறிப்பது, தீய நோக்கத்துடன் அவளுடன் நெருக்கம் கொள்வது ஆகியவைகளிலிருந்து பாதுகாப்பு முதலியவை கணவனின் உரிமையான குடும்ப உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன. அமெரிக்காவின் சில பகுதிகளில் இது போன்ற உரிமைகளை மனைவிக்கும் அளித்துள்ளதைக் காண முடிகிறது. குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, அவர்கள் உழைப்பில் கிடைக்கும் பயனை அவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வயதுவரும் வரை நிர்வகிப்பது ஆகியவை பெற்றோர்கள் உரிமை எனப்படும். பாதுகாப்பு (போஷகர்) உரிமை என்பது குழந்தையின் நலனுக்காக காப்பாளராக பெற்றோர் செயல்படும் உரிமையைக் குறிக்கிறது பெற்றோர் காப்பாளர் நிலையை தமது நலனுக்காக பயன்படுத்தக்கூடாது குழந்தைக்கு உலகைப் புரிந்து கொள்வதில் உதவி செய்வதுடன் அவனுடைய உடமைகளை நிர்வகிக்கவும் செய்கிறார். பராமரிப்பில் இருக்கும் சிறாரின் உழைப்பைப் பெறும் உரிமை டோமினிக்கல் உரிமை என்று அழைக்கப்படுகிறது அவனைக் கொல்வதன் மூலமோ, உடலுக்கு ஊறுவிளைவித்து அவனுடய செயல்திறனைக் குறைப்பதன் மூலமோ அல்லது ஆசைகாட்டி தீயவழியில் இட்டுச் செல்வதன் மூலமோ இந்த உரிமைக்கு பாதகம் விளைவிக்கப்படுகிறது

சட்டத்தைப் பொறுத்தவரையில் ஓர் அடிமை ஒரு நபர் என்று கருதப்படாததால் இந்த உரிமைகளில் எதையும் பெறமுடியாது. சட்டத்தின் பார்வையில் தீண்டப்படாதவர் ஒரு நபர் என்றே கருதப்படுகிறார். எனவே ஒரு 'நபருக்கு'' சட்டம் அளிக்கும் இந்த உரிமைகள் எதுவும் தீண்டப்படாதவருக்கு இல்லை என்று கூறமுடியாது சொத்துரிமை, தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, செல்வாக்குக்குக் கேடுவராமல் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, குடும்ப உரிமை, தன் சுதந்திரததையும் அதிகாரத்தையும் தங்கு தடையின்றிப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை ஆகிய எல்லா உரிமைகளும் உள்ளன. ஓர் அடிமையை வெறும் சொத்தாக அங்கீகரிக்கும்போது அல்லது நபராக அங்கீகரிக்கப்படாதபோது தீண்டப்படாதவர்களை விட அவர்கள் நிலை மிகப் பரிதாபகரமாகத்தான் தோன்றும்.

சட்டரீதியாக மட்டும் ஓர் அடிமையின் நிலைமையைப் பார்க்கும்போது இப்படித்தான் தோன்றுகிறது. ரோமானியப்

பேரரசில் மற்றும் அமெரிக்காவில் அடிமையின் உண்மையான நிலை என்ன திரு பாரோவின் அவர்களின் நூலி லிருந்து பின்வரும் பகுதியைப் பார்க்கலாம்.[1]

''இதுவரை குடும்பம் சார்ந்த அடிமைகளின் கொடூர வாழ்க்கை நிலையைப் பார்த்தோம். அதன் மற்றப் பகுதியையும் நாம் பார்க்கத் தவறக்கூடாது பெரும் அளவிலான குடும்பம் சார்ந்த அடிமைகள் இருந்ததாக நூல்கள் தெரிவிக்கின்றன. நிச்சயமாக அது விதிவிலக்காகத்தான் இருந்தது. உண்மையிலே பெரும் அளவிலான அடிமை ஊழியர்கள் இருந்தனர் பொதுவாக அவர்கள் ரோமாபுரியில்தான் காணப்பட்டனர் இத்தாலி மற்றும் மாகாணங்களில் அதிக அளவிலான படாடோபம் தேவைப்படவில்லை. வில்லா என்று அழைக்கப்படும் நாட்டுப்புற மளிகைகளில் ஊழியர்களில் பெரும்பான்மையினர் உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர் நிலம்சாாந்த மற்றும் அதன் உற்பத்திப் பொருள்கள் சம்பந்தப்பட்ட பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். மேஸ்திரிக்கும் அடிமைகளுக்கும் இடையேயான பழைய உறவுகள் தொடர்ந்தன பெரும்பாலும் சக ஊழியர்களில் ஒருவனாகவே அடிமையைக் கருதினர் அடிமைகளின்பால் பிளினி கொண்டிருந்த அன்பும் இரக்கமும் பெயர் பெற்றது. தன்னுடைய அடிமைகள் நோய்வாய்ப்பட்டுள்ளதையும், அவர்கள் மடிவதையும் பற்றி வேதனையுடன் தம் கடிதங்களில் அவர் எழுதியுள்ளார். மற்றவர்களை விட தாம் நேர்மையானவர் என்பதைக்காட்டிக் கொள்ளவோ அல்லது தம் கடிதத்தைப்படிக்கும் எதிர்கால சந்ததியர்கள் பார்வையில் தாம் ஒரு சிறந்த மனிதராகக் காட்சி அளிக்கப்பட வேண்டுமென்பதற்காகவோ அவர் இவ்வாறு எழுதவில்லை. பிளினியின் குடும்பத்தை அடிமைகளின் குடியரசு என்றுதான் கூற வேண்டும் பிளினி தாம் அடிமைகளை நடத்திய விதத்தைப் பற்றி எழுதியுள்ளவை பொதுவாக அல்லது அவவப்போது அடிமைகளை நடத்தப்படும் விதத்தில் இருந்து மிகவும் முற்போக்கானவையாகக் காரணப்படுகின்றன. அடிமைகளின் வாழ்க்கைக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாத

1 ரோமானியப பேரரசில அடிமை முறை, பககஙகள 47 - 49

அளவுக்கு அவை உள்ளன. ஆனால் இந்தக் கண்ணோட்டத்திற்கு ஆதாரமில்லை.

பகட்டுக்காகவும் படாடோபத்திற்காகவும் மற்றும் உண்மையான இலக்கிய ஆர்வத்தினாலும் பணக்காரக் குடும்பங்கள் தங்கள் குடும்ப அடிமைகளை இலக்கியம் மற்றும் கலைகளில் பயிற்றுவித்து வந்தன. ஹோமர், ஹேசியாய்டு மற்றும் ஒன்பது கவிஞர்களின் கவிதைகளை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட பதினோரு அடிமைகள் தன்னிடம் இருக்கின்றனர் என்று செனேகா கூறியதாக கால்விசிசெஸ் சபினஸ் கூறியுள்ளார். ''புத்தக அலமாரிகளுக்கு இதைவிட செலவு குறைவாக இருக்கும்'', என்று ஒரு நண்பர் முரட்டுத்தனமாகக் கூறியபோது, இல்லை, அடிமைகளுக்கு தெரிந்தது எஜமானருக்குத் தெரிந்திருக்கிறது என்பது பதிலாக இருந்தது. இப்படிப்பட்ட அவதூறுகள் ஒருபுறமிருந்தாலும் அச்சுத் தொழில் தோன்றாததால் படித்த அடிமைகளின் தேவை அதிகமாக இருந்தது. வேலைப்பளு மிகுந்த வழக்குரைஞர்கள், கலை ஆர்வமுள்ள கவிஞர்கள், தத்துவவாதிகள், இலக்கிய ஆர்வமுள்ள படித்த மனிதர்கள் ஆகியவர்களுக்கு நகல் எடுப்பவர்கள், கையெழுத்துப் பிரதிகளைப் படித்துக் காட்டுபவர்கள், செயலர்கள் தேவைப்பட்டனர். இப்படிப்பட்டவர்கள் பன்மொழிப் புலமை வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். இருபது வயதில் மாண்ட ஒரு நூலகர் தான் லத்தீன் மொழியிலும் கிரேக்க மொழியிலும் பெரும் புலவர் என்று பெருமைப்பட்டுக் கொண்டார். மற்றவர்கள் கூற எழுதும் எழுத்தர்கள் எங்கும் காணப்பட்டனர். தனியார் மற்றும் பொதுநூலகங்களில் நூலகர்கள் பணிபுரிந்தனர். பேரரசில் சுருக்கெழுத்தில் எழுதும் நடைமுறை சர்வசாதாரணமாக நடைமுறையில் இருந்தது. ஆவணங்கள் எழுதுபவர்களாக அடிமைகள் நியமிக்கப்பட்டனர்.....''

ஸ்னேட்டோனியஸ் தமது சிறப்பு ஆய்வு நூல் ஒன்றில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்ற பல திறமையான ஆய்வாளர்கள், பேச்சாளர்கள், இலக்கண வித்தகர்கள் போன்றோரைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆஸ்டஸின் பேரர்களுக்கு ஆசிரியராக இருந்த வேறியஸ் ப்ளாக்கஸ் மறைந்தபோது அவருக்குச் சிலை வைத்துக் கௌரவித்தனர். ஸ்கிரிபோனியஸ் அப்ரோடிசியஸ் என்பவர்

ஆர்பிலியஸின் அடிமையாகவும் மாணக்கராகவும் இருந்தவர், பின்னாளில் இவர் ஸ்கிரிபெனியாவால் விடுதலை செய்யப்பட்டார். பாலட்டின் நூலகத்தில் ஹைஜினஸ் நூலகராகப் பணியாற்றினார் அவருக்குப்பின் அவர் விடுதலை வாங்கிக்கொடுத்த ஜூலியஸ் மாடெஸ்டஸ் அங்கு பணியாற்றினார். ஓர் அடிமை தத்துவவாதி தன்னுடைய எஜமானரது நண்பர்களின் அடிமைகளுடன் விடுவிக்கப்பட்ட கட்டடக் கலைநிபுணர்களுடனும் வாதம் செய்ய ஊக்கமளிக்கப்பட்டார் என்பதை விடுதலை பெற்ற வரலாற்று ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்கிறோம். விடுதலை பெற்ற பலர் மருத்துவர்களாக பணியாற்றியதை முக்கியமாக தனிப்பட்ட துறையில் நிபுணர்களாக இருந்ததை கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன அவர்கள் பெரிய குடும்பங்களில் அடிமைகளாக பயிற்சிபெற்றுள்ளனர். இது ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலம் தெரியவருகிறது. மனுமிஷனுக்குப் பிறகு அவர்கள் பிரபலமானதுடன் அவர்கள் நோயாளிகளிடம் வசூலித்த உயர்ந்த கட்டணமும் பிரபலமாக இருந்தது ''

''சமுதாயத்தில் சில பகுதியினரின் ரசனையினால் நாட்டியக் கலைஞர்கள், பாடகர்கள், இசைக்கலைஞர்கள், கதம்ப நிகழ்ச்சி கலைஞர்கள், சீட்டாட்ட வல்லுநர்கள், விளையாட்டுப் பயிற்சியாளர்கள் தேவைப்பட்டனர் ஓரளவு புகழ்பெற்ற ஆசிரியர்களிடம் பயிற்சி பெற்ற இவர்களை அடிமை மக்களிடையே காண்கிறோம்.''[1]

★ ★ ★

''வாணிபம் மற்றும் தொழில்துறை வளர்ச்சியின் ஆரம்பமாக அகஸ்டஸின் காலகட்டம் திகழ்ந்தது... அடிமைகள் முன்பும் கலை மற்றும் கைவினைத் துறைகளில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால் வர்த்தகத்தின் திடீர் வளர்ச்சி காரணமாக அதிக அளவிலான எண்ணிக்கையில் அவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர் வர்த்தகத்தின் வளர்ச்சியில்லை என்றால் அது அவசியமில்லாமல் இருந்திருக்கும். ரோமானியர்கள் பல்வேறு வகைப்பட்ட வர்த்தக மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளில் சுதந்திரமாகவும், திறந்த மனத்துடனும் ாடுபட்டனர் எனவே முகவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வர்த்தக நடவடிக்கைகள் பரந்த அளவில்

1 ரோமானியப பேரரசில அடிமை முறை, பககம 63

வளர்ச்சியடைந்ததால், அனேகமாக இந்த முகவர்கள் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அடிமையுடனான உறவுகள் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடன் கூடியவையாக இருந்தன. விடுதலை மற்றும் பணம் ஈட்டும் நோக்கத்துடன் அடிமைகள் பணிபுரிய அவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் அளவுக்கு எஜமானர்கள் நம்பிக்கையுடன் இருக்க முடிந்தது. அதே நேரத்தில் அடிமைகளின் தவறால் நேரும் இழப்பீட்டுக்கு எதிராக உத்தரவாதம் பெறுவதில் எஜமானர்கள் கடுமையாக இருந்தனர். அடிமைக்கும் எஜமானனுக்கும் இடையேயான வாணிப ஒப்பந்தங்களில் மூன்றாவது நபர்களும் பங்குகொண்டனர், இந்த மாதிரி முடிக்கப்பட்ட பணிகளில ஐயத்துக்கு இடமின்றி அதிக லாபம் கிடைத்தது அடிமைகளுக்கு நிலத்தை குத்தகைக்கு கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. தொழில்துறையிலும் இதேமுறை பல்வேறு வடிவங்களில் பின்பற்றப்பட்டது. ஒரு குறிப்பிட்ட தொகை அளிகக வேண்டு மென்ற நிபந்தனையுடன் எஜமானன் ஒரு வட்டிக் கடையை ஒத்திக்குக் கொடுப்பதும் அல்லது ஒரு கப்பலை உபயோகத்திற்காகக் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது; அல்லது அடிமை தான் செய்யும் பணிக்கு தரகு பெறுவதும் வழக்கத்தில் இருந்தது.''[1]

'அடிமையின் வருவாய் சட்டப்படி அடிமையின் சொந்த சொத்தாகிறது இந்தத் தொகை சேமிக்கப்பட்டு பல்வேறு இனங்களுக்காக செலவழிக்கப்பட்டது. பலநேரங்களில் இந்தத் தொகை உணவிற்கும் கேளிக்கைகளுக்கும் செலவழிக்கப்பட்டது இதை ஒரு சிறுசேமிப்பாக, வீணாகச் செலவழிக்கப்படும் ஏதோ ஒரு தற்செயலான வருவாய் என்று எண்ணிவிடக்கூடாது தன்னுடைய எஜமானரின் தொழிலில் லாபம் பெற்றுக் கொடுக்கும் அடிமை தனக்கும் லாபம் பெற்றுக் கொள்வதுடன் தன்னுடைய பணத்தை சிறந்த வழியில் உபயோகிப்பதிலும் திறமை பெற்றிருந்தான். பெரும்பாலும் தன்னுடைய எஜமானின் தொழிலில் மறுமுதலீடு செய்தான் அல்லது முற்றிலும் சம்பந்தமில்லாத தொழில் அமைப்புகளில் முதலீடு செய்தான் எஜமானனிடமிருந்து அடிமையைத் தனி மனிதாக வேறுபடுத்திக் கருதியதால் அவன் தன் எஜமானனுடன் வர்த்தக உறவுகளில் ஈடுபடவும் அல்லது மூன்றாவது நபருடன்

1 ரோமானியப பேரரசில அடிமைமுறை, பககம 101-108

அவன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும் முடிந்தது. அவனுடைய நலன் களையும் சொத்துக்களையும் நிர்வகிக்க அவன் முகவர்களை நிய மிக்கலாம். தனது வருவாய் மூலம் நிலங்கள், வீடுகள் கடைகள் மற்றும் இதர பல உரிமைகளைப் பெறமுடியும்.

'வாணிபத்துறையில் அடிமைகளின் நடவடிக்கைகள் எண் ணில் அடங்காதவை. பலர் கடைக்காரர்களாக இருந்தனர். எல்லா வித உணவுப்பண்டங்கள், ரொட்டி, மாமிசம், உப்பு, மது, காய்கறி, பருப்பு வகைகள், சிலவகை கொட்டைகள், தேன், தயிர், பன்றி இறைச்சி, வாத்துக்கள, மீன்கள் போன்றவற்றில் வியாபாரம் நடத் தினர் மற்றும் சிலர் துணிகள், பாத அணிகள், கவுண்கள், மேல் அங்கிகள் ஆகியவற்றை விற்று வியாபாரம் செய்தனர். ரோம் நகரம், அதன் அண்டைப் பகுதிகளான சர்க்கஸ் மாக்ஸிமஸ், போர்டி கஸ் டிரிகமினஸ், எஸ்குலைன் சந்தை, காவோலியன் குன்றில் இருக் கும் பெரியகடைத்தெரு, மற்றும் சுபர்ரா முதலிய இடங்களில் அவர்கள் தங்கள் வர்த்தகத்தை விரிவுபடுத்தினர்.[1]

பாம்பியில் உள்ள காசிலியஸ் ஜுகுண்டஸ் என்பவரின் இல்லத்தில் காணப்படும் ரசீதுகள், அடிமைச் செயலர்களும், முகவர்களும் தங்கள் எஜமானர்களுக்காக எவ்வளவுதூரம் பணி புரிந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன[2]

ஓர் அரசாங்கம் அடிமைகளை வைத்திருப்பது ஆச்சரியப் படத்தக்க ஒன்றல்ல; போர் என்பது எப்படி இருப்பினும் ஓர் அரசு சம்பந்தப்பட்ட விஷயம். இதனால் போரில் பிடிக்கப்பட்டவர்கள் அரசின் சொத்தாகி விடுகின்றனர். பொது அடிமைகளைப் பேரரசு சிறப்பாகப் பயன்படுத்திய விதமும் அவர்கள் சமூகத்தில் பெற்றி ருந்த சிறப்பிடமும் ஆச்சரியம் அளிக்கின்றன.

''பொது அடிமை என்ற சொற்றொடர் பேரரசுககு முன்பு அரசாங்கத்தின் பல்வேறு அலுவலகங்களில் பணிபுரிந்து வந்த அடிமையைக் குறிப்பிட்டதுடன் அந்தச் சொல் ஒரு குறிப்பிட்ட

1 அதே புததகம பககம 105

2 ரோமானியப பேரரசில அடிமைமுறை, பக்கம 106

பணியையும் சமூக அந்தஸ்தையும் குறிப்பதாகவும் இருந்தது. அரசாங்கத்தின் அடிமைகள், நகராட்சி அடிமைகள், சீசரின் அடிமைகள் ஆகியவர்களின் பணிகள் இன்றைக்கு நடைமுறையிலுள்ள எல்லாப் பிரிவு நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சிப் பணியாளர்களின் பணிகளைப் போன்றிருந்தன. அவர்கள் அறிவுபூர்வமாகவும், உடல் உழைப்பின் மூலமும் பணிபுரிந்தனர். ஏராளமான எண்ணிக்கையில் அடிமைகளும் விடுதலை பெற்றவர்களும் எழுத்தாளர்களாகவும் நிதித்துறை அதிகாரிகளாகவும் கீழ்மட்டத்தில் (கருவூல அலுவலகங்களில்) பணிபுரிந்தனர். அவர்கள் கையாண்ட விஷயங்கள் பரந்த அளவில் இருந்திருக்க வேண்டும். நாணயத் தயாரிப்புச் சாலையில் நேரடியான தலைவராக 'பெருந்தகை'' பட்டம் பெற்றவர் இருந்தார் அவர் நாணயம் செய்யும் பணிக்குப் பொறுப்பாக இருந்தார். அவருக்குக் கீழே விடுதலை பெற்ற ஒருவரும், மற்ற அடிமைகளும், விடுதலை பெற்றவர்களும் பணிபுரிந்தனர். அரசாங்கத்தின் ஒரு பிரிவிலிருந்து மட்டும் திட்டவட்டமாக அடிமைகள் விலக்கப்பட்டிருந்தனர். தவிர்க்க முடியாத நெருக்கடிமிகுந்த ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களைத் தவிர்த்து, அவர்கள் போரில் சண்டையிட அனுமதிக்கப் படவில்லை. ஏனெனில் அவர்கள் போர் வீரர்களுக்கு அளிக்கப் படும் பெருமைகளைப் பெறத்தகுதி படைத்தவர்களல்ல என்று கருதப்பட்டது சந்தேகத்துக்கிடமின்றி வேறு உள்நோக்கங்களும் இருந்தன. ஆயுதங்கள் உபயோகிப்பதற்கான பயிற்சியை ஏராளமான அடிமைகளுக்கு முறையாக அளிப்பதை ஓர் ஆபத்தான பரிசோதனை என்றுதான் கூறவேண்டும். இருப்பினும் போர்முனையில் அடிமைகள் பணிபுரிந்தனர்; போர்முனைக்குப் பின்னே அவர்கள் பணியாட்களாகவும் போக்குவரத்துத் துறையிலும் அதிகமான எண்ணிக்கையில் காணப்பட்டனர். உணவுத் துறையிலும் கப்பற்படையிலும் அடிமைகள் சாதாரணமாகக் காணப்பட்டனர்.''[1]

ரோமானிய சமுதாயத்தில் ஓர் அடிமையின் உண்மையான நிலைமை இதுதான். சட்டத்தின் முன் அமெரிக்க நீக்ரோக்கள் அடிமையாகக் கருதப்பட்டபோது அவர்களது உண்மையான நிலைமை எப்படியிருந்தது என்பதை இப்போது பார்க்கலாம்.

---

1 ரோமானியப பேரரசில அடிமைமுறை, 130 - 147

அவனுடைய நிலைமையைக் குறித்து விளக்கம் தரும் சில நிகழ்ச்சிகளை[1] இங்கு காணலாம்.

''புரட்சியின் போது கறுப்பு இன மற்றும் வெள்ளை இன கடற்படை வீரர்களும் மற்றும் படைவீரர்களும் எந்தவிதக் கசப்புணர்ச்சியுமின்றி ஒன்றாக உணவருந்தி இணைந்து போராடினார்கள் என்பதை லபாயெட்டே என்பவர் கண்டறிந்துள்ளார். வடகரோலினாவிலுள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற முழுக்க முழுக்க நீக்ரோவான ஜான் சாவிஸ் வெள்ளை மாணவர்களுக்காக தனியார் பள்ளி ஒன்றை நடத்தி வந்தார் உள்ளூர் பிரெஸ்பைட்டரியில் பிரசாரப் பயிற்சி பெற்ற அவர் அந்த மாகாணத்தில் நடைபெற்ற வெள்ளையர்களின் பிரார்த்தனைக் கூட்டங்களில் மதபோதனை நிகழ்த்தினார். அவருடைய மாணவர்களில் ஒருவர் வடகரோலினாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்; மற்றொரு மாணவர் மாகாணத்தின் புகழ்பெற்ற வெள்ளை செனட்டர் ஆனார். வட கரோலினாவின் தலைமை நீதிபதியின் இரு மகன்களும் அவரது மாணவர்களாக இருந்தனர். அம்மாகாணத்தின் பெரிய ராணுவக் கழகத்தை நிறுவியவரின் தந்தையார் அவருடைய பள்ளியில் படித்ததுடன், அவர் வீட்டில் தங்கி உணவு உட்கொண்டு படித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடிமைத் தொழிலாளர்கள் எல்லாவிதப் பணிகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டனர். அதில் அதிக புத்திசாலி நீக்ரோக்கள் தொழில் நிபுணர்களாக பயிற்சி அளிக்கப்பட்டு பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அடமானத்துக்கும் அளிக்கப்பட்டனர். சந்தை நிலவரப்படி ஒரு சாதாரண தொழில்நிபுணரை விட அடிமைத் தொழில் நிபுணர் இருமடங்கு வருவாய் கொண்டுவந்தார் தலைமைத் தொழில்நிபுணர்கள், சொந்தமாகப் பணியாட்களைக கொண்டிருந்தனர். சில தலைமைத் தொழில்நிபுணர்கள் நிலைமை சிக்கலாகத் தொடங்கியபொழுது தங்களுடைய அடிமைத் தொழில் நிபுணர்களுக்கு அடிமைகளை வாடகைக்கு விட்டனர். பல அடிமை தொழில்நிபுணர்கள் சாதாரணத் தொழிலாளர்கள் எதிர்பார்த்ததை விட அதிகம் பெற்ற ஊதியத்தில் சேமித்துவைத்து தங்கள் சுதந்திரத்தை வாங்கினர்.''

---

1 சாாலஸ சி ஜானசனின அமெரிகக நாகரிகததில நீகரோக்கள

தப்பி ஓடிய அடிமைகள் பற்றிய விளம்பரங்களும் அவர்களது விற்பனை பற்றிய விளம்பரங்களும் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றன. ஏனைய ஏழை வெள்ளைத் தொழிலாளர்களைப் போல சமமான அல்லது அதிகமான ஊதியத்தை அவர்கள் பெற்றனர். எஜமானரின் செல்வாக்கால் அவர்களுக்கு நல்ல வேலைகளும் கிடைத்தன. 1838 ஆம் ஆண்டு ஜார்ஜியாவைச் சேர்ந்த ஏதென்ஸ் நகரிலுள்ள கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் தச்சர்களின் வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் நீக்ரோத் தொழிலாளர்களுக்குப் பணியில் முன்னுரிமை கொடுக்கக்கூடாது என்று விண்ணப்பித்தனர். ''இந்த நாட்டின், மாகாணத்தின் உண்மையான சட்டரீதியான சிவில் உடைமையாளர்கள் வெள்ளையர்கள்தான். உலகம் உருண்டை என்று சுட்டிக்காட்டிய வெள்ளைக்காரர்கள் கலிலியோ மற்றும் கோப்பர்நிகஸ் போன்றோர் ஆராய்ச்சியில் இறங்கிய நாட்களிலிருந்து, நாம் உரிமையாளர்களாக ஆகிவிட்டோம். உலகம் உருண்டை என்ற கண்டுபிடிப்பு மற்றொரு வெள்ளையரான கொலம்பசுக்கு நாடுகளைத் தேடி மேற்கு நோக்கிக் கடல்பயணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை அளித்தது. எனவே வெள்ளையர்களினால் மட்டுமே இந்தக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிப்பட்ட வெள்ளையர்களுக்கு அவர்களுடைய வேலையைப் பறித்துக் கொண்டதன் மூலம் வறுமையால் வாடும் குடும்பங்களுக்கு ரொட்டியோ ஆடையோ கொடுக்க மறுக்கிறீர்கள். இந்த பேரத்தில் நீங்கள் நீக்ரோக்களுக்கு ஆதரவாகப் பேசுகிறீர்கள்.'' மற்ற பகுதிகளில் வாழும் எஜமானர்களின் நீக்ரோ தொழில்நிபுணர்களிடமிருந்து பாதுகாப்பு வேண்டுமென்று வெள்ளையர்களான இரண்டு தொழிலாளர்கள் மற்றும் மெக்கானிக்குகள் 1858ல் அட்லாண்டாவில் விண்ணப்பம் ஒன்றை அனுப்பினர். ஒரு நீக்ரோ பல் வைத்தியர் தஙகளிடையே இருந்துகொண்டு வைத்தியம் செய்வதை நகர மன்றம் சகித்துக்கொண்டிருக்கிறது என்று வெள்ளைக்குடிமக்கள் தங்கள் அதிருப்தியை அடுத்தவருடம் தெரிவித்தனர் ''நமது சமூகத்துக்கும் நமக்கும் இது அவமானம். அட்லாண்டா நகர மக்களாகிய நாங்கள் நியாயம் கோருகிறோம் '' 1819 ஆம் ஆண்டில் ஜார்ஜியாவிலுள்ள ரிச்மொண்ட் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் சுதந்திர நீக்ரோக்களில் தச்சர்கள், சிகை அலங்காரப் பணியாளர்கள், படகில் பணிபுரிபவர்கள், சேணம் செய்பவர்கள, மரம் அறுக்கும் தொழிற்சாலைப் பணியாளர்கள், நீராவிப்படகு ஓட்டுநர்கள் என்று பல தொழில்

களைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். அமெரிக்க ஜனாதிபதி மன்ரோ பதவி ஏற்றபோது ஒரு நீக்ரோ செய்த காலணிகளை அணிந்திருந் தார் மாண்டிசெல்லோவிலுள்ள தாமஸ் ஜெபர்ஸனது இல்லத் தின் நிலத்தளத்தில் நீக்ரோக் கலைஞரின் சிறந்த கைவேலைப் பாட்டைக் கண்டு ஹரியட் மார்டினோ வியந்து பாராட்டியுள்ளார். பழைய தேயிலைத் தோட்டங்களிலுள்ள பெரிய வீடுகளில் நீக்ரோ கைவினைஞர்களது கைவண்ணத்தின் முத்திரைகளை இன்றும் காண முடிகிறது. அசல் ஓக் மரத்தின் கட்டைகளைக் கொண்டு மரச் சக்கை களால் சேர்த்திணைக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்தன அந்தக் கம்பீர மான மாளிகைகள் நூற்பதிலும் நெய்வதிலும் திறமைசாலிகளான நீக்ரோ மகளிர் ஆலைகளில் பணிபுரிந்தனர். 1839ல் ஏதேன்சில் ஜார்ஜியா போன்ற இடங்களில் வெள்ளைக்காரப் பெண்களுடன் எந்தவித வெறுப்புணர்வோ எதிர்ப்போ இன்றி அவர்கள் இணைந்து பணிபுரிவதைப் பக்கிங்காம் கண்டிருக்கிறார்.

தென்பகுதியிலுள்ள நீக்ரோ கைவினைஞர்கள், அடிமைகள், விடுதலை பெற்றவர்கள் வடபகுதியிலுள்ள தங்கள் சகோதரர்களை விடச் சிறப்பாக வாழ்ந்தனர். 1856ல் பிலடெல்பியாவில் பதிவு செய்யப்பட்டிருந்த 1637 நீக்ரோக்களில், அங்கு நிலவிவந்த எதிர்ப்பு உணர்ச்சிகளால் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறைந்தவர்களே தங்க ளுடைய தொழிலைச் செய்ய முடிந்தது. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அயர்லாந்து மக்கள் அமெரிக்காவில் அதிக அளவில் குடியேற ஆரம்பித்தனர் நீக்ரோ அடிமைகளைப் போல அவர் களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. அவர்களுக்கு சாதகமாக இப்படிக் கூறப்பட்டது 'ஒரு அயர்லாந்து கத்தோலிக்கர் எந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தாரோ அதைவிட உயர்ந்த நிலைக்குச் செல்ல ஒருபோதும் முயன்றதில்லை ஆனால் அதே நேரத்தில் நீக்ரோ உயரே செல்ல முயற்சி செய்வதுடன் வெற்றியும் அடைந்து விடுகிறான். நீக்ரோ வர்த்தகம் நடந்து கொண்டிருந்தபோது வய தான ஆலிவர் கிராம்வெல் மடரோகெடா படுகொலையில் தப்பிய அயர்லாந்துக்காரர்களைப் பார்படோசுக்கு விற்கவில்லையா? நியூயார்க் மற்றும் பென்சில்வேனியாவிலுள்ள சுதந்திர மற்றும் அகதிகளான நிக்ரோக்கள் இந்தக் குழுவுடன் எப்பொழுதும் மோதல் பாதையில் இருந்தனர் நியூயார்க்கில் படைக்கு ஆள்சேர்க்கும்போது நடந்த கலகத்தில் இது நன்றாக வெளிப்பட்டது. இந்த அயர்லாந்துக்

காரர்கள் சுமைதூக்கும் வேலைகளையும் சாதாரண எடுபிடி வேலைகளையும் அவர்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். தங்களுடைய வாழ்வுக்கு ஆதாரமாக இருந்த இந்தத் தொழில்களில் நீக்ரோக்களின் தலையீட்டை பெரும் அபாயமாகக் கருதினர்.''

ரோமானிய மற்றும் அமெரிக்க நீக்ரோ அடிமைகளின் உண்மையான நிலை இதுதான். ரோமானிய அடிமை மற்றும் அமெரிக்க நீக்ரோ அடிமைகளின் நிலையுடன் இந்தியத் தீண்டப் படாதவர்களின் நிலையை ஒப்புநோக்க ஏதாவது இருக்கிறதா? ரோமானியப் பேரரசின் கீழ் அடிமைகள் இருந்த நிலைமையை அதே காலத்தில் தீண்டப்படாதவர்களின் நிலைமையுடன் ஒப்பிடுவது சரியானது அல்ல என்று சொல்லமுடியாது. ஆனால் ரோமானியப் பேரரசில் இருந்த அடிமைகளின் நிலைமையை இன்றைய நாட்களில் உள்ள தீண்டப்படாதவர்களின் நிலைமையுடன் ஒப்பிட நான் தயாராக உள்ளேன். ஒரு பக்கத்தில் மிக மோசமான நிலையும், மற்றொரு பக்கத்தில் தீண்டப்படாதவர்களின் பொற்காலம் என்று கருதப்படும் நிலைகளுக்கிடையேயான ஒப்பீடாகும். ரோமாபுரியில் இருந்ததுபோல் எத்தனை தீண்டப்படாதவர்கள் நூலகர்களாக, பிறர் கூறக்கேட்டு எழுதுபவர்களாக, சுருக்கெழுத்தர்களாக பணியாற்றுகின்றனர்? ரோமாபுரியிலுள்ள அடிமைகளைப் போல எத்தனை தீண்டப்படாதவர்கள் சிறந்த பேச்சாளர்களாக, இலக்கண ஆசான்களாக, தத்துவவாதிகளாக, ஆசிரியர்களாக, மருத்துவர்களாக மற்றும் கலைஞர்கள் போன்ற அறிவுபூர்வமான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்? ரோமாபுரி அடிமைகளைப் போல எத்தனை தீண்டப்படாதவர்கள் வர்த்தகம், வியாபாரம், தொழில்துறையில் ஈடுபட்டிருக்கின்றனர்? நீக்ரோக்கள் அடிமைகளாக இருந்தபோது அவர்கள் இருந்த நிலையை ஒரு தீண்டப்படாதவனின் நிலையுடன் ஒப்புநோக்கினால் அவன் எந்த விதத்திலும் சிறப்பாக இருந்ததாகக் கூறமுடியாது. தீண்டப்படாதவர்கள் கைவினைக்கலைஞர்களாக இருந்ததாக ஏதாவது உதாரணம் இருக்கிறதா? தீண்டப்படாதவன் பள்ளிநடத்தி அதில் பிராமண மாணவர்கள் அவனது காலடியில் அமர்ந்து கல்வி கற்றதாக ஏதாவது உதாரணம் இருக்கிறதா? ஏன், இது நினைத்துக்கூட பார்க்க முடியாதது. ஆனால் இது அமெரிக்காவில் நடந்துள்ளது. ரோமானிய அடிமை மற்றும் அமெரிக்க நீக்ரோவின்

உண்மையான நிலையை ஒப்பிடுதற்குத் தீண்டப்படாதவர்களின் பொற்காலம் என்று கருதப்படும் தற்காலத்தையே அடிப்படையாக வேண்டுமென்றே எடுத்துக் கொண்டிருக்கிறேன் நவீனகால தீண்டப் படாதவர்களின் நிலைமையை ஒப்பிட்டால் கூட வரலாற்று ஆசிரியர்கள் காட்டுமிராண்டித்தனமான காலம் என்று அழைக்கும் காலத்துடன் ஒப்பிட்டால்கூட தீண்டப்படாதவர்களை வீழ்ச்சி யடைந்த வகுப்பினர் என்றுதான் கூறவேண்டும். எனவே அடிமை களைவிட மிகக் கொடூரமான நிலையில் உள்ளனர் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இருக்க முடியாது. மனித வளர்ச்சிக்கு அடிமைத் தனத்தைவிட தீண்டாமை மிகக்கெடுதலானது என்பதே இதன் பொருளாகும். இப்படிக் கூறுவதில் ஒரு குழப்பம் இருக்கிறது சட்டப்படி தீண்டப்படாதவர்களை விட மிக மோசமான நிலைமை யிலுள்ள அடிமைமக்கள், யதார்த்தத்தில் நன்றாக இருந்தனர். சட்டப் படி அடிமைகளை விட சிறப்பாக இருந்த தீண்டப்படாதவர்கள் யதார்த்தத்தில் மோசமான நிலையில் இருந்தனர். இந்தக் குழப்பமான நிலைக்கு விளக்கம் என்ன? கேள்விகளுக்கெல்லாம் முக்கியமான கேள்வி இதுதான். சட்டப்படி சுதந்திரம் கடுமையாக மறுக்கப் பட்ட போதிலும் ஒரு நீக்ரோ அதை வெற்றி கண்டு வளர்ச்சி பெறவும் செழிப்படையவும் உதவியது எது? தீண்டப்படாதவர் களுக்கு சட்டப்படி கொடுக்கப்பட்ட சுதந்திரத்தைப் பறித்தது எது? அவர்களது வாழ்க்கையின் உயிர் சக்தியை உறிஞ்சி அவர் களுடைய வளர்ச்சிக்கு தடையாக இருந்தது எது?

இந்தக் குழப்பத்தை விளக்குவது எளிதானதுதான் சட்டத் துக்கும் பொதுமக்களின் கருத்துகளுக்குமான உறவினைத் தெரிந்து கொண்டால் இதைப் புரிந்துகொள்வது எளிது. ஒரு மனிதனின் நடத்தையை நிர்ணயிப்பது சட்டமும், பொதுமக்களின் கருத்து மாகும். அவை தனிப்பட்டமுறையில் செயல்படுவதுடன் பரஸ்பரம் ஒன்றின்மீது மற்றொன்று பாதிப்பை ஏற்படுத்துகினறன சில சம யங்களில் சட்டம், மக்கள் கருத்துகளை விட வலிமை பெற்று முன்னுக்குச்சென்று அதைத் தடுத்து தனக்குச் சரி என்று தோன்றும் வழியில் அதை நடத்திச் செல்கிறது சிலசமயம் சட்டத்தை விட மக்கள் கருத்து வலிமை பெற்றிருக்கிறது; சட்டத்தின் கடுமையைக் குறைப்பதுடன் அதை வலுவிழக்கச் செய்கிறது. சில சமயங்களில் சட்டமும் பொதுமக்கள் கருத்தும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக

மோதுவதைப் பார்க்கிறோம். சில சமயங்களில் பொதுமக்கள் கருத்து பலம்பெற்று சட்ட வழிமுறைகளை ஒதுக்கித்தள்ளி அவற்றைச் செய லற்றவையாகவும் ஆக்கிவிடுகிறது. வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் வளர்ச்சிக்காக தோன்றிய கட்டாயத்தினாலோ, அல்லது அடிமைகளை மிகவும் லாபகரமாக சிறந்தமுறையில் உபயோகப் படுத்தவேண்டும் என்ற சுயநலத்தினாலோ அல்லது மனிதாபிமான நோக்கத்தினாலோ ரோமாபுரியிலும் அமெரிக்காவிலும் பொது மக்கள் கருத்தும் சட்டமும் அடிமையின் நிலைமையைப் பொருத்த வரையில் ஒரே சுருதியில் இயங்கவில்லை சட்டத்தின் பார்வை யில் இரண்டு இடங்களிலும் சட்டப்படி அடிமை ஒரு நபர் அல்ல ஆனால் இரண்டு இடங்களிலும் ஒரு மனிதன் என்ற நிலை யில், ஒரு நபராக சமூகத்தின் பார்வையில் இருந்தான். அதை வேறுவிதமாகக் கூறுவதென்றால் சட்டத்தால் மறுக்கப்பட்ட ஆளுமையை அடிமைக்கு சமூகம் அளித்தது இங்கேதான் அடிமைத் தனத்திற்கும் தீண்டாமைக்கும் உள்ள ஆழமான வேறுபாட்டைக் காணமுடிகிறது. தீண்டப்படாதவர்களைப் பொருத்தவரையில் இதற்கு நேர்மாறாக நடைபெற்றுள்ளது. சட்டப்படி தீண்டப்படாத வர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஆளுமை சமூகத்தால் மறுக்கப்பட் டுள்ளது. அடிமையைப் பொருத்தவரையில் சட்டம் அவனை ஒரு நபராக ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் அது அவனுக்கு எந்தத் தீங்கும் செய்யமுடியவில்லை. ஏனெனில் சமூகம் அதனிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதை விட அவனைத் தாரளமாக அங்கீகரித் திருந்தது. தீண்டப்படாதவர்களைப் பொருத்தவரையில் அவனைச் சட்டம் ஒரு நபராக அங்கீகரித்திருந்த போதிலும் அவனுக்கு எந்த வித நன்மையையும் செய்யத் தவறிவிட்டது. ஏனெனில் இந்து சமூகம் அவனை அங்கீகரிக்கக்கூடாது என்பதில் தீர்மானமாக இருந்தது. சட்டத்தின் ஆதிக்கம் எப்படியிருப்பினும் ஓர் அடிமைக்கு ஆளுமை இருந்தது ஆனால் சட்டத்தின் ஆதரவு இருந்தும் தீண்டப் படாதவனுக்கு ஆளுமையில்லை. இந்த வேறுபாடு அடிப்படை யானது. சட்டத்தளைகளினால் பிணைக்கப்பட்டு இருந்தாலும் அடிமையின் சமூகரீதியான உயர்வும், சட்டரீதியாக சுதந்திரம் அளிக்கப்பட்டாலும் தீண்டப்படாதவர்களின் சமூகத் தாழ்வு நிலை யும் இந்த முரண்பாட்டை விளக்க முடியும்.

அடிமைத்தனத்தை கண்டனம் செய்பவர்கள் சந்தேகத்துக் கிடமின்றி ஓர் உண்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள மறந்து

விடுகிறார்கள். ஒருவிதத்தில் அடிமைத்தனத்தில் வாணிபம், கைவினைத் தொழில், கலை ஆகிய துறைகளில் அடிமைகளின் பணி கட்டாயமாக இருந்தாலும் அது ஒரு பயிற்சிப்பள்ளியாக விளங்கியது. இழந்த சுதந்திரத்துக்கு ஈடுகட்ட எதுவுமில்லாத வரம்புமீறிய அடிமைத்தனம் கண்டிப்பாக கண்டனத்துக்குரியதுதான். ஆனால் சுதந்திரத்துடனான காட்டுமிராண்டித்தனத்தை விட நிச்சயமாக ஒரு மனிதனை அடிமையாக்கிப் பயிற்சிஅளிப்பது சிறந்ததுதான். பாதிகாட்டுமிராண்டித்தனத்திற்கு நாகரிகத்தை மாற்றாகக் அடைவதே அடிமைத்தனம். ஒரு தெளிவற்ற பரிசுதான். ஆனால் அது உண்மையானது. நாகரிக வாழ்வின் முழுமையான வாய்ப்புகளைச் சுதந்திரமான வாழ்வில மட்டுந்தான் முழுவதுமாகப் பயன்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை எனினும் அடிமைத்தனம் ஒரு பயிற்சிப் பள்ளியாக இருந்தது, அதாவது பேராசிரியர் மைரசின் கூற்றுப்படி உயர்வான பண்பாட்டிற்கு தீட்சை பெறும்நிலை அது.''

அடிமைத்தனத்தைப்பற்றிய இந்தக் கண்ணோட்டம் ஒரு சரியான முதல்தரமான கண்ணோட்டந்தான். இந்தப் பயிற்சி, இந்தப் பண்பாட்டுத் தீட்சை அடிமைக்கு நிச்சயமாக பெருத்த உதவியாக இருந்தது. அடிமைக்குப் பயிற்சி அளிப்பதற்கும் பண்பாட்டுச் சூழலில் அவனை வழிநடத்திச் செல்வதற்கும் ஓர் எஜமானனுக்கு அதிகச் செலவு பிடிக்கிறது ''அடிமைத்தனம் நிலைகொள்ளுவதற்கு முன்பு படித்த அல்லது பயிற்சிபெற்ற அடிமைகள் கிடைப்பது அரிதாக இருந்தது. இதற்கு மாற்றுவழி ஓரளவுக்கு இளம் அடிமைகளை வீட்டுவேலைகளில் அல்லது திறமைவாய்ந்த கைத்தொழில்களில் பயிற்சி அளிப்பதுதான். இதைத்தான் கேட்டோ பேரரசு விஷயத்தில் முன்பு செயல்படுத்தினார். தங்கள் எஜமானர்களிடமும் அடிமைகள் பயிற்சிபெற்றனர். இதற்காக செல்வந்தர் குடும்பங்களில் சிறப்புப் பயிற்சித் திட்டம் இருந்தது. தொழில், வாணிபம், கலைகள், கல்விஅறிவு போன்ற பலப் பிரிவுகளில் இந்தப் பயிற்சிகள் நடைபெற்றன.

உயர் கலாசாரம் அடிமைக்கு ஏன் பரிச்சயம் செய்யப்பட்டது? ஆனால் அதேசமயம் தீண்டப்படாதவர்கள் மட்டும் ஏன் ஒதுக்கி வைக்கப்பட்டனர்? இது மிகவும் பொருத்தமான கேள்விதான். இந்தக் கேள்வியை ஏன் நான் எழுப்பினேன் என்றால், இந்தக் கேள்விக்

கான பதில் ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவை உறுதிப்படுத்து கிறது என்பதால்தான்; அதாவது தீண்டாமை அடிமைத்தனத்தை விட மோசமானது என்பதுதான் அந்தமுடிவு. ஏனென்றால் ஓர் அடிமைக்கு ஆளுமை இருந்தது; ஆனால் தீண்டப்படாதவருக்கு அது கிடையாது.

ஓர் எஜமானன் தனது அடிமைக்குச் சிறப்பான உழைப்புப் பயிற்சியும், பண்பாட்டுப் பயிற்சியும் அளித்ததற்கான காரணம் சந்தேகத்துக்கு இடமின்றி லாபநோக்கந்தான். பயிற்சி பெறாத அடிமையைவிட பயிற்சிபெற்ற அடிமை வர்த்தகப் பொருள் என்ற முறையில் பார்த்தால் மதிப்புமிக்கவன். விற்கப்பட்டால் அவனால் அதிகம் பணம் கிடைக்கும். வேலைக்கு அனுப்பினால் அதிகம் ஊதியம் கொண்டு வருவான் எனவே தன்னுடைய அடிமைக்குப் பயிற்சி அளிப்பது எஜமானனுக்கு ஒரு முதலீடுதான் ஓர் அடிமை யின் உயர்வுக்கும், தீண்டப்படாதவரின் தாழ்வுக்கும் இதுமட்டுந் தான் காரணம் என்று கூறமுடியாது. ஓர் அடிமையின் கைகளி லிருந்து காய்கறிகள், பால், வெண்ணெய், தண்ணீர் அல்லது மதுபானம் வாங்குவதை ரோமானிய சமுதாயம் ஒருவேளை தடை செய்திருந்தால் அடிமைகள் தங்களைத் தொடுவதற்கு, தங்களுடைய வீட்டிற்குள் வருவதற்கு, ஊர்திகளில் தங்களுடன் பிரயாணம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தால், ஓர் எஜமானனால் ஓர் அடிமைக்குப் பயிற்சி அளித்து அரைகுறை காட்டுமிராண்டித் தனத்திலிருந்து ஒரு பண்பாட்டு நிலைக்கு அவனை உயர்த்தியிருக்க முடியுமா? இல்லை என்பது தெள்ளத்தெளிவு. ஏனென்றால் ஓர் அடிமைக்கு -எஜமான் பயிற்சி அளிக்கவும் அவனை வளர்ச்சிப் பெறச் செய்யவும் முடிந்ததன் காரணம் தீண்டப்படாதவர் நிலை யில் அவன் வைக்கப்படவில்லை. எனவே மீண்டும் அதே முடிவுக்கே வருகிறோம்; அதாவது சமூகம் அடிமையின் ஆளுமையை அங்கீ கரித்து அவனைக் காப்பாற்றியது; ஆனால் அதேசமயம் தீண்டப் படாதவனை இந்து சமூகம் அங்கீகரிக்காததுடன் மனித உறவு களுக்கும், பொதுவான நடவடிக்கைளுக்கும் அருகதையற்றவனாக அவனை நடத்தியதும்தான் அவன் சீரழிந்ததற்குக் காரணம்

ரோமாபுரி அடிமை அடிமையாக இருந்தாலும் அவன் தாழ் வாகக் கருதப்படவில்லை அவன் அடிமைத்தளையிருந்தாலும்

மனித உறவுகளுக்கு அருகதையற்றவனாகக் கருதப்படவில்லை; அடிமைகளைப்பற்றிய ரோமாபுரி மதத்தின் அணுகுமுறை இதை நிரூபிக்கிறது.

> '....ரோமாபுரி மதம் அடிமைகளுக்கு எதிராக ஒருபொழுதும் இருந்தது கிடையாது. அவர்களுடைய தேவாலயங்களின் கதவுகளை அவனுக்கெதிராக அடைக்கவில்லை அங்கு நடைபெற்ற விழாக்களிலிருந்து அவனை ஒதுக்கி வைத்து விடவில்லை. சில மதச் சடங்குகளிலிருந்து அடிமைகள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். இதே போன்றுதான் விடுதலை பெற்ற சுதந்திர மனிதர்களும் பெண்களும் கூட ''போனாடேிய 'வேஸ்தா, ஸேரெஸ்'' போன்ற சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். ஆரா மாக்ஸிமாவில் ஹெர்குலிஸ் விழாவிலிருந்து பெண்கள் விலக்கப்பட்டனர். எதற்காகவாவது ரோமானியக் கடவுள்களை வேண்டிக்கொள்ளும் நாட்களில் குடும்பத்தின் ஓர் உறுப்பினனாக அடிமையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டான். அந்தக் குடும்ப தெய்வத்தின் பாதுகாப்பு அவனுக்கு உண்டு என்று கருதப்பட்டது.
>
> வெஸ்தா நகரில், விடுவிக்கப்பட்ட பெண்கள், பூசாரிகளாக ஆவதற்குத் தகுதி பெற்றவர்கள் என்று அகஸ்டஸ் உத்தரவு பிறப்பித்திருந்தார் ஓர் அடிமையின் கல்லறை மற்றவர்களின் கல்லறையைப் போன்று அதே அளவு புனிதத்தன்மையுடையது என்று சட்டம் வலியுறுத்தியது. ரோமானியப் புராணங்களில் அவனது ஆத்மாவுக்குத் தனி சுவர்க்கலோகமோ அல்லது நரகலோகமோ ஏற்பாடு செய்யப்படவில்லை ஓர் அடிமையின் உடலும் ஆத்மாவும் அவனது எஜமானன் உருவாக்கப்பட்டிருந்த அதே பொருளால்தான் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜுவனால் கூட ஒத்துக்கொள்கிறார்.''

## சட்டத்தின் முன் அடிமையின் நிலைமை

ஒரு நபர் என்ற முறையில் அடிமையை எந்தக் களங்கமும் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. ரோமாபுரியில் ஓர் அடிமைக்கும் சமுதாயத்தின் மற்ற பகுதியினருக்கும் இடையே சமுதாய அல்லது சமய விஷயங்களில் எந்தப் பிளவும் இருக்கவில்லை. சுதந்திர

மனிதனோடு ஒப்பிடுகையில் வெளித்தோற்றத்தில் அவன் வேறு பட்டுக் காணப்படவில்லை. அவனுடைய நிறமோ, உடையோ அவனுடைய நிலைமையைப் பறைசாற்றவில்லை. சுதந்திர மனிதர்களைப் போலவே அவனும் விளையாட்டுக்களை ரசித்து மகிழ்ந்தான். நகர வாழ்க்கையில் அவனும் பங்குகொண்டான். அரசுப் பணிகளில் சேவை செய்ததுடன் வாணிபம் மற்றும் தொழில் நடவடிக்கைகளிலும் மற்ற சுதந்திர மனிதர்களைப்போல ஈடுபட்டான். சட்டத்தால் உத்தரவாதமளிக்கப்படும் உரிமைகளை விட பெரும்பாலும் வெளிவாழ்க்கையில் காணப்படும் சமத்துவமே ஒருமனிதனுக்கு முக்கியமாகத் தோன்றுகிறது. அடிமைக்கும், சுதந்திர மனிதனுக்கும் இடையே பெரும்பாலும் சமூகவேலி எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. அடிமைகளுக்கும் விடுதலை பெற்றவர்களுக்கு மிடையே திருமணங்கள் நடப்பது சர்வசாதாரண வழக்கமாக இருந்தது. ஒருவனது அடிமை நிலை சமூகத்தில் அவனுக்கு ஒரு களங்கமாகக் கருதப்படவில்லை. அவன் தீண்டதக்கவனாகவும் மதிப்பிற்குரியவனாகவும் கூட இருந்தான்.

அடிமைத்தனத்தைவிட தீண்டாமை மிகக் கொடுமையானது என்பதைக் காட்ட போதுமான அளவு கூறியாகிவிட்டது. மத்திய காலத்தில் வாழ்ந்த யூதர்களின் நிலை ஒன்றுதான் தீண்டாமையுடன் ஒப்பிடக்கூடியது. யூதர்களின் அடிமைத்தனம் ஓரளவு தீண்டப்படாதவர்களின் நிலையை ஒத்திருந்தது. ஆனால் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். யூதர்களைப் புறக்கணித்ததற்கு ஒரு புரிந்து கொள்ளக்கூடிய அடிப்படை உள்ளது. மத விஷயங்களில் யூதர்களின் வறட்டுப் பிடிவாதமான, நியாயப்படுத்த முடியாத நிலைதான் அது. யூதரல்லாத பிறசமயத்தினரின் மதப்பழக்க வழக்கங்களை அவர்கள் ஏற்க மறுத்தனர். இந்தப் பிடிவாதமே அவர்களது பல துயரங்களுக்கும் காரணமாக இருந்தது. எப்பொழுது அவர்கள் தங்கள் மத சம்பந்தமான பிடிவாதங்களை விட்டுவிட்டார்களோ, அப்பொழுதே அவர்களது துயரமும் மறைந்தது. ஆனால் தீண்டப்படாதவனின் நிலைமை அப்படியல்ல. அவனுடைய துயரத்திற்குக் காரணம் அவன் மத எதிர்ப்பாளனாகவோ அல்லது நடைமுறைக்கு விரோதியாகவோ இருக்கவில்லை. யூதர்கள் சம்பந்தமான இரண்டாவது விஷயம் என்னவென்றால் பிறச் சமயத்தினருடன் தாங்கள் முற்றிலுமாகக் கரைந்துபோய் விடுவதை விட பல துயரங்களை

அனுபவிப்பதை யூதர்கள் பொருட்படுத்தவில்லை. இது விசித்திர மாக இருக்கலாம். ஆனால் இதை நிரூபிக்க சான்றுகள் பல உள்ளன. யூதர்களின் அணுகுமுறையை எடுத்துக்காட்ட வரலாற்றிலிருந்து இரண்டு நிகழ்ச்சிகளைக் கூறலாம் முதல் விஷயம் நெப்போலியன் ஆட்சி சம்பந்தப்பட்டது. யூதர்களுக்கு மனித உரிமைகள் பிரகட னத்தை அளிக்க பிரெஞ்சு தேசிய மன்றம் சம்மதித்தபோது அல்சா சிலுள்ள பிற்போக்காளர்கள் மற்றும் கில்டு வணிகர்கள் மீண்டும் யூதர்கள் பிரச்சினையை எழுப்பினார்கள். இந்தப் பிரச்சினைக்கு யூதர் களே முடிவு கட்டட்டும் என்று நெப்போலியன் முடிவு செய்தார்.

'பெரும்பான்மை மக்களுடன் யூதர்இனத்தை இணைக்க அவர் விரும்பினார். குடிமக்களாக வாழ தேவைப்படும் அடிப் படைகளுக்கு, யூத இனத்தின் கோட்பாடுகள் ஒத்துவருமா என்பதைக் காண பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் யூத பிரமுகர் களின் அவையை அவர் கூட்டினார். 1806 ஆம் ஆண்டு ஜூலை 25ல் பாரிஸ் நகரில் உள்ள நகர மண்டபத்தில் 111 உறுப்பினர் களைக் கொண்ட அந்த அவை கூடியது. யூதர்களின் தேசப்பற்று, யூதர்களுக்கும் யூதரல்லாதவர்களுக்கும் இடையேயான திருமணத்தை அங்கீகரிப்பது, கடும்வட்டிமுறை ஆகிய முக்கிய விஷயங்கள் சம் பந்தமான 12 வினாக்களுக்குப் பதிலளிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர் அவையின் பதிலைக் கண்டு மகிழ்ச்சியடைந்த நெப்போலியன் ஜெருசலத்திலுள்ள பழைய கவுன்சிலின் மாதிரி யில் சன்ஹெத்ரின் எனும் யூதரின் மீயுயர் மன்றத்தைக் கூட்டினார். 1807 பிப்ரவரி 9 ல் ஸ்டார்ஸ்பெர்க் நகர யூதகுரு சின்ஜெயிம் தலைமையில் பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, மற்றும் இத்தாலி யைச் சேர்ந்த 71 உறுப்பினர்களைக் கொண்ட அவை கூடியது. அவர்கள் ஓர் அறிக்கை தயாரித்தனர். அதில் யூதர்கள் பிரான்ஸ் தேசத்தைத் தங்கள் தந்தை நாடாக எண்ணவும், அந்த நாட்டுக் குடி மக்களைத் தங்கள் சகோதரர்களாகக் கருதவும், அதன் மொழியைப் பேசவும், யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடை பெறும் திருமணங்களைச் சகித்துக் கொள்ளவும் வலியுறுத்தப் பட்டது ஆனால் கலப்பு மணங்களை யூதர்களின் ஆன்மிக சபை அங்கீகரிக்காது என்று அறிவித்திருந்தனர். யூதர்களுக்கும் யூத இனத்தைச் சேராதவர்களுக்கும் இடையேயான கலப்புத் திரு மணத்தை யூதர்கள் அனுமதிக்க மறுத்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

இரண்டாவது நிகழ்ச்சி 1795ல் பட்டேவியக் குடியரசு நிறுவப்பட்ட போது நிகழ்ந்தது. துடிதுடிப்புள்ள பல யூத இளைஞர்கள் தங்கள் அவலநிலையை மாற்ற விரும்பினர். முழுக் குடி உரிமையைப் பெற துடிதுடிப்பான யூத இளைஞர்களின் வேண்டுகோளை ஆம்ஸ்டர் டாம் யூத சமுதாயத் தலைவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் எதிர்த் தனர். யூத மதத்தை பாதுகாக்கும் பணிக்கு எதிராக குடியுரிமை சமத் துவம் பயன்படும் என்று அவர்கள் பயந்தனர். தங்களுடைய மதக் கோட்பாடுகளுக்கு பணிந்து குடியுரிமைக் கோரிக்கையைக் கைவிடும் படி தங்களுடைய மதச் சகோதரர்களிடம் கேட்டுக் கொண்டனர். சமுதாயத்தின் உறுப்பினர்களாக இருப்பதை விட அன்னியர்களாக வாழ்வதையே யூதர்கள் விரும்பினர் என்பதையே இதுகாட்டுகிறது. ''காலத்தால் மாற்றமடையாத மக்கள்'' என்ற நிலையில்தான் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர். தீண்டப் படாதவர்களைப் பொறுத்தவரையில் இப்படிக் கூற முடியாது. ஒரு விதத்தில் அவர்களும் ''காலத்தால் மாற்றமடையாத மக்கள்தான்'' அவர்களும் மற்றவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு இருந்தனர். இந்தப் பிரிவினை அவர்கள் விரும்பியதல்ல. அவர்கள் சமுதாயத் துடன் ஒன்றுபடவிரும்பாததால் தண்டிக்கப்படவில்லை. மாறாக அப்படி விரும்பியதால்தான் அவர்கள் தண்டிக்கப்பட்டனர்

அடிமைகளுக்கு சமூகத்தில் ஆளுமை இருந்தது. ஆனால் தீண்டப்படாதவர்களுக்கு ஆளுமையில்லாததால் தீண்டாமையே அடிமைத்தனத்தைவிடக் கொடுமையானது என்பது மிகத் தெளி வாகிவிட்டது தீண்டாமை அடிமைத்தனத்தை விடக் கொடுமை யானது என்பதற்கு இது ஒன்றுமட்டும் காரணமல்ல. வெளியில் தெரியாத வேறு காரணங்களும் உள்ளன.

எப்படியிருப்பினும் இவை உண்மையானவை. இவற்றில் வெளிக்கு அதிகம் தெரியாத ஒன்றைக் குறிப்பிடலாம். அடிமை யின் சுதந்திரத்தை அடிமைத்தனம் பறித்துக்கொண்டாலும் அவ னுடைய உயிரையும் உடலையும் பாதுகாக்கும் கடமையை அது எஜமானனுக்கு அளித்துள்ளது. தனது உணவைப் பற்றி, உடை களைப் பற்றி, குடியிருப்பைப் பற்றி அடிமைக்குக் கவலையில் லாமல் இருந்தது. அவனைப் பராமரிக்கும் செலவைவிட அவன் அதிகம் வருவாய் பெற்றதால் இது ஒரு சுமையாகவே இருக்க

வில்லை. சுதந்திர மனிதர்கள் யாவருக்கும் தங்க இடமும் உண்ண உணவும் எப்பொழுதுமே கிடைக்கும் என்பது சாத்தியமில்லை என்பதை ஊதியத்துக்கு உழைக்கும் தொழிலாளர்கள் யாவரும் அறிவர். உழைப்பதற்குத் தயாராக உள்ள எல்லோருக்கும் வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைக்கவில்லையென்றால உண்ண உணவுகிடைக்காது என்ற நிலையிலிருந்து உழைப்பாளிகள் யாரும் தப்பமுடியாது. வேலையில்லை, உணவில்லை, வியாபாரத்தில் லாப நஷ்டம் போன்ற நெருக்கடிகளினூடே சுதந்திர உழைப்பாளி கள் யாவரும் வாழ்க்கையை நடத்த வேண்டும். ஆனால் அடிமைகள் இவைகளினால் பாதிக்கப்படவில்லை. அதே ரொட்டியைத்தான் அவனும் பெறுகிறான். வளம்கொழிக்கும்காலத்திலும் சரி பஞ்ச காலத்திலும் சரி அந்த ரொட்டி அவனுக்குக் கிடைக்கும். தீண்டாமை அடிமைத்தனத்தைவிட கொடுமையானது. ஏனென்றால் வாழ்க்கை சம்பந்தமான இந்தப் பாதுகாப்பை சமூகம் அளிப்பதில்லை. தீண்டப் படாதவர்களுக்கு உணவளிப்பது, குடியிருப்பு மற்றும் ஆடைகள் கொடுப்பது யாருடைய பொறுப்பும் அல்ல. இந்த நோக்கில் பார்த்தால் அடிமைத்தனத்தை விட தீண்டாமை கொடுமையானது மட்டுமல்ல, நிச்சயமாகக் கொடூரமானதுங்கூட எனலாம். அடிமை முறையில் தன்னுடைய அடிமைக்கு வேலை தேடித்தரும் பொறுப்பு எஜமானர்களுக்கு இருந்தது. சுதந்திரத் தொழிலாளர் அமைப்பு முறையில் வேலை கிடைப்பதற்காக தொழிலாளர் ஒருவருக் கொருவர் போட்டிபோடவேண்டியிருந்தது. இந்த வேலைக்கான போராட்டத்தில் தீண்டப்படாதவர்களுக்கு வாய்ப்புகள் உள் ளனவா? சொல்லப்போனால் இந்தப்போட்டியில் அவனுக்கு எதி ராகவே நிலைமைகள் உள்ளன. அவன் பெற்றுள்ள சமுதாயக் களங் கத்தினால் கடைசியாக வேலைபெற்று முதலில் வேலையிலிருந்து தள்ளப்படுகிறான். தனது வாழ்வை நடத்த வருவாயின்றி வாழ்க் கையை நடத்த வேண்டிய பொறுப்பு தீண்டப்படாதவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதால், அது அடிமைத்தனத்தை விட கொடூர மானதுதான். வேறு ஒரு கோணத்திலும் தீண்டாமை அடிமைத் தனத்தைவிட மோசமானது. ஓர் அடிமை சொத்தாக கருதப்படுவதால் சுதந்திர மனிதனை விட அடிமைக்கு இது ஒரு அனுகூலமாக உள்ளது. அடிமைக்கு ஒரு விலை உள்ளதால் தன்னுடைய சுயநல னுக்காகவாவது எஜமானன் அடிமையின் உடல்நலத்தையும் நல வாழ்வையும் பேணிப் பாதுகாக்க வேண்டியிருந்தது. ரோமாபுரியில்

அடிமைகள் சதுப்பு நிலங்களிலும் மலேரியாப் பகுதிகளிலும் ஒருபொழுதும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை. சுதந்திர மனிதர்களே இந்த மாதிரி நிலங்களில் வேலைக்கு அனுப்பப்பட்டனர். சதுப்பு நிலங்களிலும் மலேரியப் பகுதிகளிலும் அடிமைகளை வேலைக்கு அமர்த்தவேண்டாம் என்று கேட்டோ விவசாயிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார் இது கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கலாம். உற்று நோக்கினால், இது மிகவும் இயற்கையானதே என்று தெரியவரும். அடிமை ஒரு மதிப்புள்ள சொத்து என்பதால் தன் சுயநலனில் அக்கறையுள்ள ஒரு முன்னெச்சரிக்கையான மனிதன் மலேரியாவின் தாக்குதலுக்கு தன் அடிமையை உள்ளாக்க மாட்டான். ஆனால் ஒரு சுதந்திர மனிதனைப் பொறுத்தவரையில் இந்த அளவு அக்கறை தேவையில்லை; ஏனெனில் அவன் ஒரு மதிப்புள்ள சொத்தல்ல. இந்தக் காரணமே அடிமைக்கு அதிகப் பலனை அளித்தது. மற்றவர்களை விட அவனைப் பேணிக்காத்தனர். தீண்டப்படாதவர்களைப் பொறுத்தவரையில் இந்த அக்கறை முற்றிலும் கிடையாது. அவன் கவனிப்பாரற்று ப்ட்டினி கிடந்து சாவதற்கு ஒதுக்கப்பட்டான்

தீண்டாமைக்கும் அடிமைத்தனத்துக்கும் இடையே இரண்டாவது ஏன் மூன்றாவது என்றே கூறத்தக்க வேற்றுமை அடிமைத்தனம் கட்டாயமானதாக இருக்கவில்லை மற்றொருவனைத் தனது அடிமையாக வைத்துக்கொள்ள ஒரு நபருக்கு ''அனுமதி'' அளிக்கப்படுகிறது. அவன் விரும்பவில்லை என்றால் அவனுக்கு அது கட்டாயமில்லை. ஆனால் அதேசமயம் மற்றொருவனைத் தீண்டப்படாதவனாகக் கருத ஒரு இந்துவுக்குக் ''கட்டளை'' இடப்பட்டுள்ளது. இந்துவுக்கு இது கட்டாயமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் அவனது சொந்தக் கருத்து எதுவாக இருப்பினும் அவன் தப்ப முடியாது.

